சங்கச் செவ்வியல் அறிமுகம்

# புறநானூற்றுக் குறும்படங்கள்

பன்முகப்பார்வையில் இலக்கிய விளக்கம்

தமிழன்னல்

சங்கச் செவ்வியல் அறிமுகம்

# புறநானூற்றுக் குறும்படங்கள்

**தமிழண்ணல்**

விற்பனை உரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517

ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

முதற் பதிப்பு : தி வ.ஆண்டு 2040, ஆடி (ஆகஸ்ட், 2009)
உரிமை : உரையாசிரியருக்கு
விலை உருவா : **50.00**

## நூல் விவரம்

நூலின் பெயர் : புறநானூற்றுக் குறும்படங்கள்
உரையாசிரியர் பெயர்: தமிழண்ணல்
முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2009
நூலின் தன்மை : இலக்கிய அறிமுகம்
நூல் அளவு : கிரவுன்
அச்சு எழுத்து அளவு : 10 புள்ளி
பக்கங்கள் : 144
நூலின் விலை : உருவா **50.00**
அச்சிட்டோர் : பரமேஸ்வரி கிராபிக்ஸ், சென்னை.
ஒளி அச்சுக் கோவை : ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை.
வெளியீடு : தமிழ்ப் பயிற்சிக்களம்,
சதாசிவ நகர், மதுரை - 625020.

---

**SELLING RIGHTS**

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971 Resi : 2560517
E-Mail: meenakshiputhakam@hotmail.com

# நூன்முகம்

புறநானூறு தமிழரின் தொன்மைமிக்க வரலாற்றுக் களஞ்சியமாக கருதப்படுகிறது. அகப் பாடல்கள் புலவர்களால் குறிப்பிட்ட மாந்தர்களின் கூற்றுக்களாகப் பாடப்படுவன. புலவர்கள் தம்மையும் தம்மைப் புறந்தந்த புரவலர்களையும் நேரே குறிப்பிட்டுப் பாடியன புறப்பாடல்களே. புறநானூறு கிடைக்காமல் போயிருந்தால் சேர சோழ பாண்டிய வேந்தர்களையும் குறுநில மன்னர்களையும் வள்ளல்களாக விளங்கிய நிலக்கிழார்களையும் பற்றிய பல செய்திகள் அறியப் படாமலே போயிருக்கும். புலவர்களைப் பற்றிய பல வரலாற்று நிகழ்வுகளும் தெரிந்தகொள்ள இயலாதநிலை ஏற்பட்டிருக்கும். போர் நிகழ்வுகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள், தொழில்கள், சிந்தனைக் கருவூலங்கள் எனத் தமிழரின் நாகரிகமும் பண்பாடும் விளக்கமுடியாமல் போயிருக்கும்.

சங்க இலக்கியத்தில், எட்டுத் தொகையுள் புறநானூறும், பதிற்றுப்பத்தும் மட்டுமே புறம் பற்றிய தனி நூல்கள். பதிற்றுப் பத்து சேர மன்னரை மட்டுமே பாடுவது. பரிபாடலில் செவ்வேள், திருமால் பற்றியன கடவுள் வழிபாட்டோடு அமைவன. புறநானூறு ஒன்றே சங்க காலத் தமிழகத்தை, உள்ளது உள்ளவாறே உற்றுநோக்கத் துணையாகின்றது. பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படைகளும் மதுரைக் காஞ்சியும் தமிழரின் புற வாழ்வைச் சித்திரிப்பன.

இன்று கிடைக்கும் 2381 சங்கப்பாடல்களில்1866 பாடல்கள் அகத்திணை பற்றியன; 515 பாடல்கள் புறத்திணை பற்றியன. புறநானூறு கடவுள் வாழ்த்து உட்பட நானூறு பாடல்கள் கொண்டது. இதனைத் தொகுத்தார் தொகுப்பித்தார் யாரெனத் தெரியவில்லை. இதன்கண் பாடிய புலவர்கள் 156. இதற்குப் பழைய உரை முதலிலிருந்து 266 ஆம் பாடல்வரை கிடைத்துள்ளது. உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. 266ஆம் பாடலுக்குப் பிறகு, சில பாடல்களில் அடி சீர் பிற்குறிப்பு ஆகியன ஆங்காங்கு சிதைந்து காணப்படுகின்றன. 267, 268 பாடல் இரண்டும் கிடைக்கவில்லை. 394 பாடல்கள் முழுமையுடையன. மூன்று பாடல்கள் கூடுதல் சிதைவுற்றவை. பாரதம் பாடிய பெருந் தேவனார் சிவபெருமான் மீது பாடிய கடவுள் வாழ்த்து ஒன்று. பாடல்களை விளங்கிக் கொள்ளவும் வரலாற்றை அறியவும் ஒவ்வொரு

பாடலின் கீழே உள்ள அடிக்குறிப்புக்களே முழுவதும் உதவுகின்றன. இதன் திணை துறைப் பகுப்புக்கள் தொல்காப்பியத்தினின்றும் பல இடங்களில் வேறுபடுகின்றன. இடைக்கால புறப்பொருள் வெண்பாமாலையும் பொருந்தி வரவில்லை. பல துறைகள் இவற்றின் வேறுபட்டுள்ளன.

தொல்காப்பியர் புறத்திணையை ஏழாகப் பகுத்தார். பிற்காலத்தார் அதைப் பன்னிரண்டாக்கினர். அவற்றில் உழிஞை தவிர, பதினொரு திணைப்பாடல்கள் இதிலுள. அவைருமாறு;

வெட்சி 5, கரந்தை 12, வஞ்சி 11, காஞ்சி 31, நொச்சி 6, தும்பை 27, வாகை 81, பாடாண் 139, பொதுவியல் 74, கைக்கிளை 3, பெருந்திணை 5 ஆக 394.

புறநானூறு உ.வே.சாமிநாத ஐயர் பதிப்பு சிறப்புடையது. இப்புறப்பாடல்களில் நிரம்பிக் கிடக்கும் வரலாற்றுக் குறிப்புக்கள் சிலவேயாயினும், அக்காலத் தமிழகத்தின் முழுமையையும் அவை கோடிட்டுக் காட்டிவிடுகின்றன.

**இந்திய ஒருமைப் பார்வை**

பி.டி. சீனிவாச ஐயங்கார் 'தமிழ் இந்தியா' என்று குறிப்பிட்டு, ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் தமிழும் அதன் கிளை மொழிகளுமே வழங்கின என்பார். இம் முன்னைய நிலையை நினைப்பூட்டுவன போலச் சங்கப் புலவர்கள் பாடியுள்ளமையைக் காண்கின்றோம்.

முரஞ்சியூர் முடிநாக அரையர் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனைப் பாடும் பொழுது,

அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே (2)

என்று இமயம் முதல் பொதியம் வரை சேர்த்துக் கூறி வாழ்த்துகிறார்.

காரி கிழார் பாடும் பொழுது,

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற்குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும் (6)

முதுகுடுமிப் பெருவழுதி புகழ் பரவியதாக, இந்திய நாட்டிற்கு ஒரு வரைபடம் போட்டுக் காட்டுகிறார். யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறையைக் குறுகோழியூர்கிழார் பாடும் பொழுது, அவனது ஆட்சி,

தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை
குன்றுமலை காடு நாடு
ஒன்றுபட்டு வழிமொழிய (17)

நடந்ததாக, பாரத நாட்டை, கைக்குள் அடக்கிக் காட்டுகிறார். இங்ஙனம் வருவன பலவுள.

**தமிழக அந்தணர்**

கபிலர், பரணர், பாலைக் கௌதமனார், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், தாமப்பல் கண்ணனார் என இவ்வாறு அந்தணப் புலவர்கள் பலர் தூய, நல்ல தமிழர்களாகவே வாழ்ந்துள்ளனர். பார்ப்பனர் என இவர்களைக் குலம் பற்றிக் கூறுமிடங்களும் சிலவுள.

ஆயினும் இவர்கள் தங்கள் அக்கினி வழிபாட்டையும் வேதக் கல்வியையும் வேள்விசெய்தலையும் கைவிட்டிலர் என்று தோன்றுகிறது. தமிழக வேந்தரும் குறுநில மன்னரும் வேள்வி ஆசையில் மூழ்கிக் கிடந்ததையும் காண்கின்றோம். ஆரியவரசன் பிரகத்தனுக்கு தமிழ்ப்பண்பாட்டை அறிவித்தற்கு, குறிஞ்சிப்பாட்டைப் பாடித் தமது தமிழ்மண் பிறப்பு 'வாசனையை' முழுமையாய் வெளிப்படுத்துபவர் கபிலர். அவர் மலையமான் திருமுடிக்காரி என்ற கடையெழு வள்ளல்களில் ஒருவனைப் பாடும் பொழுது, தம் குலத்தைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

கடல்கொளப் படாஅது, உடலுநர் ஊக்கார்
கழல்புனை திருந்தடிக் காரி நின்நாடே,
அழல்புறந் தரூஉம் அந்தணரதுவே (122)

என்பது அவர் பாட்டு. இவ்வாறு காட்டத் தகுவந மேலும் பலவுள.

செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நந்நீர்ப் பஃறுளி மணலினும் பலவே (9)

முதுகுடுமிப் பெருவழுதியின் முன்னோன், நிலந்தருதிருவிற் பாண்டியன். அவனே பஃறுழியாறு பாய்ந்த குமரிக்கண்டத்திருந்து, கடல்கோளுக்குத் தப்பிவந்து, தொல்காப்பியரைப் போற்றியவன். அவன் வயிரியர்க்குப் பரிசு கொடுத்தான். (வயிரியர் - இசைக் குடும்பத்தார். கூத்தர், பாணர், பொருநர், விறலியர் முதலியோர்) குடுமி 'பல் யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி' என அந்தணரை அரவணைத்தான்.

மூவேந்தரையும் ஒருங்கு கண்ட ஔவையார்,

ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து

மகிழ்சிறந்து வாழ வாழ்த்துகிறார் (367). அன்றே பாணர் கூட்டம் வறுமையுற, அவர்கள் இடத்தை இவர்கள் கொண்டமை புலனாகிறது. இன்றும் இந் நுண்கலைகளை இவர்கள் போற்றிவருதல் காண்கிறோம். தமிழர்களில் இக் கலைகள் வல்லார் காலம் செல்லச் செல்லச் சுருங்கி மறைந்து போதலையும் வரலாறு உணர்த்துகிறது.

**நடுகல் வழிபாடு**

தமிழகத்தில் நூற்றுக் கணக்கான நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை தமிழர் நாகரிகத் தொன்மைக்குச் சான்று பகர்வன. புறநானூற்றின் பிற்பகுதியில், 350 ஆம் பாடலுக்குப் பிறகு, பலபாடல்கள் சாதாரணக் குடிமக்களைப் பாடியவையாகும். ஆனிரை கவர்ந்து, வெட்சி கரந்தைப் போர் நடத்தி வாழ்ந்த தொன்மைமிக்க மறவர்களை, மறக் குடியினரை இவை பாடுகின்றன. வேந்தர்களைப் பாடியவை முன்னர்க் கோக்கப்பட்டுள்ளன. இன்றைய ஆராய்ச்சியாளரும் இம் மக்கள் பற்றிய பாடல்களில் கருத்துச் செலுத்துவதில்லை (257, 258, 261, 262, 263, 335 முதலியன). 'கொல்புனல் சிறையின் விலங்கியோன் கல்லைத் தொழுதுபோமின்' (263) ; வீரனுக்கு 'அணி மயிற் பீலி சூட்டி, பெயர் பொறித்து, இனி நட்டனரே கல்லும்' (264); 'பல்ஆன் கோவலர் படலை சூட்ட, கல் ஆயினையே கடுமான் தோன்றல்' (265) என இவ்வாறு வருவன பல. தமிழர்களின் உருவ வழிபாட்டின் வேர் இவை. சிவனியம் மாலியம் கொற்றவை வழிபாடுகள் தமிழர் நாகரிக வளர்ச்சி பற்றியன என்பதை அறிகின்றோம்.

# உள்ளுறை

## குறும்படங்கள்


| வ.எண் | காட்சிப்பொருள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | போரை நிறுத்திய புல்லாற்றூர் எயிற்றியனார் | (213) |
| 2. | சோழவேந்தனின் வாழ்வியற் சிந்தனை | (214) |
| 3. | உணர்ச்சிதான் நட்பாம் கிழமைதரும் | (216) |
| 4. | உணர்ச்சிதான் நட்பாம் கிழமை. பொத்தியார் | (217) |
| 5. | உணர்ச்சிதான் நட்பாம் கிழமை. கண்ணகனார் | (218) |
| 6. | பொத்தியார் | (220) |
| 7. | முதுமையிலும் இளமை | (191) |
| 8. | பொருளியல் வல்லுநர் - வரிவிதிப்பு முறை | (184) |
| 9. | வெள்ளைக்குடி நாகனார் - பழஞ்செய்க்கடன் | (35) |
| 10. | மழைநீர்ச் சேகரிப்பு | (18) |
| 11. | இளமையைத் தேடும் முதுமை | (243) |
| 12. | ஒவ்வொரு நாளும் வாழ்நாள் ஆகுக | (239) |
| 13. | அவலத்தைப் பிழிந்திட்ட சாறு | (242) |
| 14. | அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல் | (50) |
| 15. | ஔவையின் பெருமிதம் | (206) |
| 16. | ஔவையின் அன்புள்ளம் | (101) |
| 17. | அதியனின் ஆற்றலுக்கு ஓர் அளவுகோல் | (87) |
| 18. | தோன்றிற் புகழொடு தோன்றுக | (315) |
| 19. | ஔவையின் தூதுரை | (95) |
| 20. | யார்கொலோ சதுரர் ? | (91) |
| 21. | அவலத்தின் எதிரொலி | (235) |
| 22. | எருக்கம் பூமாலை | (106) |
| 23. | இலக்கியத் திறன் | (107) |
| 24. | பறம்பு மலை | (109) |
| 25. | பொன்கொழிக்கும் பறம்பே போய்வரவா! | (113) |
| 26. | பாரி மகளிர் | (112) |
| 27. | வல்வில் ஓரி | (152) |
| 28. | அறநெறிப் படிகள் | (204) |

| | | |
|---|---|---|
| 29. | புலவர் தந்த பரிசில் | (162) |
| 30. | புலவரின் கொடையுள்ளம் | (163) |
| 31. | பெருஞ்சித்திரனாரின் புலமைப் பெருமிதம் | (208) |
| 32. | கொடைக்குக் குமணன் | (165) |
| 33. | சந்து செய்விக்கும் சாதுரியம் | (45) |
| 34. | அறிவுரை கூறும் ஆளுமை | (44) |
| 35. | அருள் உள்ளம் | (46) |
| 36. | மனித நேயம் | (47) |
| 37. | குடும்பம் காக்கும் புலவர் பெருமக்கள் | (146) |
| 38. | கரையைக் கடக்கும் காதலுணர்வு | (85) |
| 39. | குறைகளை நீக்கும் குழந்தைச் செல்வம் | (188) |
| 40. | செல்வத்தின் பயன் | (189) |
| 41. | உலகத்தை ஈர்த்த பாட்டு | (192) |
| 42. | உலகை நிலைநிறுத்துபவர்கள் | (182) |
| 43. | அறிவுடையவன் வழியில் அரசும் செல்லும் | (183) |
| 44. | ஒரு நாட்டின் இறையாண்மை | (186) |
| 45. | ஆணாதிக்கத்தைச் சுட்டிக் காட்டும் ஔவை | (187) |
| 46. | குடும்பக் கடமைகள் ஒரு தொடர் கதை | (193) |
| 47. | இன்னாத இவ்வுலகில் இனிய காண்க | (194) |
| 48. | உலகிற்கு ஓர் அறிவுரை | (195) |
| 49. | அறவிலை வாணிகம் | (134) |
| 50. | ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு கடமை | (312) |
| 51. | மறக்குடி மகளிர் | (279) |
| 52. | மான உணர்ச்சி | (74) |
| 53. | தேன்பிலிற்றும் வாழ்த்து மலர் | (173) |
| 54. | தகுதியறிதல் அரிதே | (121) |
| 55. | ஔவையின் மழலை மொழி | (92) |
| 56. | கண்முன் அதியன் | (100) |
| 57. | சிறுமதியன் கையில் பேரரசு | (75) |
| 58. | சுரவழியின் கொடுமை | (255) |
| 59. | பார்ப்பானின் சொல்லாற்றல் | (305) |
| 60. | எளிமையை விரும்பும் சிவன் | (106) |

# கோப்பெருஞ்சோழன் வரலாறு

சங்க கால வேந்தர்கள், மன்னர்கள், வள்ளல்கள் வரலாற்றைத் தொடர்புபட அறிய வாய்பில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கிடக்கும் உதிரிப் பாடல்களைக் கொண்டு கூட்டி, ஓரளவு உண்மையை உய்த்துணர வேண்டியுளது.

கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் மகன்கள் இருவருக்கும் ஏதோ காரணத்தால் பகை மூண்டுளது. கோப்பெருஞ்சோழனின் பெருமித வாழ்வையும் நற்பண்பையும் அறிய முடிகிறது. அவன் பெற்ற மைந்தர்கள் பற்றிய விவரம் தெரிந்திலது.

போர்க்களத்தில் தன் மைந்தர்களுடன் போரிட, கோப்பெருஞ்சோழன் ஆயத்தமாகிவிட்டான்.

அதைக்கண்ட புல்லாற்றூர் எயிற்றியனார் போரை நிறுத்துமாறு, சோழனுக்கு அறிவுரை கூறினார் (புறம் : 213)

சோழ வேந்தன் அரசுரிமையைத் துறந்து, ஓர் ஆற்றங்கரை மர நிழலில் 'வடக்கிருந்து' உயிர்விடத் துணிந்தான். (புறம் : 214) அப்போது அவனுடன் நட்புப்பூண்டு உயிர் நண்பராக விளங்கிய பொத்தியார் என்ற புலவரும் அவனுடன் வடக்கிருந்து உயிர்விட முன்வந்தார். ஆனால் அப் புலவரின் மனைவி கருவுற்றிருந்ததால், மகன் பிறந்த பின் வருக எனக் கூறிவிட்டான்.

சோழன் இவ்வாறு உண்ணா நோன்பிருந்து, உயிர் விட்டபின், பொத்தியார் வந்தார். அப்போது சோழனின் நடுகல் பொத்தியார்க்கு இடம் கொடுத்ததாம். (புறம். 220, 221, 222, 223)

பிசிர் என்ற பாண்டிய நாட்டு ஊரொன்றில் வாழ்ந்த பிசிராந்தையார், சோழனைக் காணாமலேயே அவன்பால் உயிரொன்றிய நட்புக் கொண்டிருந்தார். அவ் வேந்தனின் நிலையைக் கேட்டறிந்த அவர் தம் ஊரிலிருந்து புறப்பட்டுப் போய், சோழன் உயிர்நீத்த இடத்தை அடைந்தார். சோழன் இறக்கும் போது, பிசிராந்தையர் மிகச் சேயதான பாண்டிய நாட்டு ஊரில் இருந்தாலும் தன் செய்தி கேட்டு வருவார் எனக் கூறி மறைந்தனன், அவன் சொற்படியே பிசிராந்தையார் வந்து, தாமும் வடக்கிருந்து உயிர் விட்டார். இதைக் கண்டவர்கள் வியப்பிலாழ்ந்தனர். (புறம்.67, 212, 215, 216, 217, 218).

கோப்பெருஞ்சோழன் பெரு வேந்தனாதலின் அவனுடன் பொத்தியார், பிசிராந்தையார் தவிர மேலும் பலர் வடக்கிருந்து உயிர் நீத்துள்ளனர். அவ் வேந்தன் உடல் சிறுகச் சிறுகச் சுருங்கி, அவன் உயிர் நீத்த காட்சியை **'கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூத நாதனார்'** பதிவு செய்கிறார் (புறம்.219)

பிசிராந்தையார் சோழ நாடு வந்த பொழுது, அவர் அகவை முதிர்ந்தும் இளமையோடு இருப்பதைக் கண்டவர்கள் வியந்தனர். அதற்கு அவர் விடை கூறிய பாட்டு புகழ் பெற்றது (யாண்டு பலவாக. புறம்.191). அது போலவே, பாண்டியன் அறிவுடை நம்பிக்கு, வரி வாங்கும் முறை பற்றி அவர் கூறிய அறிவுரை பொருளியலாளர்களும் வியக்குமாறுளது (புறம்.184).

1

## போரை நிறுத்திய புல்லாற்றூர் எயிற்றியனார்

எயிற்றியனார் ஒரே ஒரு பாடல் புனைந்திருப்பினும் ஒப்பற்ற கருத்துக்களை 24 அடிகளில் எடுத்துக் கூறியுள்ளார்.

போர்க்களத்தில் தன் மக்களுடன் போரிட நின்ற கோப்பெருஞ்சோழனிடம் அவர் கூறுவன, மகா பாரதத்தில் வரும் போர்க்கள நிகழ்வுடன் ஒப்பிடத் தக்கனவாகும்.

பாரதத்தில் அங்கிருந்த சூழல் உற்றார், உறவினரேயாயினும் போர் செய்யத் தூண்ட வேண்டியுளது. இங்கு போர் வேண்டாம் என்ற அறவுரை மேலெழுகிறது.

'வெற்றி பொருந்திய வேந்தே! நின்னுடன் போரிட வந்து நிற்பவரைப் பற்றி எண்ணினால், அவர்கள் உன் பகைமன்னர்கள் அல்லர்; நீயும் அவர்களுக்குப் பகை மன்னன் அல்லை.

உனக்குப் பிறகு இந்நாட்டு ஆட்சியுரிமை அவருக்குரியதேயல்லவா? அதுமட்டுமன்றி, அவர்களை நீ வென்று விட்டாலும், நின் பெரும் செல்வத்தை வேறு யாருக்குத் தருவாய்! அவ்வாறன்றி நீ தோற்க நேர்ந்தால் உன்னை எள்ளி நகையாடுபவர் மகிழ, நீ தீராப் பழிக்கு ஆளாவாய்!

எனவே உடனே போரை நிறுத்து! போர்க்களம் விடுத்துப் புறப்படு! நின்னிடம் அடைக்கலமாக வந்தவரைக் காக்கும் நல்ல உள்ளம் உடையாய்! அரும்பெறல் உலகமாம் மேல் உலகில் உள்ளார் போற்றி, வரவேற்கும்படியான, நற்செயல்களை மேற்கொள்வாயாக!.

புலவரின் அறிவுரையை ஏற்ற வேந்தன், வடக்கிருந்து உயிர்நீக்கத் துணிந்தான். அப்போது அவன் பாடிய இறுதியுரை, உலகினர்க்கு அறிவுரை போல அமைந்தது.

முதலில் புல்லாற்றூர் எயிற்றியனார் பாடலைப் பார்ப்போம்.

மண்டமர் அட்ட மதுனுடை நோன்தாள்
வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே!

போரில் பகைவரை வெல்லும் ஆற்றலுடைய, வேந்தனே!

பொங்கு நீர்உடுத்த இம் மலர்தலை உலகத்து
நின்தலை வந்த இருவரை நினைப்பின்
தொன்றுறை துப்பின்நின் பகைஞரும் அல்லர்,
அமர்வெங் காட்சியொடு மாறுஎதிர்ப்பு எழுந்தவர்
நினையும் காலை நீயும்மற்றவர்க்கு
அனையை அல்லை, அடுமான் தோன்றல்!

உன்னுடன் எதிர்த்துவந்துள்ள இரண்டு இளையரும் நின் பகைவர்கள் அல்லர்; நீயும் அவர்களுக்குப் பகைவன் அல்லை. (துப்பு - வலிமை. மாறு எதிர்ப்பு - பகைத்து எதிர்த்து. மான் - குதிரை.)

பரந்துபடு நல்லிசை எய்தி, மற்றுநீ
உயர்ந்தோர் உலகம் எய்தி, பின்னும்
ஒழித்த தாயம்அவர்க் குரித்தன்றே
அதனால்,
அன்னதாதலும் அறிவோய், நன்றும்
இன்னும் கேண்மதி இசை வெய்யோயே!

நீ மேலுலகம் எய்தியபின், அரசவுரிமை அவர்க்கே உரியது. அதனை உணர்வாயாக! இன்னும் கேள் நீ!

நின்ற துப்பொடு நிற்குறித்து எழுந்த
எண்இல் காட்சி இளையோர் தோற்பின்
நின்பெருஞ்செல்வம் யார்க்கு எஞ்சுவையே?

நின் மக்களாகிய இளையோர் தோற்றால் உன் தாயவுரிமையை யாருக்குத் தருவாய்?

அமர்வெஞ் செல்வ! நீ அவர்க்கு உலையின்
இகழுநர் உவப்ப, பழிஎஞ்சுவையே!
அதனால்
ஒழிகதில் அத்தைநின் மறனே! வல்விரைந்து
எழுமதி வாழ்கநின் உள்ளம்! அழிந்தோர்க்கு
ஏமம்ஆகும்நின் தாள்நிழல் மயங்காது
செய்தல் வேண்டுமால் நன்றே! - வானோர்
அரும்பெறல் உலகத்து ஆன்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே!

(புறம்.213)

நீ உன் மக்களுக்குத் தோற்றால் அதுவும் பழியாய் முடியும். எனவே வீரத்தைக் கை விடு! போர்க்களத்தை விட்டு விலகு! வருந்துபவரை வாழ வைக்கும் நீ வானோர் உன்னை விரும்பி வரவேற்குமாறு நல்லதைக் கருதி அதை மேற்கொள்வாயாக!

## கோப்பெருஞ்சோழன் – ஓர் அரசப் புலவன்

பாப் புனைதலிலும் வல்லவனாக விளங்கிய கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவராக, உடனுறைந்த பெருமைக்குரியவர் பொத்தியார் என்ற புலவர். அம் மன்னனைக் காணாமலே, பாண்டிய நாட்டவராகிய பிசிராந்தையார், உள்ளத்தால் பிரிவரியாப் பெரு நண்பராக விளங்கியது, உலகம் அறியவேண்டிய வியப்புக்களில் ஒன்று.

குறுந்தொகையில் 4 (20, 53, 129, 147) புறநானூற்றில் 2 (214, 215) ஆகிய ஆறு பாடல்கள் இவ்வேந்தன் பெயரால் காணப்படுகின்றன.

2

## சோழ வேந்தனின் வாழ்வியற் சிந்தனை

பலருக்கு பாவ புண்ணியம் பற்றி உபதேசம் பேசும் சமய வாதிகள் உட்பட, அவற்றில் உள்ளார்ந்த நம்பிக்கை இல்லை. நல்லது செய்தால் நல்லது விளையும், தீயது தீயதையே விளைவிக்கும் என்பதை உண்மையிலேயே நம்பி நடப்பவர்கள் பற்றி எண்ணினால், 'ஆயிரத்தில் ஒருவர்' கிடைப்பது அரிது.

வேறு சிலர் நல்லபடி நடந்தால் என்ன கிடைக்கும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பர். புண்ணியமுண்டு, மேலுலகம் போகலாம், இவ்வுலகம் போல அங்கு இடர்ப்பாடே இல்லை; கேட்டது தானே கிடைக்கும் என்றெல்லாம் கேள்விப் பட்டதை வைத்து, அதற்காக - அப்புண்ணியத்தைத் தேட எந்த வழியிலும், எவ்வளவு செலவானாலும் செய்ய முந்துவர்.

ஆயினும் உயர்ந்த சிந்தனையுடைய பெரியோர்க்கு, சோர்விலா அம்மேலுலக இன்ப நுகர்ச்சிகள் தானே கிடைக்கலாம்; கிடைக்காமலும் போகலாம்.

அவ்வாறு கிடைக்கவில்லையென்றாலும், இந்த உயிருக்கு மறுபிறப்பு உ.ண்டு என்று கூறுகின்றனர். அந்த மறுபிறப்பும் இல்லை என்பார் சிலர்.

ஏனெனில் மேலுலகம், மறுபிறப்பு என்பன உய்த்துணர்வனவே அன்றிக் கண்கண்டவை அல்ல. அவ்வாறு மறுபிறப்பும் இல்லையென்றாலும் போகட்டும்.

ஏனெனில் யானை வேட்டைக்குப் போனவன் யானையையும் பிடித்துவிடக் கூடும். குறும்பூழ்(காடை) என்னும் சிறுபறவையைப் பிடிக்க முயன்றவன், வெறுங்கையோடு திரும்பவும் கூடும். வெற்றி தோல்விகளை இயல்பாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இமய உச்சிபோலும் படியாக, தம் புகழை இவ்வுலகில் நிலைநிறுத்தி, தீதறியா நல்லுடலுடன் இயல்பாக மறைதல் ஒன்றே, மிகச்சிறந்த தாகும்.

எனவே, எப்படி நோக்கினாலும் நல்வினை செய்வோமா, அறவழி நடப்போமா, அவற்றால் பயனுண்டா என்றெல்லாம் ஆராயாமல், ஐயப்படாமல் நல்வினைக்காக நல்வினை செய்து வாழ்தலே தலைமையானதாகும்.

கோப்பெருஞ்சோழன், தன் மக்களே தன்னை எதிர்த்து வந்தபோது, அவர்களுடன் போரிடப் புறப்பட்டான். அப்போது புல்லாற்றூர் எயிற்றியனார், 'தன் மக்களுடன் தான் போரிட்டு வென்றாலும் பழியே, தோற்றாலும் பழியே' என அறிவுரை கூறிப் போரை நிறுத்தினார். (புறம். 213), என்று பார்த்தோம். பிறகு மனம் வருந்தி, வடக்கிருந்து உயிர்நீக்க முற்பட்டபோது, அவ் வேந்தன் பாடிய பாட்டு இது.

செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறாஅர் கசடுஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே

கசடு ஈண்டு காட்சி நீங்கா நெஞ்சத்து – குற்றமற்ற அறிவினின்றும் நீங்காத மனம் உடையவர்கள். துணிவு இல்லோர் – ஐயப்பட்டு ஒரு பக்கமாகத் துணியாதவர்கள்.

யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே

நல்லது செய்து, அறநெறி வாழ்வதால் நன்மை உண்டோ, இல்லையோ என ஐயப் படுபவர்க்குச் சொன்ன அறிவுரை இவை. நினைத்தது நடக்கலாம், நடக்காமற் போகலாம். இதுவே உலக இயற்கை, அதனால் ஊசலாடாமல் நல்லதையே நினைத்து, நல்லதையே பேசி, நல்வழியிலேயே வாழ்வதுதான் நல்லது. இத்துணிவு வேண்டும் என்பது கருத்து.

அதனால்

உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கில் எய்தல் உண்டெனில்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்.

உயர்ந்ததையே எண்ணி விழைந்து தேடி வாழும் உயர்ந்தவர்களுக்கு செய்த வினையின் பயன் செய்தவரைச் சேரும் என்ற கருத்து உண்மையாகுமென்றால், துன்பமென்பதில்லாத அம் மேலுலக இன்ப நுகர்ச்சி கை கூடும்.

தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்.

ஒருவேளை, அம் மேலுலக இன்ப நுகர்ச்சி கை கூடாதென்றாலும், மாறிப் பிறக்கும் மறுபிறப்பு இல்லாத வீடுபேறு வாய்க்கும்.

மாறிப் பிறவார் ஆயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே. (214)

சரி, மறுபிறப்பு முதலியன எல்லாம் கற்பனையே, அவை எதுவும் இல்லையென்றாலும், இவ்வுலகில் இமயமலையுச்சி அனைய புகழை நட்டு, குறையற்ற உடலுடன் உயிர்விடுதலும் மிகச்சிறப்புடையதேயாம்.

வடக்கிருந்து உயிர் விடுதலால், 'தீதில் யாக்கையொடு' உயிர்விடுதல் என்றான் சோழன். நோய்வாய்ப்பட்டு இறத்தல் வேறு. ஒரு நல்ல கொள்கைக்காக, கருத்துக்காக, உயிர்விடுதல் வேறு.

இவ்வாறு வடக்கிருந்து உயிர்விடுதல் நன்றோ, தீதோ என எண்ணும் சோழ மன்னன் மனப்போராட்டத்தின் விளைவு, இங்ஙனம் வெளிப்படுகிறது. நல்லதென்று தோன்றுவதில், ஐயப்படாது, துணிதலால் விளைவது யாதாயினும், இறுதியில் புகழாவது நிலைக்குமே என எண்ணும் சோழன் மனம், விடுதலைக்காக உயிர் விடும். வீர மறவர்களை நினைவூட்டுகிறது.

## பிசிராந்தையார்

பாண்டிய நாட்டில் கடற்கரை ஓரமாகப் 'பிசிர்' என்ற சிற்றூரில் வாழ்ந்தவர் ஆந்தையார் என்னும் புலவர் (ஆதன் + தந்தை = ஆந்தை என மருவியது). இவர் பாடியனவாக ஆறு பாடல்கள் கிடைக்கின்றன. அவற்றுள் அகப்பாடல்கள் இரண்டு (அகம்.378, நற்.91) பாண்டியன் அறிவுடை நம்பிக்கு இவர் அறிவுரை கூறிய பாடல் ஒன்று (புறம் 184). இவர் முதிர்ந்த வயதிலும், தாம் இளமையோடு காணப்படுவதற்கான காரணங்களை அடுக்கிய பாடல் ஒன்று (191).

சோழர் தலைநகர் உறையூருக்கும், பாண்டிய நாட்டு ஊர் 'பிசிர்' என்பதற்குமிடையே மிகுந்த தூரமாகும். இருந்தும் சோழ வேந்தனது,

நற்பண்புகளைக் கேள்விப்பட்டே, அவனிடம் நட்புக் கொண்டார் பிசிராந்தையார்.

காணாமலே கொண்ட இந்நட்பு மிக நீண்ட காலம் நீடித்தது. ஒருவரை ஒருவர் காணாமல், ஒன்றிய உணர்வுகளைக் கேள்விப்பட்டு, அதன்வழியே காலமெல்லாம் நட்புப்பூண்டிருப்பது உலக வியப்புக்களில் ஒன்றேயாகும்.

பிசிராந்தையாரிடம் 'நும் கோ யாரென வினவின், எம்கோ, பைதல் சுற்றத்துப் பசிப் பகையாகிக் கோழியோனே, கோப்பெருஞ்சோழன்' என்பாராம், அப்பாண்டிய நாட்டுப் பாவலர். (கோழி – உறையூர்)

பொத்தில் நண்பிற் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை வைகலும் நக்கே (212)

குற்றமற்ற நட்பினையுடைய பொத்தி என்ற புலவருடன், நட்புப் பூண்டு, நாள்தோறும் வாயாரச் சிரித்து மகிழ்ந்து பேசி உறவாடும் வேந்தன் என்று கூறுகிறார் பிசிராந்தையார்.

இதனை அவர் கேள்விப் பட்டிருக்கிறார். ஒரு புலவரைச் சமமாக மதித்துப் பழகும் வேந்தன் என்பது அவர் மனத்தைக் கவர்ந்துளது.

பிறிதொரு பாடலிலும் பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழனைப் பாடியுள்ளார். 'அன்னச் சேவலே! அன்னச் சேவலே!' நீ குமரியம் பெருந்துறையில் அயிரை மீனை உண்டு, வடமலையாம் இமய மலை நோக்கிச் செல்வையாயின், இடையே சோழநாட்டில் தங்க நேரலாம். அங்கு உறையூரில், உயர்ந்த மாடங்களில் தங்கி, வாயில் காவலர் உன்னைத் தடுத்து விடாமல் நேரே அரண்மனையுள் புகுந்து, பெருங்கோக் கிள்ளி (கோப்பெருஞ் சோழன்) காதில் விழுமாறு, 'நான் பெருமைமிகு பிசிர் என்னும் ஊரிலுள்ள ஆந்தை என்பானின் அடியவன்' என்று கூறினால் உடனே அவன் நின் அன்புறு பெட்டை அன்னம் அணியுமாறு, நல்லநல்ல பொன்னணிகளை நல்குவான்; அவற்றைப் பெற்றுச்செல்க! (67)

## 3

## உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்

இவ்வாறு பாடும் பிசிராந்தையாரைக் குறிப்பிட்டுக் கோப்பெருஞ்சோழன் பாடிய பாடல்கள் இரண்டு உள.

வேந்தன் வடக்கிருந்தபோது, சான்றோர் பலரும் கூடவே உண்ணாது உயிர்துறக்க இருந்துள்ளனர். (வடக்கிருத்தல் என்பது இன்று சாகும்வரை பட்டினி கிடப்பது போன்றது. வட திசையை, உயிர்பிரிந்து போகும் திசை எனக் கருதினர்.) அப்போது, வடக்கிருந்த சோழன், தன் ஆருயிர் நண்பன் பிசிராந்தை, உறுதியாக வருவான். அவனும் 'வடக்கிருக்க இடம் ஒதுக்கிவையுங்கள்' என்றான். அப் பாடலே இவர்களது நட்பின் சிறப்பை தெளிவாக விளக்குகிறது. வறுமைப்பட்ட புலவர்கள், அரசர்களைப் பொய்யாக வாழ்த்தி, வாழ்ந்தவர்களே எனக் கருதும் சங்கக் கல்வி அறிவிலாதார் கருத வேண்டிய பாடல் இது.

'கேட்டல் மாத்திரை அல்லது யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமையர் ஆகினும்
அரிதே தோன்றல் அதற்பட ஒழுகல்' என்று
ஐயம் கொள்ளன்மின், ஆரறி வாளீர்!
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்கும் காலை, என்பெயர்
'பேதைச் சோழன்' என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன் அதன்தலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்க அவற்கிடமே (216).

'கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தான் பிசிராந்தையார்க்கு இடன் ஒழிக்க என்றது' என்பது இதன் அடிக்குறிப்பு.

கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் ஒருவரை ஒருவர் நேரில் பார்த்ததில்லை. அப்படி இருக்க நீண்ட காலம் பழகிய நட்பு என்பதும் வடக்கிருக்கும் இதைக் கேள்விப்பட்டதும் பிசிரார் வருவர் என்பதும் உடனிருந்த சான்றோரால் நம்ப முடியவில்லை.

'கேட்டல் மட்டுமே அல்லாது சிறிதும் நேரில் கண்டதும்
இல்லை. இவ்வாறே பல ஆண்டுகள், குற்றமறப் பழகிய
பழுதிலா நட்புடையவர் பிசிராந்தையார். ஆயினும்
தலைவ! அதற்கேற்ப இங்கு வருவல் என்பது இந்நிலையில்
அரிதே!' என்று நிறைந்த அறிவுடையீர்! ஐயப்படாதீர்!
அவன் சிறிதும் அலட்சியப்படுத்தான், இனியவன், பிணித்த
நட்புக்குரியவன், புகழ் கெட வரும் பொய்ம்மையை
விரும்பமாட்டான். அவன் பெயர் என்ன என்று
கேட்பால் பேதையாகிய என் பெயரைத் தன்பெயராகச் 'சோழன்'
எனக் கூறுபவன். அத்தகைய காதலன்பு மிக்க அவன்
இத்தகைய துன்பமிக்க காலத்தில், அங்கே இருக்க மாட்டான்.
விரைந்திங்கே வருவான்! அவனுக்கும் வடக்கிருக்க ஓர்
இடம் ஒதுக்கிவையுங்கள்!'

இவ்வாறு கோப்பெருஞ்சோழன் தங்கள் நட்பின் அருமையை எடுத்துக் கூறினான். அதுமட்டுமன்றி, ஆயர் மகளிர் வெண்தயிருடன் புளிச் சோற்றை உண்டு வாழும் பாண்டிய நாட்டினராகிய பிசிராந்தையாரின் நற்பண்பை மேலும் சிறப்பித்துக் கூறுகின்றான், சோழன்.

.... தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
பிசிரோன் என்பஎன் உயிரோம்புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே (215)

என் உயிரோம்புநன் – என் உயிருக்குயிராய்க் காப்பவன். செல்வம் மிக்கு, ஆட்சியிலிருந்த காலத்து வராவிட்டாலும், இத்தகைய துன்பம் மிக்க காலத்தில் வாராதிருக்க மாட்டான் எனச் சோழன் உறுதிபடக் கூறினான்.

இவ்வாறு கூறிய சோழவேந்தனின் உடனுறை நண்பராகிய பொத்தியாரும் வடக்கிருக்க முனைந்தனர். அப்புலவரின் மனைவி கருவுற்றிருந்ததால், அவள் மகனைப் பெற்ற பிறகு வருக எனத் தடுத்துவிட்டனன், வேந்தன்.

கோப்பெருஞ் சோழனுடன் பலரும் வடக்கிருந்தனர் எனத் தெரிகிறது. ஆற்றின் உட்புறமான ஆற்றிடை மணல் மேட்டில் கவர்த்த பல வழிகளையுடைய, ஓரிடத்தில் மரத்தின் கீழே, புள்ளிகளையுடைய நிழலில் கோ வடக்கிருந்தனன். உணவு உண்ணாது முழுமையான தசை நலிந்து, வலிமை சிறிது சிறிதாக வாடி, உயிர் நீத்த வீரனே! உன்னுடன் வடக்கிருந்தோர் பலராவர். யான் அப்பேறு பெற்றிலேன். என்னை நீ வெறுத்தனை போலும்! – இவ்வாறு காலம் கடந்து அங்கு வந்த கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார் பாடினார் (புறம். 219).

பிசிராந்தையார் நெடுந்தொலைவிலிருந்து வரக் காலத் தாழ்வாயிற்று. அதற்குள் கோ புகமுடம்பு எய்தி விட்டனன். எனினும் அவ்வேந்தனின் சொற்படி, தவறாது வந்த பிசிராரைக் கண்டதும் மக்கள் வியப்புற்றனர். பொத்தியார்க்கு இது மிகப்பெரிய வியப்பாயிற்று.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும் (குறள். 785)

என்பார் திருவள்ளுவர். நட்புக்கு ஒருவரை ஒருவர் காண வேண்டும்; அடுத்தடுத்து அருகருகே வாழ்தல் வேண்டும்; பழகுதல் வேண்டும் என்பதில்லை. ஒத்த உணர்ச்சி போதும். அவ்வாறு ஒன்றிய உணர்வுடையார் எங்கிருந்தாலும் – கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் போல ஒருவரை ஒருவர் பார்க்காதே இருந்தாலும் அது நட்பென்னும் உரிமையைத் தரும்.

இதனை பரிமேலழகர் விளக்கும் விதமே தனி; "புணர்ச்சி - ஒரு தேயத்தாராதல்... பழகுதல் – பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி ஒப்பின், அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம்."

## 4

பொத்தியார் இவ்வுயரிய நட்பினைப் பாடியுள்ளார்.

நினைக்கும் காலை மருட்கை உடைத்தே
எனைப்பெரும் சிறப்பினொடு ஈங்கிது துணிதல்

கோ– வேந்தன் இத்துணைச் சிறப்பினையும் துறந்து, இங்கு வடக்கிருக்க வந்ததை நினைத்தால் மருட்சியாய் – வியப்பாயிருக்கிறது.

அதனினும் மருட்கை யுடைத்தே, பிறன்நாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி,
இசைமரபு ஆக, நட்புக் கந்தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்

பிறநாட்டைச் சேர்ந்த புகழமைந்த சான்றோனுடன் நட்புப் பூண்டதை, அவனும் போற்றி புகழமைய, நட்பே பற்றுக்கோடாக, அதாவது நட்பொன்றே காரணமாக இத்தகைய இடர்மிகுந்த காலத்தில் இத்துணைத் தொலைவிலிருந்து இங்கு வருதல், அதனைவிடத் திகைப்பையும் வியப்பையும் தருகிறது.

'வருவன்' என்ற கோனது பெருமையும்
அதுபழுதின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே

கோப்பெருஞ்சோழன் இறக்குமுன் 'என் நண்பன் வாராதிரான், வருவான்' என்று, அருகிலிருந்த, ஐயப்பட்டவர்களுக்குக் கூறியதும், அவன்

சொன்னபடி, அவனிறந்த பின்பு, தவறாமல் வந்த பிசிராந்தையாரின் நன்றியறிதலும் நினைத்துப் பார்த்தால் வியக்கும் தோறும் வியக்கும் தோறும் வியப்பு எல்லை கடக்கின்றது!

அதனால்
தன்கோல் இயங்காத் தேயத்து உறையும்
சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்றுஇசை
அன்னோனை இழந்தஇவ் வுலகம்
என்னா வதுகொல் அளியது தானே! (217)

தன் ஆட்சிக்கு அப்பாற்பட்ட (பாண்டிய) நாட்டில் வாழும் ஒரு புலவரது நட்பை, உள்ளம் ஒன்றுமாறு பெற்ற, பழம் புகழையுடைய, அத்தகைய சோழ வேந்தனை இழந்தஇவ் வுலகிற்கு – இந்த நாட்டிற்கு இனி என்ன ஆகுமோ? இது இரங்கத்தக்கதாயுளது!

5

கண்ணகனார் என்ற புலவரும் இதனைக் கண்டு, 'சான்றோரைச் சான்றோரே காமுறுவர்' எனப்பாடி வியந்தனர். எங்கோ நெடுந்தொலைவிலிருந்தும், ஓரிடத்தே வந்து, உயிர்விட்டமையை, அவர் சிறந்ததொரு உவமையால், குறிப்பாக உணர்த்திப் பாடியுள்ளார்.

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை,
ஒருவழித் தோன்றியாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலரா குபவே! (218)

பொன், பவளம், முத்து விளையுமிடங்கள் ஒன்றுக்கொன்று இடையீடு பட்டுச்

சேயவாயினும் பெருமதிப்புடைய மாலையாக நல்ல அணிகலன் அமைக்கும்போது, ஒரே மாலையில் ஒருங்கு நெருங்கி இருப்பதுபோல, எக்காலத்தும் சான்றோர் சான்றோரையே சேர்வர்; சான்றாண்மை இல்லாதார் அத்தகையாரையே சார்வர். இதுவே உலகியல் போலும் எனக் கண்ணகனார் வியக்கின்றார்.

6

## பொத்தியார்

கோப்பெருஞ்சோழன் தன் உடனுறைந்த நண்பராம் புலவர் பொத்தியாரை, 'தன்னுடன் உயிர் நீக்கவிடாமல், நினக்கு மகன் பிறந்த பிறகு வருக' என அனுப்பிவிட்டனன். பொத்தியார் வடக்கிருந்து உயிர்துறந்த நண்பனைப் பார்த்துப் புலம்பிய பாடல்கள் அவலம் மிக்கவை.

கெடுவில் நல்லிசை சூடி
நடுகல் லாயினன் புரவலன் என அழுகின்றார் (221)

பாடுநர்க்கு ஈத்த பல்புக ழன்னே
ஆடுநர்க்கு ஈத்த பேரன்பினனே
அறவோர் புகழ்ந்த ஆய்கோலன்னே
திறவோர் புகழ்ந்த திண்அன்பினனே.

பாடுவார்க்கும் ஆடுவார்க்கும் கொடுத்தவன். அறவோரும் திறவோரும் புகழ்ந்த செங்கோலும் அன்பும் உடையவன். இவ்வாறு வாயாரப் புகழ்கின்றார். அத்தகைய தக்கோனைக் கொன்ற கூற்றத்தை, 'வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்!' என்று அழைக்கின்றார்.

நீண்ட நாள் சோற்றுக் கவளம் ஊட்டி வளர்த்த யானையை இழந்த பாகன், அது கட்டிக் கிடந்த தறியைப் பார்த்துக் கலங்குவதுபோல, தன்னுடன் நட்புப் பூண்டொழுகிய சோழனை இழந்த, உறையூர் மன்றத்தின் பாழ்பட்ட நிலையைக் கண்டு கலங்குகிறார் (220).

தனக்கு மகன் பிறந்த பிறகு, பொத்தியார் சோழன் நடுகல்லாய் நிற்கும் இடத்திற்கு வருகின்றார். 'உன்நிழல் போல் பொலிந்த நின் மனைவி புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வா!' என்று, தன்னை உடனுயிர்விடத் தடுத்ததைச் சொல்லி. 'அரசே! நீ சொன்னதை மறக்க மாட்டாய்! இதோ நான் மகன் பிறந்த பிறகு வந்துவிட்டேன். எனக்கு வடக்கிருக்க இடம் எது, காட்டு!' என வினவுகிறார் (222).

அதுபோலவே, அந் நடுகல்லின் அருகமர்ந்து தானும் உயிர்விடப் போகும் நிலையில், பொத்தியார், சோழன் தனக்கும் இடம் தந்ததாகக் கூறிவிட்டு, ஒரு பாடலைப் பாடிவிட்டு மாய்கின்றார். இறந்தபின் பாடுதல் இயலாதல்லவா?

'உடம்பொடு இன்னுயிர் விரும்பும் கிழமைத் தொன்னட்பு உடையர்' என, உடம்பும் உயிரும் ஒன்றிய நட்பினைப் பற்றிக் கூறுகிறார். 'நிலைபெறு நடுகல்லாகியக் கண்ணும், இடம் கொடுத்து அளிப்பர்' என்று கூறி, தாமும் உடனுயிர் நீத்து நடுகல்லாகின்றார் பொத்தியார். (புறம். 222)

இந் நிகழ்வும் 'வியப்பினும் வியப்பிறந்தற்றே' என நம்மை வியக்கவைக்கின்றது. சோழன்தான் இறந்துவிட்டானே என்று, பொத்தியார் நட்பினை மறந்துவிடவில்லை. 'உடம்பும் உயிரும் ஒன்றிய நட்பு இது' என்று கூறுகிறார். உயிரொன்றிய நட்பெனக் கூறும் இவ் உலகிற்கு, இதோ 'உடம்பும் ஒன்றிய நட்பொன்று பாரீர்' எனக் காட்டுவார் போலத் தம் உடலையும் இழக்கின்றார்.

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்புக்கிணையான பிறிது ஒன்றை, இவ் வுலகிடைக் காட்டல் அரிது.

அவ் வேந்தனிடம் பொத்தியார் கொண்ட நட்பு, காலம் கடந்ததும் நினைவு நீங்கும் இவ்வுலகில், அரிதாகக் காணப்படும் ஒப்பற்ற நட்பாகவுளது.

இத்தகையவற்றை நம் மக்களுக்கு உணர்த்த வேண்டாமா? நம் சிறார் மனத்தில் பதிவிக்க வேண்டாமா?

வெற்றுப் புனைவுகளின் வழி, மனித மாண்பைக் கூறுவதை, உலகம் 'கதை' காரணமாகப் பற்றிக் கொள்கிறது!

ஆனால் 'நிழலல்ல, நிசம்' என்று, உண்மையாக நடந்த தமிழர் பண்பாட்டைக்

கதையாய்
ஆடலாய்
இசையாய்
கூத்தாய்
நாடகமாய்
குறும்படமாய்
திரைக்காட்சியாய்

உலகிடைப் பரப்புவது எப்போது? இதை விடுத்து வெற்று ஆராவாரத்திலேயே, காலத்தை ஓட்டுபவர்களைக் கடிவதில் தப்பேது?

7

## முதுமையிலும் இளமை

பிசிராந்தையார் போப்பெருஞ்சோழன் வடக்கிருந்த செய்தி கேட்டு, பாண்டிய நாட்டுப் பிசிர் என்னும் ஊரிலிருந்து நெடுந்தொலைவு நடந்து வந்தார். சோழ நாட்டு உறையூரில் அவரைக் கண்டவர்கள், அவர் மிகுந்த கிழப்பருவத்தோடு இருப்பார் என எண்ணினர். அவரோ முதுமையிலும் இளமையாய்க் காணப்பட்டார்.

**கோப் பெருஞ் சோழன் வடக் கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரைக் 'கேட்கும் காலம் பலவாலோ? நரை நுமக்கு இல்லையாலோ' என்ற சான்றோர்க்கு அவர் சொற்றது - என்பது அடிக்குறிப்பு.**

சிலர் இளமையிலேயே முதியவர் போல் கூனிக் குறுகி, முகம் சுருங்கிக் காணப்படுகின்றனர்.

இளமையைக் காக்க வேண்டுமேல், மன இறுக்கம் கூடாது. மனம் இளமையாய் இருந்தால் உடல் இளமையாய் இருக்கும். மனம் இளமையாய் இருக்கவேண்டுமேல், அது மாசற்ற தூய மனமாக இருக்க வேண்டும்.

முதலில் சுற்றுச்சூழல் நன்றாக இருக்கவேண்டும். குளம் குட்டை, கெட்ட காற்று அனைய தீய சூழல்கள் மட்டுமன்று; இலஞ்சம் வஞ்சம் கொலை களவு பொய் அனைய அகச் சூழல்கள் தூயதாக இருக்க வேண்டும். இது ஆள்பவரைப் பொறுத்தது. இது நாடுதழுவியது.

வீடு தழுவிய குடும்பமும் நன்றாக அமையவேண்டும். மனைவி, மக்கள், வேலை செய்யும் இளையர் எல்லோரும் கவலையை விளைவிப்பவராக இருக்கக் கூடாது.

இவ்வாறெல்லாம் இருந்தால், தனிமனிதனும் ஒழுக்கத்துடன் வாழ்ந்து, இளமையைக் காத்துக் கொள்ள முடியும்.

அல்லாமல் மாப் பூசி, கருப்புமை அடித்து, அலங்காரம் பல செய்து இளமையாய்க் காட்டிக்கொள்வோரே இன்று பலர். இது நாடக நடிகர் வேடம் போலும்; ஒருநாள் சாயம் வெளுத்து விடும். அப்போது முதுமை இருமடங்காக வெளியே தெரியும்.

பிசிராந்தையார், உறையூர்ச் சான்றோர்க்கு மிகச் சிறப்பாக விடை கூறினார்.

**யாண்டுபல வாக நரையில ஆகுதல்**
**யாங்குஆ கியரென வினவுதிராயின்,**
**மாண்டஎன் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்,**
**யான்கண்டனையரென் இளையரும், வேந்தனும்**

அல்லவை செய்யான் காக்கும்! அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே (191)

மாண்ட - மாட்சிமைப்பட்ட. இன்று 'மாட்சிமை' தங்கிய என்கிறோமே, மாட்சிமை அற்றவர்களையும் - அச் சொல்லின் வேர், அடி 'மாண்', 'மாண்பு' என்பன. மக்களும் கூடுதலாயினர் அல்லர்; அறிவு நிரம்பினர் என்பதாம். இளையர் - பணி செய்வோர். யான் கண்ட அனையர் - என் எண்ணப்படி நடப்பவர்கள்.

வேந்தன் - ஆள்வோர். இன்று பாரதமெங்கும் ஆள்வோரே அனைத்துத் தீமைகளுக்கும் உறைவிடமாயிருந்து, வழிகாட்டுகின்றனர். அவை யாவும் வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ உலகினர் அனைவருக்கும் தெரிந்துவிடுகின்றன. உலகம் முழுவதும் இவ்ஊழல் அரசியல் நோய், தொற்று நோயாய் விரைந்து பரவுகிறது.

அதனால்தான், அன்றே பிசிராந்தையார், வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும் என்றார்.

அதன் தலை - அவை எல்லாவற்றுக்கும் மேலாக, 'ஆன்று (கல்வி கேள்விகளால் நிறைந்து), அவிந்து (ஐம்புலன்களைத் தீய வழிகளிற் செலுத்தாது) அடங்கிய கொள்கை (எளிமையாய் ஆடம்பரமின்றி வாழும் பண்பு) யாவும் உடைய சான்றோர் பலர், நான் வாழும் ஊரில் உள்ளனர்.

ஒளியும் இருளும் உள்ளதே உலகம். இதில் நல்லவரும் வாழ்வர்; அல்லாதவரும் இருப்பர்.

முன்பு 'சான்றோர் பலர்' இருந்தனர்; இன்றோ சான்றோர் சிலரேனும் இலர் எனக் கூறும் நிலை உளது.

பிசிரார் கூறிய இளமையைக் காக்கும் எண்ணங்கள், மிக உயரிய சிந்தனைகள்; வாழ்வார்க்கு வாழ்வு தரும் அருமருந்துகள்.

# 8

# பொருளியல் வல்லுநர்

## பிசிராந்தையார்

பிசிராந்தையார் ஒரு மூதறிஞர்; நீண்ட காலம் இளமையாய் இருக்கும் வாழ்வினைப் பெற்று, வாழ்ந்தவர். தாம் இளமையாய் இருப்பதன் காரணங்களை அடுக்கிக் கூறியவர். அவர் பாண்டிய நாட்டினர். அவர் காலத்தில் பாண்டியன் அறிவுடை நம்பி, அந் நாட்டினை ஆண்டனன். அவனும் ஓர் அரசப் பாவலன். அவன் மக்கட் செல்வத்தைப் பற்றிப்படைப்புப்பல படைத்து எனத் தொடங்கும் (புறம். 188) பாடலைப் பாடியவன். அப் பாடல் படிப்பவர் அனைவரையும் இன்புறுத்த வல்லது. பிசிராந்தையார், வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும் எனப் பாடியது அவனைப் பற்றியதாகவே இருக்கும்.

ஆயினும் பாண்டியன் அறிவுடை நம்பியின்கீழ் பணி செய்த அதிகாரிகள், மழை பெய்யாது விளைவு குன்றிய காலங்களிலும் மக்களை வருத்தி வரி வாங்கியுள்ளனர் என்று தெரிகிறது. அவனும் அதற்கு உடந்தையாக இருந்திருக்கக் கூடும்.

வரிவாங்கு முறையில் நேர்ந்த சீர்கேட்டை பாண்டியனுக்குச் சொல்ல வேண்டிய கடமை, பிசிரார்க்கு ஏற்பட்டது. அக்காலப் புலவர்கள் வேந்தர்களேயாயினும் 'பின்பாட்டுப் பாடி' வாழ்ந்தார்கள் அல்லர். அவர்களுக்கு நேரே நின்று அறிவுரை கூறியும் மனத்தில் படும்படி இடித்துரை கூறியும் திருத்த முயன்றனர்.

வரிவாங்கும் முறை (Taxation) பற்றி, மேனாட்டார் நிரம்ப எழுதியுள்ளனர். எனினும் அவர்களினும் மேலாகச் சங்கப் புலவர்கள் சிந்தித்துள்ளனர்.

மக்களை வளப்படுத்தி, வாழ வைத்துச் செல்வத்தைப் பெருக்கி அதிலிருந்து 'ஆறில் ஒரு பங்கு' என்ற முறைப்படி வரி வாங்கவேண்டும். அவர்களை வாழ முடியாமல் வாடவிட்டு, வருத்தி வரி வாங்குவது தவறு. நமக்குக் கிடைத்திலதாயினும் இங்ஙனம் கொடுமைப் படுத்தியும், அதிகாரிகளைவிட்டு, விரட்டி வரிவாங்கும் மன்னர்கள் இருந்திருக்கக் கூடும். குடிமக்கள் தாமாக விரும்பி வரி கொடுக்குமளவு, மன்னன் நாட்டு வளத்தைப் பெருக்க வேண்டும். வரி கொடுப்பதனால் மக்கள் வாழ்வு மேன்மேல் உயருகிற வகையில், வரிவிதிப்பதை, கூடுதல் மக்கள் நல வரிமுறை (Maximum social welfare theory) என்பர்.

## வரிவிதிப்பு முறை

பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடை நம்பியிடம் சென்று, வரிவிதிப்பு முறை பற்றிக் கூறிய வரிமுறை, எக்காலத்திற்கும் பொருந்தும்.

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்.

அரிசி முதலியவற்றைக் கலந்து கொடுக்கும் 'நெய்ம்மிதி கவளமே' யானைக்கு உணவாகும். ஒரு வேலி நிலத்தில், இருபதில் ஒரு பாகமாகிய, ஒரு மா நிலத்திற்கும் குறைந்ததில் விளைந்த நெல்லாயினும், அம் முற்றிய நெல்லை அறுத்து வந்து, கவள உணவாக்கி யானைக்கு ஊட்டினால், அது பல நாட்களுக்குப் பயன்படும்.

நூறுசெறு வாயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்

நூறு காணி நிலமாயினும், யானை தானே தனித்து வயலினுள் புகுந்து உண்ணுமானல், அதன் வாயில் புகும் உணவைக் காட்டிலும் அதன் காலில் மிதிபட்டு மிகுதியான நெல் அழிவுறும்.

அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்

அறிவுடைய அரசன் வரிவாங்கும் நெறியறிந்து, அறநெறி தவறாமல் வரிவாங்குவானாயின், அவன்பால் கோடி கோடியாகச் செல்வம் பெருகுவதுடன், நாடும் செல்வத்தில் கொழிக்கும். (நந்தும் – வளரும், சிறக்கும்) அறிவுடை நம்பி என்ற பெயருடைய வேந்தனிடம், 'அறிவுடை வேந்தன்' எனச் சுட்டிச் சொல்வதில் தொனிப் பொருள் உளது. பெயர்தான் அப்படியுளதே தவிர, நின் செயலில் 'அறிவு' தோன்றவில்லையே, என்பதுபோல் உளது.

**மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்**
**வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு**
**பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்**
**யானை புக்க புலம்போல**
**தானும் உண்ணான் உலகமும் கெடுமே** (184)

அரசன் அறிவும் திறனும் அற்றவனாக இருந்து, அதிகாரிகளிடம் விடுவானாயின் கேடுதான் விளையும். இன்றைய கட்சி அரசியலிலும் எந்த அமைச்சருக்கும் தத்தம் துறை பற்றிய அறிவோ, திறனோ பெரிதும் இருப்பதில்லை. இந்திய ஆட்சிப் பணியினர் (I.A.S) சொல்லித் தருவதைச் சொல்லி, நீட்டிய கோப்பில் ஒப்பமிட்டு ஓய்வதால், ஆட்சி அதிகாரிகளின் கெடுபிடிகளுடன் போகிறது. அன்றும் 'கிழவன் (உரிமையுடைய மன்னன்) மெல்லியனாகி (திறமையின்மையால் எளியனாகி ) விடுவதுண்டு, 'வைகலும் வரிசையறியாக் கல்லென் சுற்றமொடு' – நாள்தோறும் மக்களின் நிலைமைகளை அறியாத அதிகாரிகளாகிய, ஆரவாரம்மிக்க சுற்றத்துடன் வரிவாங்குதல். 'கல்லென் சுற்றம்' – மக்களை அதட்டி ஆரவாரித்து அச்சுறுத்தும் அதிகாரிகள். பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின் – ஈவு இரக்கமின்றி எடுக்கும் பொருட் குவியலை அரசன் விரும்புவானானால். அப்படி எடுக்கும் செல்வத்தைப் 'பிண்டம்' என்று இகழ்ச்சி தோன்றக் கூறுகிறார்.

யானை புகுந்த நிலம் அழிவதைப் போல, அரசனுக்கும் ஆகாது, உலகமும் கெட்டழியும். தானும் செல்வப் பயனை நுகராமல், மக்கட் சமுதாயமும் கெட்டழிய நேரும் என்பதாம்.

இப் பாடலில் ஒவ்வொரு சொல்லுக்கும் மேலும் விரிவாக எழுதலாம்.

பொருளியல் நூல்களில் (Economics), வரி விதிப்பு முறை (Taxation) ஒரு பாடம். அதில் ஓர் உவமை எல்லா நூல்களிலும் காணப்படும்.

"வரி வாங்குவது என்பது வாத்தினுடைய
சிறகுகளைப் பறிப்பது போலச் செயற்பட வேண்டும்.
எவ்வளவு குறைவாக அது கூச்சலிடுகிறதோ, அந்த
அளவு குறைவாகக் கத்தும்படி செய்து, எவ்வளவு
மிகுதியான சிறகுகளைப் பறிக்க முடியுமோ
அவ்வளவையும் பறிப்பதுபோல, மக்கள் வருந்திக்
கூக் குரலிடா வண்ணம் வரிவாங்க வேண்டும்."

**(Pluck the goose with as little squealing as possible: Colbert)**

அவர்கள் அவர்களுக்குப் பழக்கப்பட்ட உவமை கூறியுள்ளனர். பிசிரார் கூறிய உவமையுடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள். எது சிறந்தது - எத்துணைச் சிறந்ததென்பது உங்களுக்கே விளங்கும்.

## 9

## மக்கட் சார்பாளர்

### வெள்ளைக்குடி நாகனார்

சோழநாட்டில் வெள்ளைக்குடி என்பது ஒரு சிற்றூர். அங்கு நாகனார் என்ற புலவர் வாழ்ந்து வந்தார். சங்க காலத்தில் வேளாண் தொழில்

மேலோங்கி இருந்தது. ஆறு குளம் ஏரி என இருந்தாலும் தமிழகம் பெரிதும் 'வானம் பார்த்த பூமி' என்றே கூறலாம். திருக்குறளில் 'வான் சிறப்பு' அதிகாரத்தையும் அதிலுள்ள 'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே, எடுப்பதூஉம் எல்லாம் மழை' என்ற குறளையும் (15), வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி போன்ற தொடர்களையும் எண்ணிப் பார்த்தால், இது உண்மையே என்பது புலப்படும்.

ஒருமுறை சோழநாட்டில் வான் பொய்த்ததால், வளம் குன்றி, விளைச்சலின்றி மக்கள் வாடினர். நாகனாரும் ஓர் உழவர் குடியினரேயாதலால், அவரும் பாதிக்கப் பட்டார். இச்சூழலில் அவ் யாண்டில், மக்களிடம் வரிவாங்குவதை நிறுத்தவோ, குறைக்கவோ வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படி ஒன்றிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்கவே, பழைய வரிகளையும் சேர்த்து, விலக்களிக்க வேண்டுமென, வாடிய மக்கள் வருந்தி வேண்டினர். நாகனாரின் நிலைமையும் அதுவே. அன்று, சோழநாட்டை, குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் ஆண்டு வந்தான். பாவலர்கள் மக்களின் குறைகளை, மன்னர்களுக்குக் கூறவேண்டிய, மக்கட் சார்பாளர்ளாக இருந்த காலம் அது. எனவே கிள்ளி வளவனிடம் நேரில் சென்று, மக்களின் குறைகளை எடுத்துக் கூறி, அவர்களின் துயர் தீர்க்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. இவ்வாறாக நாகனார் பாடியதாக ஒரே ஒரு பாடல்மட்டும் புறநானூற்றில் காணப்படுகிறது. ஒரே பாடலாயினும் ஒப்பற்ற பாடல் அது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை வெள்ளைக்குடி நாகனார் பாடி பழஞ்செய்க் கடன் வீடு கொண்டது – என்பது இப் பாடலின் அடிக்குறிப்பு. பழஞ்செய்க்கடன் – என்பதால், நீண்ட நாளாய் வரி கட்ட முடியாமல் தவித்தமை தெரிகிறது. வீடு கொண்டது – என முடிவதால், வேந்தன் இவரது அறிவுரையை ஏற்று,வரியைத் தள்ளுபடி செய்தான் என்று தெரிகிறது.

நளிஇரு முந்நீர் ஏணி யாக
வளியிடை வழங்கா வானம் சூடிய
மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவருள்ளும்
அரசெனப் படுவது நினதே பெரும!

செறிந்த கரிய கடலே எல்லையாகக் கொண்டதிவ்வுலகம். மேலே காற்றுமண்டலமும் இல்லாத வானத்தை உச்சியிற் கொண்டது. தண்ணிய நிலம் சூழ்ந்த தமிழ் நாட்டுக்குரிய, முரசு முழங்கும் படையினையுடைய மூவேந்தருள்ளும் 'அரசு' எனப்படுவது நின்னுடையதே! (வானில் குறிப்பிட்ட பகுதிக்கு மேலே, காற்றில்லாத மண்டிலம் உண்டென்று கூறுவது, இன்றைய அறிவியலை நினைப்பூட்டுகிறது).

அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இயங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர்பு ஊட்டத்
தோடுகொள் வேலின் தோற்றம் போல
ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே, அத்தை!

விளங்கும் கதிர்களையுடைய கனலி – சூரியன் நான்கு திசையினும் தோன்றினாலும் ஒளியுடைய வெள்ளிமீன் தென்திசையில் சாய்ந்தாலும் (தெற்கே சாய்ந்தால் மழை பெய்யாது), அழகிய தண்ணிய காவிரிநீர் வந்து, பல கால்களாகப் பிரிந்து உணவைத் தரும். அதனால் வேல்களின் தொகுதியை வரிசையாக நட்டதுபோல அசையும் கரும்புகளின் வெண்பூக்களையுடைய நின் நாடே நாடெனப்படுவதாகும்! (அத்தை – அசைநிலை)

இவ்வாறு வேந்தனை மிக உயர்த்திச் சொல்லி, அவனைத் தன் பக்கமாகத் திருப்பி, தான் சொல்வதைக் கேட்க வைக்க முயல்கின்றார், நாகனார்.

ஆங்க,

நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே!

நினவ கூறுவல்! எனவ கேண்மதி!

அவ்வாறான சோழ நாட்டுச் செல்வத்தைப் பெற்ற, பெருமை மிகு வேந்தே! நினக்குச் சில செய்திகள் கூறுவேன்! யான் சொல்ல விரும்பும் என் சொற்களைக் கேட்பாயாக!

அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதன்எளியோர் ஈண்டு
உறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே!

கிள்ளிவளவன் மக்கள் எளிதில் தன்னிடம் வந்து குறைகளைக் கூற முடியாதபடி, கடுமையாய் இருந்தான் போலும். அவனைக் 'காட்சிக்கு எளியனாதல் வேண்டும்' என்று அறவுரை கூறுகிறார் நாகனார். அறமே ஆட்சி செய்தாற் போல, செங்கோலாட்சியை மேற்கொண்டு, மக்கள் முறைவேண்டி வந்த பொழுது, எளிமையாய்க் காணக் கூடியவராயின் அவர்கள் மகிழ்வர். மழைவேண்டுமென எண்ணும் பருவத்தில் மழை பெய்ததுபோல அவர்கள் இன்புறுவர். இவ்வாறு படிப்படியாய்த் தொடங்கியவர், அவன் மனத்தில் பதியும் வண்ணம் கடுமையான கருத்தொன்றையும் அவனுக்கு விளக்குகின்றார்.

ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பின் நடுவுநின் றாங்கு
கண்பொர விளங்கும்நின் விண் பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே, வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ!

மேலே ஞாயிறு ஒளிவீச, திரண்ட முகிற் கூட்டம் அதை மறைத்து ஆகாயத்தின் நடுவில் நின்றதுபோல, கண்ணைக் கவருமாறு விளங்கும்

உன் விண்ணை முட்டும் வெண்கொற்றக்குடை, வெயிலை மறைப்பதற்குக் கொண்டதன்று.

கூர்வேள் வளவனே! அக் குடை வருந்திய குடிகளின் துன்பம் அவர்களைத் தாக்காதவாறு காப்பதற்கு அடையாளமாக அமைந்ததாகும்.

இவ்வாறு ஒரு வேந்தனிடம் கூறுவதற்கு ஒரு பெரிய மனத் துணிச்சல் வேண்டும். 'செவி கைப்பச் சொற்பொறுக்கும்' வேந்தனும் பாராட்டுக்குரியவனே.

**வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்**
**களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை**
**வருபடை தாங்கிப் பெயர் புறத்து ஆர்த்துப்**
**பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை**
**ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே**

உள்ளீடற்ற இளம் பனைமரத்தைத் துண்டு துண்டாக வெட்டி ஆங்காங்கே போட்டது போல, யானைக் கூட்டம் பொருது அழிகின்ற போர்க்களத்தில், மேல்வரும் எதிரியின் படையைத் தடுத்து, அது புறமுதுகு காட்டி ஓடுவதைப் பார்த்து ஆரவாரித்து உன்போர்ப்படை தரும் வெற்றியும், உழவரது உழுபடை நிலத்தில் ஊன்றி உழுத சாலில் விளைந்த செல்வத்தின் பயனே! இதை அறிவாயாக!

பொருபடை தரும் வெற்றியும் உழுபடை தரும் வெற்றியினால் ஆவதே என்ற கருத்து மிக ஆழமானது. இன்றைய வேளாண் துறையினரை அரசு வரி வேண்டாம்; வட்டி வேண்டாம், கடன் இரத்து எனத் தாங்குவதன் நுட்பத்தை ஓர்க!

**மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்**
**இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்**
**காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்**

அடுத்து வெள்ளைக்குடி நாகனார் ஒரு நாட்டு மன்னனின் பொறுப்பு யாதென்பதைத் தெளிவு படுத்துகிறார். மழை பொய்த்தாலும் விளைவு குறைந்தாலும் இயற்கை அல்லாத தீய அறிகுறி முதலியன செயற்கையாகத் தோன்றினும், இப் பரந்த உலகினர் நாட்டை ஆள்பவனையே பழிப்பர்.

சேரன் செங்குட்டுவன் பாண்டிய மன்னனுக்கு நேர்ந்த தீவினைப் பயனைக் கேட்டு வருந்தினான்.

மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழைஉயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதகவுஇல் என

(சிலம்பு 25 : 101- 105)

இவ்வாறு பாண்டியனுக்காகச் சேரமன்னன்வருந்தி, பொறுப்புள்ள அரசாட்சியின் இடர்களைக் கூறுகின்றான். பதவியைச் 'சுகபோக நுகர்ச்சியாகக்' கருதுபவர்களுக்கு இது பொருந்தாது. பொறுப்பும் கடமை உணர்ச்சியும் உடையவர்கள் எண்ணும் முறை இது. சோழன் பொறுப்புணர்ந்து நடக்கவேண்டும் என்பதற்காகவே, இவ்வுலகியலை வெள்ளைக்குடி நாகனார் நினைவு படுத்துகிறார்.

அதுநற்கு அறிந்தனை ஆயின் நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின் நின்
அடிபுறந் தருகுவர் அடங்காதோரே (35)

இவ் உலக இயல்பினை நீ நன்கு அறிந்தனையாயின் நீயும், உலகில்

இவற்றை அறியாது தீயவழிகளைக் கூறவாரது சொற்களைக் கேளாது, பகடு (காளை) புறந்தரும் உழவர் பெருமக்களின் குறை களைந்து, குடிமக்களைக் காப்பாயாயின், நின் பகைவர்கள் உன் அடிக்கீழ் வந்து நீ ஏவியதைச் செய்வர்! அத் தகைய சிறப்பு உனக்கு வாய்க்கும் என்றார் நாகனார். கவிஞர்கள் அறிவிக்கப்படாத உலக சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் - என்பது ஆங்கிலக் கவிஞர் ஷெல்லியின் வாக்கு. (Poets are the unacknowledged legislators of the world : P.B. Shelly) சங்கப் புலவர்கள் பலருக்கும் இது பொருந்தும். 'பழஞ் செய்க் கடன்' - வயலுக்காகச் செலுத்த வேண்டிய பழைய வரிக்கடன். அதனை விலக்கியது பற்றிய குறிப்பு, பாடலினுள் இல்லை. இப்பாடலைப் பாடிய காலத்திலேயே, அடியிற் குறிக்கப்பட்ட வரலாறாக இது தோற்றுகிறது.

10

## நிலைத்த பயன்பாடு - மழைநீர்ச் சேகரிப்பு : குடபுலவியனாரின் தொலை நோக்கு

இன்று மழை நீர்ச் சேகரிப்புப் பற்றி நிரம்பப் பேசுகின்றனர். அதன் தேவை இன்று உணரப்படுவது போலவே, பழங்காலந்தொட்டு உணரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே வறண்ட தென்கோடிப் பகுதிகளிலும் நகரத்தார்கள் பகுதிகளிலும் குளம், ஊருணி அமைத்தல் ஒரு பெரிய தருமமாகக் கருதப்பட்டு வந்துளது. ஊருக்கு நான்கைந்து குளங்கள் இருக்கும். கண்மாய்ப் பாசனத்தின் அமைப்பையும் சிறப்பையும் கண்டு, வியந்து வெளிநாட்டவர் ஆய்வு செய்துள்ளனர். சோழ நாடு தொண்டை நாடு போலும் வடபகுதிகளில் மழை கூடுதலாகப் பெய்யும் என்பதால், பெரிய பல ஏரிகளை அமைத்துள்ளனர்.

குடபுலவியனார் என்ற புலவர் புறநானூற்றில் பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றி இரண்டு பாடல்கள் பாடியுள்ளார் (18,19). அதில் ஒரு பாட்டு, இன்றும் என்றும் பயன்படும் பாட்டு.

உண்மையிலேயே ஓர் ஆட்சியாளர் செய்யவேண்டிய பணியை. மிக நல்ல முறையில் எடுத்துரைத்து, சோழ வேந்தனை வாழ்த்துகிறார்; இது வெற்றுப் புகழாக அல்லாமல், வெற்றிப் புகழாக அமைகிறது.

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியன்ஞாலம்
தாளில்தந்து தம்புகழ் நிறீஇ
ஒருதாம் ஆகிய உரவோர் உம்பல்!

முந்நீராம் கடலால் சூழப்பட்ட பரந்துபட்ட உலகம் முழுவதையும் தம் முயற்சியால் வென்று, தம்புகழை நிலைநிறுத்தி, ஒப்பற்றவராகிய வலிமையுடையோர் வழியில் வந்தவனே! (உம்பல் – குடிவழி வாரிசு)

ஒன்றுபத்து அடுக்கிய கோடிகடை இரீஇய
பெருமைத் தாகநின் ஆயுள் தானே!

இம் மன்னன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் எனப்படுவான். இவனே மாங்குடி மருதனாரால் பாடப்பட்ட 'மதுரைக் காஞ்சி'க்குத் தலைவன். இவன் இயற்றிய பாடல் ஒன்றும் புறநானூற்றில் உளது (72). இவனது பெருமை கருதி, ஒன்று என்பதைப் பத்து முறை அடுக்கி, கோடி என்பதை இறுதியில் இணைத்த, 'சங்கு' என்னும் பேரெண்ணினையுடைய அத்தனை ஆண்டுகளாகட்டும் நின் ஆயுள்; அவ்வளவு காலம் வாழ்வாயாக!

நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉம் இனவாளை
நுண் ஆரல் பருவரால்
குரூஉக்கெளிற்ற குண்டகழி
வான் உட்கும் நீள்மதில்
மல்லல் மூதூர் வயவேந்தே!

நிரம்பிக் கிடக்கும் நீரினளவு தாழ்ந்த கிளையிலுள்ள பூக்களை வாளை மீன்களும் சிறு ஆரல் மீன்களும் பருத்த வரால் மீன்களும் ஒளிரும் கெளிற்று மீன்களும் கவ்வித்தின்னும்படியான ஆழமான அகழிகளையும் வானளவு நீண்ட மதில்களையும் உடைய வளம்நிறைந்த பழைய ஊருக்குரிய வேந்தனே! கேட்பாயாக!

செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ ஆகல் வேண்டினும் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும் மற்றுஅதன்
தகுதி கேள் இனி, மிகுதி யாள!

மறுவுலகத்துச் செல்வத்தை விரும்பினும், உலக மன்னவர் தோள் வலிமையை அழித்து ஒரு நீயாக உலகை ஆள வேண்டினும் சிறந்த புகழை இங்கு நிலைநிறுத்த விரும்பினும் பெரியோனே, மற்று அவற்றுக்கான தகுதியைக் கேட்பாயாக!

நீரின்று அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே!

நீரின்றி வாழ முடியாத உடலுக்கு எல்லாம் உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவார். 'உணவின்பண்டம்' என்று சொல்லக் கூடிய உடலுக்கு உணவே அடிப்படையாகும். அவ் உணவு என்பது நிலத்தாலும் நீராலும் விளைவது. எனவே நீரையும் நிலத்தையும் ஒருங்கிணைத்தவர்கள், இங்கு உடலையும் உயிரையும் படைத்தவர் எனலாம்.

வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே, அதனால்
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளா தோரே (18)

விதைத்து விட்டு வான் மழையை எதிர் நோக்கும் வறண்ட நிலம் மிகப் பரந்த இடத்தையுடையதாயினும், அதனை வளப்படுத்த முயலும் அரசனின் முயற்சிக்கு உதவாது. போர் வல்ல சோழனே! அதனால் என் சொல்லை வீணென்றுகருதாது, அலட்சியப்படுத்தாமல் விரைந்து, எங்கெங்கு நிலம் மேடு பள்ளமாக இருக்கிறதோ, அங்கெல்லாம், நீர்நிலை பெருகுமாறு, பெய்யும் மழைநீரைத் தடுத்து நிலைத்திருக்குமாறு செய்பவர்களே தம் புகழை நிலை நிறுத்தியவர் ஆவார்கள்! அவ்வாறு மழைநீரைத் தடுத்தும், ஆற்று நீரை அணைகட்டித் தடுத்தும் நிறுத்தி வைத்துப் பயன்கொள்ளாதவர்கள், இவ்வுலகில் தம் புகழை நிலைநிறுத்தாதவர்களே!

இப் பாடலில் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனத் தொடங்கும் அடி புகழ்பெற்றது.

மழைநீரையோ, ஆற்று நீரையோ தடுத்து நிறுத்திப் பயன் கொள்வதை, மிக அழுத்தமாக வலியுறுத்தும் இறுதியடிகள், இக்காலத்துக்கும் ஏற்புடையதாதலை எண்ணிப் பார்க்க வேண்டும்.

## 11

## இளமையைத் தேடும் முதுமை!

இளமையின் அருமை இளம் பருவத்தில் தெரிவதில்லை. அது கழிந்த பிறகு திரும்ப வருவதில்லை.

வளரவளரத் தங்கள் இளமையைக் காட்டிக் கொள்ள இந்த ஆடவரும் மகளிரும் செய்யும் முயற்சிகள் எத்தனை எத்தனை?'

ஒன்றுமட்டும் உறுதி. தண்டூன்றும் காலம் வந்தபிறகும், அந்த ஓடிப்போன இளம்பருவ நிகழ்வுகளை நினைத்து நினைத்து உள்ளம் ஓடுகிறது, தேடுகிறது.

அவரவர் தத்தம் இளமையை நினைத்ததும் அடைவது, இன்பமா? துன்பமா?

ஓர் அவையப் புலவர் தம் இளமையை நினைத்து ஏக்கத்துடன் ஒரு பாடல் புனைந்துள்ளார். அவர் பெயர் தெரியவில்லை.

**இனி நினைந்து இரக்கம் ஆகின்று! திணி மணல்**
**செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்**
**தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து**
**தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி**

என்ன ஒரு நாடகத் தொடக்கம் பாருங்கள். நாம் இன்று பேசிக் கொள்வது போலவும் இருக்கிறது. "அடடா! அதை இப்பொழுது நினைத்தாலும் வருத்தமாய் இருக்கிறது.!"

சிக்மண்ட் பிராய்டு விளக்கும் உளவியல் போலப் பாட்டுத் தொடர்கிறது. அவையப் புலவர்கள் 'இட்டுக் கட்டுவதை' விட, தோன்றுவதை அப்படியே புனைவார்கள்.

சிறுமிகள் நல்ல களிமண்ணால் செய்த, வேலைப் பாடமைந்த பாவைக்கு (பொம்மைக்கு), தாங்கள் கொய்த மலர்களைச் சூட்டிப்பார்த்து மகிழ்கின்றனர். அவர்கள் பிறகு குளிர்ந்த குளத்திலே புகுந்து, நீச்சலடித்து விளையாடுகின்றனர். அவர்களுடன் கைகோர்த்து தழுவுமிடத்தே தழுவியும், அசைந்தாடுமிடத்தே ஆடியும் விளையாடினோம்.

மறைஎனல் அறியா மாயமில் ஆயமொடு - ஒளிவு மறைவு அறியாத, களங்கமற்ற இளையர் கூட்டம் அது. அவ்வாறு ஆடும் பொழுது அக் குளத்தினில் மூழ்கி, அடியிற் போய், மணலை அள்ளிக்கொண்டு மேலே வந்து காட்டி, ஆயத்தாரை - தோழர் தோழியர் கூட்டத்தாரை வியக்கவைப்பதில் ஒரு பெருமகிழ்ச்சி.

உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படுகோடு ஏறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடும்எனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானேயாண்டுண்டு கொல்லோ?

குளக் கரையில் ஒரு பெரிய மருதமரம், அதன் உயர்ந்த நீளமான கிளை ஒன்று, நீர்த்துறையின்மேல் வளைந்து, தாழ்ந்து உளது. நீரின்மேல் படுமாறு அதன்மீது கிடக்கும் அந்தக் கிளையைப் பற்றிக் கொண்டு ஏறி, மருதமரத்தின் உச்சிக்கே போனேன். மிகுந்த ஊக்கத்தோடு கரையிலுள்ளவர் பார்த்து வியக்கவும், குளத்தின் மேற்பரப்பு நீர் குழிபோல் ஆழ்ந்து சிதறவும், அந்த ஆழமான நீர்நிறைந்த குளத்திலே 'துடும்' எனக் குதித்து விழுந்தேன். விழுந்து, அதன் அடியிற்போய், அங்குள்ள மணலை அள்ளிக்கொண்டு மேலே வந்து, எல்லோரும் அறியக் காட்டினேன். என்ன ஆகுமென்பதை எல்லாம் சிந்திக்காத அந்த இளமைப் பருவம் நினைவுக்கு வருகிறது.

தொடித் தலை விழுத்தண்டு ஊன்றி, நடுக்குற்று
இருமிடை மிடைந்த சில சொல்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே (243)

பூண்பிடித்த வலுவான கைத்தண்டினை ஊன்றிக்கொண்டு, நடுக்கத்தோடும், இடையிடையே இருமிக் கொண்டும் சிலவாய

சொற்களைத் தடுமாறிப் பேசிக்கொண்டும் நடக்கும்படியான முதுமை வந்துவிட்டது. இத்தகைய மிக மூத்த அகவையினராகிய நமக்கு, இளமை எங்கே திரும்பிவரப்போகிறது?

அளிதோ தானே, யாண்டு உண்டு கொல்லோ?
இனி நினைந்து இரக்கமாகின்று!

அந்த இளமைப் பருவம், எங்கு போனதோ? மிகவும் இரங்கத் தக்கதாகிவிட்டது! இனி அதனை நினைத்து நினைத்து இரக்கவுணர்வே மிகுகின்றது.

தொடித்தலை விழுத்தண்டு – முதுமையில் கம்பு ஊன்றி நடக்கும் காட்சியைக் காட்டி, முதுமையைக் கண்முன் நிறுத்தும் இத்தொடரால், இப்பாடலைப் பாடியவர்க்குப் பெயர் சூட்டிவிட்டனர், 'தொடித்தலை விழுத்தண்டினார்' என!

## 12

## ஒவ்வொரு நாளும் 'வாழ்நாள்' ஆகுக!

மனிதனின் வாழ்நாள் வரையறுக்கப்பட்டது. ஒருவர் பிறக்கும் போதே, 'தனக்கு இத்தனை ஆண்டுகள், மாதங்கள், நாள்கள்' மட்டுமே வாழ்நாளாக வரையறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து விட்டால் அவர் தம் நாள் ஒவ்வொன்றையும் ஏதேனும் ஒரு பயனுடையதாகக் கருதி எண்ணி எண்ணி வாழ்வார்.

முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்
வாழ்நாள் வகைஅளவு அறிஞரும் இல்லை (நற். 314)

காலம் கழிந்துவிட்டால், முன்னைய இளமையை – அழிந்தும், என்ன பாடு பட்டும் 'உயிரை விட்டு' முயன்றாலும் திரும்ப அடைதல் இயலாது. பாலைக் கலியும், 'அரிதரோ சென்ற இளமை தரற்கு' என்று கூறும்.

நாம் எத்தனை விதத்தில் எத்தனை முறையில் நம் வாழ்நாளை வீழ்நாளாக்குகின்றோம். தேவையற்ற முறையில், சில சடங்குகளை நீட்டிக்கின்றோம். நம் மேடைப் பேச்சு நாகரிகம் பிற உலகினர் காணாத பெருங்கூத்து. ஒலிபெருக்கியைத் தொட்டால், நிறுத்த நினைப்பின்றிப் போகின்றோம். நம் நேரம் மட்டுமா வீணாகிறது. கேட்கவந்த ஐந்நூறு அறுநூறு பேர்களுடைய வாழ்நாட் பொழுதையும் வீணடிக்கின்றோம்.

அன்று ஒருநாள், எவ்வாறோ மேற்பதவிபெற்ற ஒருவர் காலை பத்து மணிக்கு வரவேண்டும், ஒரு விழாவிற்கு. இருநூறு பேர் சரியாகப் பத்து மணிக்கு வந்து காத்திருந்தனர். அவர் பன்னிரண்டு மணிக்கு வருகின்றார். சரியாக இரண்டு மணி நேரம் விழா ஏற்பாட்டாளர்கள், வந்திருந்த அவையோரைக் காக்கவைத்தனர். இஃது எவ்வாறு பொருந்தும்? அவையோ திறந்தவெளி, வெப்பம் தாக்குகிறது. இரண்டு மணியை இருநூறு பேரின் வாழ்நாட் கூறுடன் பெருக்குங்கள் (200 x 2 மணி) 400 மணிநேரம் வீணடிக்கப்படுகிறது. இப்படியே கணக்கிட்டால், சிலர் செய்யும் ‘காலக் கொலை’ விளங்கும்.

ஒரு புலவர் பெயர் பேரெயில் முறுவலார்; அவர் நம்பி நெடுஞ்செழியன் என்ற பாண்டியமன்னன் இயற்கை எய்தியபோது, அவனைப் பற்றிப் பாடினார்.

ஒருவர் உயிரோடு இருக்கும்போது பாடினால் பரிசாகப் பொன் எல்லாம் கிடைக்கும். ‘கையறு நிலை’ யாக இறந்தபின் பாடுவன நன்றியுணர்வின் வெளிப்பாடாகும். அவை பேரும் புகழும் தரும்.

புறநானூற்றில் வரும் பாடல்கள் ஒப்பற்றவை. நம்பி நெடுஞ்செழியன் நன்கு நிறைவுபெற வாழ்ந்தானாம்; ஒரு குறையுமின்றித் திகழ்ந்தானாம். அவனுக்கென வரையறுக்கப்பட்ட வாழ்நாள் அனைத்தையும், மன நிறைவடையுமாறு வாழ்ந்து முடித்தவனாதலால், “அவனைப் புதைத்தாலும் புதையுங்கள்! எரித்தாலும் எரியுங்கள்! அதனால்

இனி எவ்வாறாயினும் – என்ன செய்யினும் செய்யுங்கள்! அவன் நிறை வாழ்வு வாழ்ந்தவன்! அதுபோதும்!" என்று கூறுகிறார் புலவர்.

தொடியுடைய தோள்மணந்தனன்
கடி காவில் பூச்சூடினன்
தண் கமழும் சாந்து நீவினன்
செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை உயர்பு கூறினன்

முதல் அடி அவன் மகளிரை மணந்த இன்பச் சிறப்பைக் கூறுகிறது. (தொடி – வளையல்) அடுத்த இரண்டு அடிகள் அவன் மகிழ்ச்சியாக வாழ்ந்ததை உரைக்கின்றன. (கடிகா – மலர் மணம் கமழும் பூங்கா. சாந்து – சந்தனம். நீவுதல் – மென்மையாகத் தடவுதல்)

அடுத்தவை அவன் வலிமை கூறுவன. பகைத்தவரை அவர் குடிவழி அழியுமாறு வென்றனன்; நட்புப் பூண்டவரை உயர்த்திப் புகழ்ந்தான்.

வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக் கூறலன்
பிறரைத் தான் இரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன்
வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்

வலியவர்க்குத் தாழ்ந்து அவர் சொற்படி நடவான்; மென்மை மிகு எளியவரென எண்ணி அவர்முன் தற்பெருமை பேசான். பிறரிடம் சென்று இவன் இரந்ததில்லை; இரந்து தன்பால் வந்தவர்க்கு இல்லை என மறுத்தறியாதவன்.

மூவேந்தர் கூடிய அவையத்தில், தனது ஓங்கு புகழுடன் விளங்கத் தோன்றுவான்.

வருபடை எதிர் தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்
கடும் பரிய மாக் கடவினன்
நெடுந்தெருவில் தேர் வழங்கினன்
ஓங்கியல் களிறூர்ந்தனன்

எதிர்த்துவரும் பகையைத் தடுத்து நிறுத்தினான். புறங்காட்டி ஓடிப்போகும் படையை, விரட்டிப் போகாமல், அதனைப் புறங்கண்டு நிற்பான். விரைந்தோடும் குதிரைகள் மீதேறிச் செல்லுவான். பெரிய தெருக்களில் தேரைச் செலுத்தி வலம் வருவான். உயர்ந்த தோற்றமுடைய யானை மீதேறியும் செல்லுவான்.

தீஞ்செறி தசும்பு தொலைச்சினன்
பாண் உவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழி விடுத்தனன்
ஆங்குச்
செய்பவெல்லாம் செய்தனனாகலின்!
இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படுவழிப் படுக இப் புகழ்வெய்யோன் தலையே (239)

தீம்செறி தசும்பு - இனிமை தரும் மதுக்குடங்கள். கேட்பவர்க் கெல்லாம் வீசினானாம். பாணர் குடும்பப் பசி தீர்த்தானாம். வெறும் வாய்ப்பேச்சால் மயக்கிப் பேசுவதை விடுத்தானாம். தன் வாழ்நாளில் செய்யக் கூடியன எல்லாவற்றையும் செய்து வாழ்ந்து முடித்தானாம்.

இனி என்ன? புகழை விரும்பி நிறுத்திவிட்டுச் சென்ற அவனது உடலை மண்ணில் இடுக அல்லது தீயிலிடுக! எதுவாயினும் செய்து கொள்ளுங்கள்! இவற்றால் எக்குறையும் இல்லை!

இவற்றைத் திரும்பப் பாடிப் பாருங்கள்!

தொடியுடைய தோள் மணந்தனன்
கடி காவில் பூச்சூடினன்
தண்கமமும் சாந்து நீவினன்

முதல் மூன்று அடிகளும் அவன் சந்தனம் பூசி, பூச்சூடி, காதல் மனைவியுடன் வாழ்ந்த இன்ப வாழ்வின் முழுச்சிறப்பையும் சுருங்கச் சொல்லும் குறியீடுகள்.

செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை உயர்பு கூறினன்

இவை அவனது வீரமும் ஈரமும் பற்றிய, முழுவாழ்வின் சிறு குறியீடுகள்.

வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்

அவனது பெருமித வாழ்வின் குறியீடு இது. இவ்வுலகம் 'வாழ்ந்தார்க்கு மாரப்படிப்பது'. மெலிந்தவரை, நலிந்தவரைக் கீழ்மையாக எண்ணி, தம் புகழ் பாடிச் செருக்குடன் நடப்பது.

நம்பி நெடுஞ்செழியன் இவர் வலியவர், செல்வர், மேம்பட்டவர் என எண்ணி, அவர்பின் நின்று, அவர் புகழ்பாடி, அவர் ஏவியதைச் செய்து, தன்னலம் தேடி அலையும் இக்காலக் 'காக்கைக் கூட்டம்' போல்பவன் அல்லன் என்பது குறிப்பு .

மெலியவர்முன் தற்செருக்குடன் நடந்து, தான் மேலானவன் எனப் பகட்டுவது அவன் பண்பன்று.

சங்கக் கவிதைகள் இதில் நிகரற்றவை; முதிர்ந்தவை; தோண்டக் கிடைக்கும் பொற்சுரங்கம் போன்றவை.

இன்றைய புதுக் கவிஞர்கள் சங்கப் பாடல்களைப் படிக்க

வேண்டும்; இன்றைய படைப்பாளிகளுக்கு இவற்றின் அறிமுகமும் ஆழ்ந்த பயிற்சியும் வேண்டும். இருந்தால் இவர்கள் படைப்புலகின் உச்சிக்குப் செல்வார்கள்!

இன்றைய எழுத்துலகில், சுயமாக எழுதி முன்னே நிற்பவர்கள் மலையாள, வங்காள நண்பர்கள், அவர்களிடம் இக் கவிதைச் செல்வத்தை உள்ளதை உள்ளவாறு வழங்கினோமேயானால், பிறகு இங்கிருப்பவர்களுக்கு ஆர்வம் பிறக்குமளவு இவற்றின் சிறப்பு உயரும்.

## 13

## அவலத்தைப் பிழிந்திட்ட சாறு!

அந்த ஊரில் ஒருவர் முகத்திலும் ஈஆடவில்லை. பகலிலேயே இருள் சூழ்ந்தது போன்ற பேரவலம். அவரவர் வீட்டில் இழவு நேர்ந்தது போன்ற மனநிலை. ஏன்?

மறவர்களை வெல்லும் ஆண்மையாளன். வன்மை மிக்க கொடையாளன். ஒல்லையூர் நாட்டை ஆண்ட வல்வேற்சாத்தனை, அந் நாட்டிலுள்ளார் அனைவரும் நேசித்தனர்.

திடீரென அவன் மாய்ந்தபோது, நாடே துக்கத்தில் ஆழ்ந்தது ஒருவர்கூட தம்மை அலங்கரித்துக் கொள்ள நினைக்கவில்லை. சாவை 'இழவு' என்றான் தமிழன். பிற இழப்புக்கள் ஏதேனும் ஒரு வகையில் மீட்கக் கூடியன. இறப்பு ஒன்றே மீட்க முடியாத – திரும்ப வராத ஒன்று.

எல்லோரும் வாழ நல்லவனாக வாழ்ந்த ஒல்லையூர் நாட்டுத் தலைவன் மாய்ந்த அவலத்தை, குடவாயில் கீரத்தனார் ஆறே அடிகளில் கூறியிருக்கும் பாநயம் அவலத்தை – அமிழ்தமாக்கி நிலைபெறச் செய்துவிட்டது.

**இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்**
**நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்**

பாணன் சூடான், பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ? ஒல்லையூர் நாட்டே (242)

ஆடவர் - மறவர், வீரர். வேலெறிதலில் வல்லவன். பிறர்க்கு உதவும் பெருந்தகையாளன் மாய்ந்ததால், இளையவர்களோ சூட மாட்டார்கள்; வளைக்கை மகளிரோ பூக்கொய்ய மாட்டார்கள். பாணனும் பாடினியும் அணிந்து கொள்ள மாட்டார்கள்.

இப்படி யாருமே பயன்படுத்தாத இவ் அவலமிகு நேரத்தில் முல்லை மலரே, நீயும் ஏனோ பூத்திருக்கின்றாய்?

முல்லையும் துக்கம் கொண்டாடாது ஏனோ பூத்துளது என்ற குறிப்புமுளது. 'முல்லையும் பூத்தியோ' என்ற அரை அடியிலேயே, அவலத்தைப் பிழிந்திட்ட சாறு புலனாகிறது.

## 14

## அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்!

தமிழை முழுவதும் கற்றறிந்ததற்கு அதுவும் பொருந்தும்! எதுவும் பொருந்தும்? யாருக்கு?

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை - என்பவன் சேரவேந்தன்.

ஔவையாரால் புகழப் பெற்றவன் அதியமான் நெடுமான் அஞ்சி. இவனை அஞ்சி என்றும் எழினி என்றும் அழைப்பர். இவன் மகன் பெயர் பொகுட்டெழினி. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி தந்து, அவரால் வாழ்த்தப் பெற்றவன். கடையெழு வள்ளல்களுள் ஒருவன். இவன் தலைநகரம் தகடூர். அங்கு குதிரைமலை என்பதிருந்தது. இவனைப் பாடியவர்கள் : ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன்முடியார்.

ஔவையார் அஞ்சியின் அவைக்களப் புலவர் போல் விளங்கியவர். அஞ்சியைப் பற்றி இவர் பாடிய 23 பாடல்களும், அம் மன்னனை, இன்றும் நினைவு கூர வைக்கும் உருச்சித்திரங்களாகும்.

இவனும் சேரர் குடியினன்; பனம்பூ மாலையை உடையவன் அஞ்சியையும், அவன் மகன் பொகுட்டெழினியையும், பெருஞ்சேரல் இரும்பொறை போர் தொடுத்துத் தோற்கடித்ததால், 'தகடூர் எறிந்த' என்று அழைக்கப் பெற்றுள்ளான் (பதிற்றுப் பத்து : எட்டாம் பத்துப் பதிகம், புறம் 230)

மோசி கீரனார் என்பவர் ஒரு சிறந்த தமிழ்ப்புலவர். மோசி சாத்தனார், மோசி கொற்றனார் என்னும் புலவர் பெயர்களை நோக்க 'மோசி' என்பது இவரது ஊர்ப் பெயராதல் கூடும். கீரனார் என்பது இயற்பெயர். சங்க காலத்தில் இப் பெயருடையார் பலர் இருந்துள்ளனர். சங்கறுத்து வளையல் முதலிய அணிகள் செய்து வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. இவர் பாடியனவாக 9 பாடல்கள் கிடைக்கின்றன. (அகம். 392, குறு. 59,84, நற். 342, புறம். 50,154,155,156,186)

அக் காலத்தில் 'முரசு கட்டில்' என்பது, முரசு வைக்கும் அழகிய 'கட்டிலாகும்'. முரசு அரசுச் சின்னங்களில் ஒன்று. பகைவரை வென்று அவரது முரசு, வெண்கொற்றக்குடை, மணிமுடி இவற்றைக் கைக்கொள்வர்.

பகைவரது பட்டத்து யானையை வென்று, அவ்யானையின் தோலினால் 'முரசு'' செய்வது ஒரு மரபாகும்.

இம் முரசுகட்டிலை, அரசு கட்டிலுக்கு நிகராகக் கருதியுள்ளனர்.

மோசி கீரனார் ஒருமுறை, பெருஞ்சேரல் இரும்பொறையைக் காண, நீண்ட தூரம் நடந்துவந்தார். அங்ஙனம் வந்த களைப்பால் எங்கேனும் படுக்க எண்ணினார். அந்நேரம் பார்த்து, முரசினை நீராட்டித் தூய்மை செய்வதற்காகக் கொண்டு போயிருந்தனர். அதனால் வறிதே இருந்த முரசு கட்டிலில் படுத்து உறங்கிவிட்டார்.

முரசினைத் தூய்மை செய்துவந்த மறவர்கள்,கட்டிலில் யாரோ படுத்துறங்குவதைக் கண்டு பதைத்துப் போயினர்.அதனை உடனே மன்னனுக்கு அறிவித்தனர்.

அது அரசுக்கு எதிராகச் செய்த கடுங்குற்றம் எனக் கருதப்படுகிற காலம் அது. இதனைக் கேட்ட இரும்பொறை சீற்றம் கொண்டு, உடைவாளுடன் அங்கு வந்தனன். அதில் படுத்திருப்பவர் புலவர் என்று கண்டான். உடனே தன் உடை வாளைச் சுருக்கிக் கொண்டான். வெண் கவரி கொண்டு வரச் சொல்லி, புலவர் எழுந்துணையும் கவரி கொண்டு வீசினான். சுற்றிநின்ற மறவர்கள் வியப்பிலாழ்ந்தனர். விழித்தெழுந்த மோசிகீரனார் கண்களில் நீர் தளும்பியது. வேந்தனை வணங்கினார். உடனே ஒரு பாடல் மூலம், அவ் வேந்தனது அரிய செயலைப் பதிவு செய்து வாழ்த்திப் பாடினார்.

'நீண்ட நன்கு இறுகக் கட்டப்பட்ட தோலினால் ஆன கருநிறப் பக்கம் பொலிய, மயிலின் தோகை கட்டப் பெற்றுள்ளது. பொன்னிற தளிரொடு கூடிய உழிஞைப்பூ மாலை சூட்டப்பட்டுள்ளது. இத்தகை முரசத்தை, குருதிப் பலி கொடுத்து வழிபடுவர். அச்சந்தரும் அம் முரசு நீர்த்துறை சென்று, நீராட்டித் தூய்மை செய்து வரப் போனவர்கள் திரும்பிவருமுன் யான் அங்கு வந்தேன்; நடந்துவந்ததால் மிகவும் களைப்புற்றிருந்த யான், எண்ணெய் நுரையை முகந்தாற்போன்ற, மெல்லிய அழகிய பூக்கள் தூவப்பெற்ற சேக்கையைக் கண்டதும், அது 'இன்னதென அறியாது' – என்னை மறந்து அதிற் படுத்து உறங்கிவிட்டேன்.

இம் மாபெரும் குற்றம் செய்த என்னை, இரண்டு துண்டாக வெட்டக் கூடிய, வாளை எடுத்து, உடனே யான் ஒரு புலவன் என்பதை அறிந்ததும் வாளைச் சுருக்கி விட்டனை.

அம்மட்டோ! அதனுடன் அமையாது என் அருகே வந்து, உனது வலிமைமிக்க முழவனைய தோளைத் தூக்கி, சாமரை கொண்டு, தண்ணெனக் குளிரும்படி, யான் துயிலெழுங்காறும் வீசிநின்றனை!

இங்கு புகழ்பட வாழ்ந்தவர்க்கு அல்லது அவணதாகிய மேலுலகிலே நல்வாழ்வு இல்லை என்பார் கூற்றை, நீ நன்கு விளங்கக் கேட்டதனாற் போலும் இப்பண்புமிகு செயலைச் செய்தனை!

உன் வெற்றி வாழ்க!

இவ்வாறு பாடினார் புலவர்.

மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய, மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்

இதுவரை முரசம் பற்றியது. வள்பு - தோல். அது நீண்ட வாரால் நன்கு இழுத்துக் கட்டப்பெற்றுள்ளது.

மை படு மருங்குல் - வயிரம் பாய்ந்த கரிய மரத்தினாற் செய்ததின் பக்கத்தில். மஞ்ஞை - மயில். மயிலிறகு அழகுக்காக அணியப் பெற்றுளது. பொன்னிறமான உழலைத் தழைமாலை சூட்டப் பெற்றுளது. பகைவரது மதிலைத் தாக்குவதற்கு அடையாளமாக அணிவது உழிஞை. குருதி வேட்கை - என்பதால் முரசுக்குக் குருதிப் பலி கொடுத்து, வழிபட்டனர் எனத் தெரிகிறது.

மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரைமுகந்தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னை

மண்ணுதல் - நீரால் குளிப்பாட்டுதல், தூய்மை செய்தல், 'எண்ணெய் நுரையை முகந்தது போன்ற, மெல்லிய பூஞ் சேக்கை' - என்றதுமே அச் சேக்கையின் (மரத்தாற் செய்த கட்டில்) தன்மை நம்மால் உணரப்படுகிறது. அதில் அறியாது ஏறிப் படுத்துவிட்டாராம் புலவர்.

தெறுவர
இருபாற் படுக்கும்நின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்

இதனைக் கண்டு சீற்றங்கொண்டு, என்னை இருகூறாக வெட்டக் கூடிய உனது வாளினை வீசாது கைவிட்டமையை எண்ணும்போது, அது 'நற்றமிழை நன்கு பழுதற முற்றக் கற்றதற்குக் கிடைத்த தக்க பரிசாகும்'. அதுவே போதுமெனினும் நீ அதனுடன் அமையாது, என் அருகே வந்தனை.

அதனொடும் அமையாது, அணுகவந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசியோயே!

அருகில் வந்து நின் வலிமை மிக்க முழவு போன்ற தோளினை உயர்த்தி, என் மீது குளிர் காற்றுப் படும்படி, நான் தூயிலெழுந்துணையும் வீசியோயே!

வியலிடம் கமழ
இவணிசை யுடையோர்க்கு அல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசில் நீ, ஈங்கிது செயலே! (50)

அகன்ற இவ்வுலகெலாம் பரவும்படி, இங்கு புகழ்பட வாழ்வோர்க்கல்லது, அவணதாகிய மேலுலகில் நல்வாழ்வு அமையாது என நன்கு விளங்கக் கேட்டதனாற் போலும் நீ இச் செயலைச் செய்தனை! குருசிலே! நீ வெற்றி பெற்று வாழ்வாயாக!!

அடிக்குறிப்பு : முரசு கட்டில் அறியாது ஏறிய மோசி கீரனைத் தவறு செய்யாது, அவன் துயிலெழுந் துணையும் கவரி கொண்டு வீசியானை அவர் பாடியது.

இப் பாடலில் 'அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்' என்ற தொடர், அடிக்கடி எடுத்தாளப் பெறுவதாகும்.

தமிழை நன்கு கற்றவர்க்கு மதிப்புத்தர வேண்டும். அன்று தந்துள்ளனர்; இன்றும் இனியும் தருவதால் தமிழ் வாழும், தமிழர் வாழ்வர் என்ற கருத்துப் பெறப்படுகிறது.

போரென வரும்போது, ஒரு குடிப்பிறந்தவர்களே ஒருவரை ஒருவர் அழித்து வாழ்ந்தனர் என்பதைத் தகடூர் எறிந்த நிகழ்வாலும், புலமை மிக்கவரெனில் அவர்பால் தண்ணிய அருளைப் பொழிந்தனர் என்பதைக் 'கவரி வீசிய நிகழ்வாலும் அறிகின்றோம்.'

இம் முரண் தமிழரிடையே அன்றும் இன்றும் என்றும் உளதாயிற்று. உறவுடையார் பகைமையினாலன்றோ, காட்டிக் கொடுக்கப்பட்டுத் 'தமிழ் ஈழம்' இன்று தடுமாறியுளது. விடியும் காலம் வரும் என்பதற்கும் சங்க காலமே சான்றாகும்.

## ஔவையும் அதியனும்

சங்க காலப் பெண்பாற் புலவர்களில் ஔவையார் தலை சிறந்த பெரும்புலவர். அவருடைய பாடல்களை அருந்தமிழ்க் கனிகள் எனலாம்.

ஔவையார் – என்றால் அம்மையார் என்றே பொருள். அவரது இயற்பெயரன்று அது. இன்ன பெயருடைய ஔவையார் என்று சொன்னதை மறந்து, பெருமை கருதி அதுவே பெயராகிவிட்டது.

சங்க காலப் பாணர்களும் புலவர்களும் ஓரிடத்தில் நிலையாக வாழ்ந்ததைவிட, ஊர் ஊராய் விழா நடக்கும் இடங்கள் நோக்கிச் சென்று, நாடோடிகளாகவே வாழ்ந்துள்ளனர். 'சாறு கழி வழிநாள் (சாறு – விழா), சோறு நசையுறாது' வேறு ஊர்க்குச் சென்று விடுவர். ஆடலும் பாடலும் கூத்தும் இசையும் வல்லராய் மக்களையும் மன்னரையும் மகிழ்விப்பதே அவர்கள் 'தொழிலாக' இருந்தது.

இன்று உலகம் விரும்பும் நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்ல, அற்புத நிகழ்வுகளை உலகிற்குணர்த்த, மாந்தர், மன்னர்களின் ஆற்றல் திறமை அருமை பெருமைகளை வெளிப்படுத்த எத்தனையோ ஊடகங்கள் உள்ளன. செய்தித்தாள், இதழ்கள், சின்னத்திரை, வானொலி என அடுக்கலாம். அன்று இப் பாணரும் புலவருமே ஊடகப் பணிகளைச் செய்ததால், மக்களும் மன்னரும் அவர்களைப் போற்றினர். ஔவையும், பாணர், விறலியர் வழிவந்த புலவரோ என எண்ணத் தோன்றுகிறது.

அதியமான் நெடுமான் அஞ்சி சேரர் குடிவழிச் சிற்றரசன். பனம்பூ மாலையை உடையவன். 23 புறப் பாடல்களில் ஔவையார் அவனைப் படம் பிடித்துத் தந்துள்ளார். பாரியும் கபிலரும் போல, கோப் பெருஞ் சோழனும் பொத்தியாரும் போல, அதியனும் ஔவையாரும் இணைபிரியா நட்பினராக இருந்தனர். பகையரசர்களுடன் அதியன் போரிடும் போதெல்லாம், ஔவை அதியமான் பக்கம் நின்று எதிர்த்தவர்களைப் பழித்துப் பாடியுள்ளார்.

முதன் முதலாக ஔவையார் தம் இசைக் குடும்பத்துடன் அதியனைச் சந்தித்த பொழுது, அவன் பரிசில் தரவில்லை போலும். உடனே சீற்றங்கொண்டு ஔவை பாடியுள்ளார். பிறிதொரு முறை அதியன் பரிசில் தரக் காலம் தாழ்த்துள்ளான். பரிசில் கொடுத்தால், உடனே போய் விடுவார் என்பதால் காலம் தாழ்த்திருக்கலாம். அப்போதும் ஒருபாடல் பாடியுள்ளார். பிற இடங்களில் எல்லாம் அதியனது அவைக் களப் புலவராகவே இருந்து பாடியுள்ளார்.

## 15

## ஔவையின் பெருமிதம்

அதியமான் நெடுமான் பரிசில் நீட்டித்தானைப் பாடியது என்ற அடிக்குறிப்புடன் கூடிய இப்பாட்டு, அவரது புலமைமிகு பெருமிதத்துடன் கூடிய சீற்றத்தைப் புலப்படுத்துகிறது.

வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழிவித்தித் தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!

வாயிலோனிடம் ஏன் கூறவேண்டும்? மன்னனைப் பார்க்கவிடவில்லையா? பரிசில் வாழ்க்கை பற்றிப் பல பாடல்கள் உள. அது தனியே தொகுத்தற்குரியது. 'வரிசைக்கு' வருந்துதல் – தம் தரமறிந்து பரிசு பெற விழைதல்.

பிறர்க்கு அறிவுரை கூறும் இவ் வாழ்வை, விதைத்து அறுவடை செய்யும் உழவுடன் ஒப்பிடுவது சங்க நூல்களில் பல பாடல்களில் காணப்படுகிறது. வில்லேருழவர், சொல்லேருழவர் என்பார் திருவள்ளுவர் (872)

கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்னறியலன்கொல்? என்னறியலன் கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே

விரைந்தோடும் குதிரைகளையுடைய நெடுமான் அஞ்சி, குதிரை மலைத் தலைவன், தன் தகுதியை அறியானா? அல்லது என் தகுதியையேனும் அறிந்திலனா? அறிவும் புகழும் உடையவர்கள் எல்லாம் மாய்ந்துபோய், இவ்வுலமென்ன ஒன்றுமில்லாமலா போய்விட்டது?

அதனால்

காவினெம் கலனே, சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே! (206)

சினம் என்னும் மெய்ப்பாடு (வெகுளி) வெளிப்படும் அழகு, இன்று பாடினும் உள்ளத்தை ஈர்க்கிறது. என்ன பெருமிதம்? உலகம் வறிதாகி விடவில்லை. எங்கள் இசைக் கலன்களை – கருவிகளை மூடினோம்; அக் கலங்களை பையிலிட்டுச் சுருக்கிப் புறப்பட்டுவிட்டோம். எந்தத் திசையில் செலினும், எங்கள் வயிற்றுப் பசிக்கு உணவு கிடைக்கும். கைவல்ல தச்சச் சிறுவர்கள், கையில் கோடரியுடன் காட்டகத்தே சென்றால், அவர்களுக்கு மரத்திற்குப் பஞ்சமுண்டா?

தங்களிடம் புலமை வீறு இருப்பதால், எங்கு போயினும் வாழமுடியும் என்பது கருத்து.

வாயில் காவலன் அறியாமையால் தடுத்திருக்கக்கூடும் . பிறகு அதியன் நடந்ததற்கு வருந்திப் பரிசு கொடுத்திருத்தல் கூடும். இவ்வாறு தொடங்கிய நட்புப் பலநாள் தொடர்ந்தது; பிறகு நிலைபேறானது.

## 16

## ஔவையின் அன்புள்ளம்

முதலில் சீற்றம் கொண்டதற்கு வருந்துவார் போலப் பிறிதொரு பாடலுளது.

ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ!

எத்தனை தடவை, எத்தனை பேருடன் சென்றாலும் முதல்நாள் வரவேற்றது போலவே, விருப்புடன் வரவேற்று உதவுவானாம்.

இழையணி யானை இயல்தேர் அஞ்சி
அதியமான் பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் களிறுதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத்ததுவது பொய்யாகாதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் தானே (101)

நெற்றிப்பட்டம் முதலானவை அணிந்த யானைகளையும் தேர்களையுமுடைய அதியமான் அஞ்சியிடம் பரிசில் பெறும் காலம் நீட்டினும் உடனே கிடைப்பினும் அது கிடைப்பது உறுதி. யானை தன் கொம்புகளிடையே வைத்த கவளம், அதற்குத் தப்பாது உணவாவது போல, அப்பரிசு கையகத்தது; அது பொய்யாக ஆகாது. எனவே பரிசில்பெற வருந்திய நெஞ்சமே! வருந்த வேண்டா! அவன் தாள் வாழ்க!

சங்கப் பாடல்கள் எல்லாம் உதிரிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. மேலே காட்டிய 'வாயிலோயே' பாட்டிற்கு அடியில் 'பரிசில் நீட்டித்து விடத்து' என்று வருகிறது. இதில் பரிசில் நீட்டினும் நீட்டாதாயினும் என்று வருகிறது. முன் பாடியதற்கு வருந்துவார் போல, பரிசில் தவறாது என்றும், 'நெஞ்சம் வருந்த வேண்டா' என்றும் பாடுகிறார்.

இவ்வாறு நடந்த வரலாறு முழுவதும் தெரியவழியில்லை. ஆயினும் ஔவையின் பெருமித உணர்வையும், அஞ்சியின் கொடைக் குணத்தையும் புலவர்கள் சிறிதும் வழுவுதல் கூடாதென எண்ணி வாழ்ந்ததையும் அறிய இப்பாடல்கள் சான்றாகின்றன.

## 17

## அதியனின் ஆற்றலுக்கு ஓர் அளவு கோல்

ஔவையார் அதியமானைப் பற்றிப் புறநானூற்றில் 23 பாடல்கள் பாடியுள்ளார். அதியனின் தோற்றம், வலிமை, பண்பு யாவும் இன்றும் கண்முன் தோன்றும்படி அவை பாடப்பட்டுள்ளன. 'கதிர் விடு நுண்பூண் அம்பகட்டு மார்பு', 'முழவுத் தோள்' (88), 'எழுமரம் கடுக்கும் தாள் தோய் தடக்கை' (90) என்றாற் போல்வன அவன் பருவுடலைக் காட்டுவன.

**களம்புகல் ஓம்புமின் தெவ்விர், போர்எதிர்ந்து**
**எம்முளும் உளனொரு பொருநன் வைகல்**
**எண்தேர் செய்யும் தச்சன்**
**திங்கள் வலித்த காலன் னோனே** (87)

பகைவர்களே! போர்க்களம் புகுதலைத் தவிருங்கள். எம்முள்ளும் ஒப்பற்ற போர் வல்லான் ஒருவன் உளன்.

அவன் ஒருநாளில் எட்டுத்தேர் செய்யும் தச்சன், ஒரு மாதம் முழுவதும் மிக முயன்று உழைத்துச் செய்த தேர்ச் சக்கரம் போன்றவன்.

உடல் வலிமைக்குக் கூறிய கணக்கைப் பலர் ஒப்பிட்டுப் பார்க்கும்படியான, புகழ்பெற்ற பாட்டு இது.

## 18

### தோன்றிற் புகழொடு தோன்றுக

இனி, அவனது ஆற்றலைச் சொல்லும் பாட்டு ஒன்றும் புதுமையானது.

உடைய னாயின் உண்ணவும் வல்லன்
கடவர் மீதும் இரப்போர்க்கு ஈயும்
மடவர் மகிழ்துணை நெடுமா னஞ்சி
இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்றாது இருக்கவும் வல்லன் மற்றதன்
கான்றுபடு கனைஎரி போலத்
தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே (315)

தன்னிடம் நிரம்ப இருந்தால், பிறர்க்கு ஈந்து மீந்ததை மட்டும் தான் உண்பான். இன்றேல் பிறர்க்குக் கொடுத்துவிட்டுத் தான் உண்ணாதும் இருப்பான். பிறர்க்கு ஈயக் கடமைப் பட்டவர்க்கும் மேலாக இவன் பிறர்க்கு ஈவான். எளியோர் துணைவன்.

வீட்டு இறப்பில் செருகிய ஞெலிகோல் மிக அமைதியாய் இருக்கும் (தீக்கடைகோல்). அதுபோல் தோன்றாது அடக்கமாக இருப்பான். போரென்று வந்துவிட்டால், அத்தீக்கடைக் கோலில் தோன்றும் கனன்று எரியும் நெருப்புப் போலத் தோன்ற வேண்டிய நேரம் வந்தால், அவ்வாறு

வலிதாகத் தோன்றவும் வல்லன். இது திருக்குறள் ஒன்றனுக்கு விளக்கம் தரக் கூடிய பாட்டு.

தோன்றின் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (236)

இதற்குப் பிறந்தால் புகழொடு பிறக்க வேண்டும் என்ற உரை பொருந்தாது. ஒரு செயலில் இறங்கினால் புகழுடன் தோன்ற வேண்டும்; இன்றேல் அதில் இறங்காதிருப்பதே நல்லது.

அஞ்சி, ஞெலிகோல் (தீக்கடைகோல்) போலத் தோன்றா திருக்கவும் வல்லன்; போரென்று வெளிப்பட்டுத் தோன்ற வேண்டிய சமயம் வந்தால், அதில் வீரமுடன் தோன்றுவான் என்ற பாடற் சொல்லும் கருத்தும் பொருந்தி வருதல் காணலாம்.

சிற்றரசனேயாயினும் பாரியைப் போல பெரு வேந்தர்களைவிட மிகுந்த கொடைக்குணம் உடையவனாகப்புகழ் பெற்று விளங்கினான். இதுவே இவன்மேல் பெறாமைப் படச் செய்தது. 'கடவர் மீதும் இரப்போர்க்கு ஈயும், மடவர் மகிழ்துணை' (315), உண்டாயின் பதம் கொடுத்து இல்லாயின் உடன் உண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவன் ( 95), 'அலத்தற் காலையாயினும் புரத்தல் வல்லன்' (103) என்பன அவனது வள்ளன்மையைக் காட்டுவன அவன் முன்னோர் வெளிநாட்டிலிருந்து கரும்புப் பயிரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்ததை, விண்ணுலகிலிருந்து கொண்டுவந்ததாகப் பாராட்டியுள்ளனர் (99, 392). இவன் கோவலூரை வென்றான் என்றும் அதனைப் பரணர் பாடினார் என்றும் ஔவையார் குறிக்கின்றார் (புறம் 99).

அதியன் போர்க்களத்திலிருந்து , தனக்கு மகன் பிறந்தான் என்று கேட்டதும், அப்படியே போர்மறவனாம் தோற்றத்துடன் வருவதை ஔவையார் வருணிக்கும் பொழுது, அக்காலத்துப் போர்வீரர்தம் போரடு தோற்றத்தை நேரே காண்கின்றோம். அவன் தவ மிருந்து பெற்ற மகனை,

அதே தோற்றத்தில் வந்து காணும்போது, அவன் போர்க் களத்தில் பகைவரைப் பார்த்த சினம்மிக்க கண் சிவப்பு, தன் மகனைக் காணும்போதும் மாறவில்லையாம்.

செறுவரை நோக்கிய கண், தன்
சிறுவனை நோக்கியும் சிவப்பானாவே (100)

இவ்வாறு அஞ்சியின் திருவுருவை, பல கோணங்களில் படம் பிடித்தாற்போல், நம்மைக் காணவைக்கும் ஔவையார் படைப்புத் திறம் வியப்பளிப்பதாம்.

## 19

### ஔவையின் தூதுரை

அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே பகை முற்றிப் போர் மூள இருந்தது. அப்போது 'அதியமான் நெடுமான் அஞ்சி தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட அவர் பாடியது.'

தொண்டைமான் மனம் நோகாமல் படைக்கல வரிசையைப் பார்வையிட்ட ஔவையார் பாடிய பாட்டு, அக்காலப் புலவர்களின் மன உரத்தைக் காட்டுகிறது.

இவ்வே
பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய்யணிந்து
கடியுடை வியனகரவ்வே, அவ்வே
பகைவர்க் குத்திக் கோடி நுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ! என்றும்
உண்டாயிற் பதங்கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே (95)

உன் படைக் கலன்களாம் இவை மயில்தோகை அணியப்பட்டு மாலைகள் சூட்டப்பட்டு, வலிய திரண்ட கைப்பிடி திருத்தப்பட்டு, நெய்பூசப்பட்டு, காவலுடைய இடத்தில் காட்சிப் பொருள்களாய் உள்ளன. அங்கே அதியனுடையவை இவ்வாறில்லை.

கைவசம் இருப்பின் வருந்தி வந்தவர்க்குப் பசிதீரக் கொடுத்தும், இல்லையாயின் இருப்பதை உடனிருந்து பகிர்ந்துண்ணும் வறிய சுற்றத்தவரின் தலைவனாகிய எம்தலைவன், அண்ணல் எம்கோமானது கூரிய முனையையுடைய வேல்கள், பகைவரைக் குத்தி, முனைக்கூர்மை சிதைந்து கொல்லனது உலைக்களமாம் சிறிய வீட்டிலே கிடக்கின்றன!

இவ்வாறு பாடியது தொண்டைமானுக்கு விளங்கியிருக்கும் இவை போரில் பயன்படுத்தப்படாதவை; அதனால் படைகளும் பயிற்சி அற்றிருக்கும். அதியனோ போரே வாழ்வாக உடையவன். அவன் வேல்கள் போர்க்களத்தில் பயன்படுத்தப் பட்டவை. அவனுடைய மறவர்கள் பயிற்சி மிக்கவர்கள். எனவே அவனுடன் மோதுவதால் பயனில்லை. இந்த ஔவையின் தூதுரையில் புகழ்வது போலப் பழிப்பதாகிய அங்கதம் அடங்கியுள்ளது. இத்தகைய மன உரம் புலவர்களிடம் இருந்தது என்பதைவிட, அவற்றைப் பொறுமையாய் எதிர்கொள்ளும் பேராண்மை அன்றைய மன்னர்களிடமும் இருந்தமையே வியத்தற்குரியதாகும்.

## 20

## யார்கொலோ சதுரர்?

அதியமான் நெடுமான் அஞ்சி வேட்டைக்குச் சென்றான். பெரிய மலையிடையே பள்ளத்தாக்கு ஒன்றில் கருநெல்லிமரம் ஒன்று நின்றது. அம் மலை வாழ்மக்கள், அந் நெல்லிக்கனியை உண்டால் வாழ்நாள் நீடிக்கும் என்றனர். சாவா மூவா நலம்தரும் அமிழ்தமனைய அந் நெல்லிக் கனிகளை, அப் பழங்குடிமக்கள் பறித்துக் கொடுத்து, தங்கள் மன்னனை நீடுவாழ வாழ்த்தினர்.

அஞ்சி ஒரு கணம் சிந்தித்தான். இக் கனிகளைத் தான் உண்ணுவதினும் தன் அவைக் களத்தே வீற்றிருக்கும் ஔவையாருக்குத் தந்தால், அவர் நீண்ட காலம் வாழ்வார். அவரால் தமிழும் தமிழரும் பயன்மிகப் பெறுவரன்றோ என எண்ணினான். அவ்வாறே கொண்டுவந்து, அதன் பயனைக் கூறாது, ஔவையிடம் மிக இயல்பாகக் கொடுத்து உண்ணச் செய்தான். அவர் உண்ட பிறகு, அக் கனியின் சிறப்பைக் கூறினான். ஔவைக்கு உள்ளம் நெகிழ்ந்தது. சாவா நலம் தரும் கனி என்று தெரிந்தும், அதைத் தானுண்டு நீண்ட நாள் வாழ எண்ணாமல், அச் சிறப்பை முன்னதாகக் கூறாமல், தனக்குத் தந்த அஞ்சியின் அன்புள்ளத்தை எண்ணிப் பார்த்தார். ஒரு பாடல் பிறந்தது.

வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே, தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே! (91)

வெற்றி தரும் தப்பாத வாளை ஏந்தியவன். பகைவரை போர்க் களத்தில் வென்று, கழல இட்ட வளையை தோள்பட்டையில் அணிந்த கையினன். ஆர்ப்பரிக்கும் மதுவினை உடையவன். அதியர் குடிக்குத் தலைவன். போரில் வென்று பெறும் செல்வத்தை உடையவன்.

இவ்வாறான சிறப்புக்களை உடைய, பொன்மாலை அணிந்த அஞ்சியே!

பழைமையான ஓரிடத்தில் உள்ள பெரிய மலையிடத்தே இருக்கும் பிளவுபட்ட மலையுச்சியின் மேலே, அணுகுதற்கரிய இடத்தில் இருந்த சிறிய இலைகளையுடைய நெல்லியினது, கிடைத்தற்கரிய இனிய கனியை, அதனை உண்டார் சாவற்ற நீண்ட வாழ்நாளைப் பெறுவரென்ற மறைவுச் செய்தியை முன்னமே என்னிடம் கூறாது, அதனை உன் உள்ளத்தில் மறைத்து வைத்துக் கொண்டு, நான் சாதலின்றி நீண்டநாள் வாழவேண்டுமென்று கருதி, எனக்குத் தந்தனை!

பால்போன்று ஒளிவீசும் பிறையை அணிந்த நெற்றியினையும், நஞ்சண்டதால் நீல நிறம் பொருந்திய கண்டத்தினையும் கொண்ட ஒப்பற்ற இறைவனைப்போல, நீயும் இவ்வுலகில் என்றென்றும் வாழ்வாயாக!

ஔவையார் சொன்ன உவமைதான் உள்ளத்தைத் தொடுகிறது. சாவதற்குக் காரணமாகிய நஞ்சினை உண்டும், சிவன் சிறந்து விளங்குகின்றார். அதனையும் பிறர் வாழும் பொருட்டு அவர் ஏற்றருளினார். தன்னையே ஈகம் செய்யவும் துணிந்து உலகைக் காப்பதன் அடையாளமாகவே 'நீலமணி மிடறு' என்ற படிமம் விளங்குகிறது. இவை அதியனுக்கும் பொருந்தும்படி ஔவையார் குறிப்பாகப் பாடியுள்ளார். அந் நெல்லிக் கனியை அவனே உண்டிருந்தால், இன்று இந் நிகழ்வு நினைவு கூரப்படுமா? உண்மையில் கருநெல்லிக் கனியை ஔவைக்குத் தந்ததன் மூலம், அதியனே 'சாகாவரம்' பெற்று, இன்றும் புகழுடம்புடன் போற்றப்படுகின்றான்.

'தந்ததுஉன் தன்னைக்
கொண்டதுஎன் தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்?.....'

எனக் கேட்டார் மாணிக்க வாசகர் (கோயில் திருப்பதிகம்).

ஔவையும் அதியமானும் பற்றி எண்ணிப் பார்த்து யார் கொலோ சதுரர் என முடிவு செய்யுங்கள்.

## 21

## அவலத்தின் எதிரொலி

அதியமான் நெடுமானஞ்சி மிகப் பெரிய போர் மறவன். ஆயினும் அவன் சேரர் குடி சார்ந்த சிற்றரசனே. அவன் காலத்துச் சேரவேந்தன் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை, அக்காலத்தில் கொடைக்குணத்தாலும் பண்புடைமையாலும் எளிமையாலும் இக்குறுநில மன்னர்கள், மூவேந்தர்களைவிடப் புகழ்பெற்று விளங்கினர். இதனால் வேந்தர் சிலரது உள்ளம் பொறாமையால் சினத்தை விளைவித்துளது.

பாரி நிலையும்இதையே உணர்த்துகிறது. அதியனும் மிகு புகழ் பெற்று விளங்கியதால் சேர வேந்தன் படையெடுத்து, அதியனின் தகடூரை முற்றுகையிட்டுள்ளனன். பாரி எவ்வாறு மூவேந்தரும் ஒருசேர முற்றுகையிட்டதால், பறம்பு மலையை விட்டு வெளியேற முடியாமல் தவித்தானோ, அது போலவே அதியனும் கோட்டையைவிட்டு வெளிவ முடியாமல் தவித்துள்ளான்.

பதிற்றுப் பத்துள் எட்டாம் பத்து, பெருஞ்சேரல் இரும்பொறையால் அதியமான் வெல்லப்பட்டான் என்று கூறுகிறது. இதனால் இவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்றும் அழைக்கப் பெற்றான்.

பாரி, அதியன் போல்வார் குறுநில மன்னர்கள். மூவேந்தர்கள் நிலப்பரப்பும் செல்வ வளமும் படைப்பெருக்கமும் உடையவர்கள். எனவேதான் பெருமறவர்களாகிய இவர்களை மிக அரிதின் முயன்று வென்றுள்ளனர்.

தொல்காப்பியம், புறத்திணையியலில் (நூ. 7) நச்சினார்க்கினியர், 'ஒருவன்மேற் சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன் மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதியமானிருந்ததாம்' என்று எழுதியுள்ளார்.

போர்க்களத்தில் அதியமான் விழுப்புண் பட்டு நின்றதை ஔவையார், வருந்திப் பாடியுள்ளார்(93), அதியமானுக்கு எழினி என்றும் அவன் மகனுக்குப் பொகுட்டெழினி என்றும் பெயர் வழங்கியுள்ளன. அதியமானின் இறப்புக் குறித்து, வருந்தி அரிசில் கிழாரும் பாடியுள்ளார் (230). அதியமானின் போராற்றலைப் பலபடப் புனைந்து, பல பாடல்களிற் பாடிய ஔவையார், அவன் மறைவு குறித்து ஐந்து பாடல்களில் புலம்பியுள்ளார். அவற்றுள் ஒரு பாடல் அவலத்தின் எதிரொலியாய், அழுகையே பாடலானது போல அமைந்துளது.

சிறியகள் பெறினே எமக்குஈயு மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணும் மன்னே

சிறிதளவு எனில் அதை எமக்குத் தந்துவிடுவான். கூடுதலாக இருப்பின் முதலில் எங்களுக்குத் தந்து, நாங்கள் பருகிவிட்டுப் பாட்டுப் பாடிட, அதைக் கேட்டு மகிழ்ந்தபடி அவனுண்பான். ஐயோ! அவை போயினவே!

சிறுசோற்றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே

சிறிதளவு உணவாயினும் அது பெரிதளவாயினும் பலர்க்கும் ஒருசேரப் பல கலன்களில் வைத்து, எல்லோரும் சமமாக உண்ணவைப்பான். ஐயகோ! அக்காலம் போய்விட்டதே!

என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கு ஈயும் மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கும் மன்னே

எலும்பும் சதையுமாய் உணவுண்ணுவன எல்லாம் எமக்கு ஈவான். அம்பும் வேலும் நுழைந்து துளைக்கும் இடமெல்லாம் தான் நிற்பான்.

நரந்தம் நாறும் தன்கையால்
புலவு நாறும் என்தலை தைவரு மன்னே

நரந்தம் மணம் மிக்கது. உணவுண்டதும்அதைக் கையால் பிசைந்து, புலால் நாற்றத்தைப் போக்கி கையை அலம்பிக் கொள்வர். இங்கு உணவுண்டு, புலால் நாறும் தன் தலையை, அதியன் நரந்தம்மணக்கும் கையால் தடவிக் கொடுப்பான். இனி அவ்வாழ்வு கழிந்துபோனதே! (முன்னே – கழிந்ததற்கு இரங்கல்).

அருந்தலை அரும்பாணர் அகல்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று அவன்
அருநிறத்து இயங்கிய வேலே

அதியனது மார்பில் தைத்த வேல், பாணர்களின் அகன்ற உணவுண்ணும் கலங்களைத் துளைத்து, இரப்பவரின் கைகளுள்ளும் துளைத்து வெளியேறி, அழகிய சொல்லையும் நுண்ணிய புலமைத் தேர்ச்சியையும் உடைய புலவர்களது நாவில் சென்று வீழ்ந்தது கண்டீர்! (இனி எல்லோரும் இரங்கத் தக்கவர் ஆயினர்).

ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப்
பாடுநரும் இல்லை; பாடுநர்க்கொன்று ஈகுநருமில்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே (235)

எமக்குப் பற்றுக் கோடான, எம் தந்தை இப்பொழுது எங்கே உள்ளானோ?

இனி, இவ்வுலகில் பாடுபவரும் இல்லை, பாடுபவர்க்கு ஒன்று கொடுப்பவரும் இல்லை.

குளிர்ந்த நீர்த்துறையில் பூத்த, மணமுள்ள பகன்றைப் பெரிய மலரை யாரும் சூடுவதில்லை. அதுபோலப் பிறர்க்குப் பயன்படாதேயிருந்து மாயும் உயிர்களே உலகில் மிகப் பலவாகும்.

இன்றும் இழக்கக் கூடாத, குடும்பப் பொறுப்பைத் தான் ஒருவராகவே தாங்கியவரை இழந்துவிட்டால், அக் குடும்பத்தார் எவ்வாறு ஒப்பாரி வைத்துப் புலம்பி அழுவார்களோ, அது போலவே பாடலின் பொருளும், பொருளுக் கேற்ற வடிவமும் இவ் ஆசிரியப் பாவில் அமைந்துள்ளன.

## கபிலரும் வேள்பாரியும்

சங்க காலப் புலவர்களில், கபிலர் தலைமை வாய்ந்த சிறந்த புலவராகத் திகழ்கின்றார். இன்று கிடைக்கப் பெறும் சங்கப் பாடல்கள் 2381 (ஐங்குறுநூற்றில் இரண்டு பாடல்கள் முழுவதும் காணவில்லை. அவற்றை நீக்கினால் 2379 பாடல்கள்). அவற்றைப் பாடியவர்கள் தொகை 473. கபிலர் பாடல்களாக 234பாடல்கள் கிடைப்பதால், கூடுதலாகப் பாடல்கள் கிடைக்கும் புலவர் இவரேயாவர். பரிபாடல் தவிர ஏனைய அனைத்து நூல்களிலும் இவருடைய பாடல்கள் கிடைக்கின்றன.

பத்துப்பாட்டு - குறிஞ்சிப்பாட்டு

எட்டுத்தொகை

| | | |
|---|---|---|
| குறுந்தொகை | - | 28 |
| நற்றிணை | - | 20 |
| அகநானூறு | - | 18 |
| ஐங்குறுநூறு | - | 100 (குறிஞ்சி) |
| கலித்தொகை | - | 29 (குறிஞ்சிக்கலி) |
| பதிற்றுப்பத்து | - | ஏழாம் பத்து |
| புறநானூறு | - | 28 |

இவர் பாடிய 196 அகப்பாடல்களில். 192 குறிஞ்சி பற்றியனவே. பிற புலவர்களை விட, இவருடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் சிறிது கூடுதலாகக் கிடைக்கின்றன.

இவர் ஓர் அந்தணப் புலவராவார். 'யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்'(200), 'யானே, தந்தை தோழன் இவரென் மகளிர், அந்தணன் புலவன் கொண்டுவந்தனனே' (201) என்னும் புறநானூற்று அடிகளில், அவரே கூறிக்கொள்கின்றார். 'புலன முக்கற்ற அந்தணாளன்' (புறம்.121) என்று மாறோக்கத்து நப்பசலையார் இவரைப் பாராட்டுகின்றார். 'பொய்யா நாவிற் கபிலன்' (புறம். 174) என்றும் அவரே கூறுகிறார். பெருங்குன்றூர் கிழார் பதிற்றுப்பத்தில் கூறுவது, இவரது பெருமித வாழ்வை மிகவும் சிறப்பித்துக் காட்டுகின்றது. 'அரசவை பணிய, அறம் புரிந்து வயங்கிய, மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின், உவலை கூராக் கவலையில் நெஞ்சின், நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்' (பதிற். 85). பொருந்திலிளங்கீரனார் இவரை 'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' (புறம். 53) என்று இவரது கல்விச் சிறப்பைக் கூறுகிறார்.

இவரது குறிஞ்சிப் பாடல்களைப் படிக்கும் பொழுதும், இவர் தமிழரின் வேறான அந்தணராகச் சிறிதளவும் தோற்றவில்லை.

ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவித்தற்கு இவர் பாடிய குறிஞ்சிப் பாட்டைப் படிக்கும் பொழுது, இவர் தமிழ்ப் பண்பாட்டின் காவலராகத் தோன்றுகிறார். சங்க கால அந்தணப் புலவர் சிலர் வடமொழி சார்ந்த பெயரினராகக் காணப்படினும், மிகச் சிறந்த தூய தமிழ்ப் பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்கள் ஏனைய புலவர்களினும் மிகுந்த, தமிழ்ப்புலமையுடையோராயும் புலவருடன் புலவராய், பாணருடன் பாணராய்க் கலந்து வாழ்ந்துள்ளனர். தொல்காப்பியர்க்கு முன்பிருந்தே இவர்கள் இவ்வாறு பல குடிவழியினராய்க் கலந்து தமிழர்களாகவே காணப்படுகின்றனர்.

இடைக் காலத்தும் பிற்காலத்தும் குடியேற்றப்பட்ட பிராமணர்களினும் இவர்கள் வேறுபடத் தோன்றுகின்றனர். 'வேளாப் பார்ப்பன் வாளரம் துமிப்ப' என வருவது கொண்டு, சங்கறுக்கும் தொழிலினராகவும் வேள்விசெய்வோராகவும் ஆக இருபிரிவினராகவே இருந்தமை தெரிகிறது. எனினும் தமிழரொடு கலந்து வாழ்ந்தாலும், தங்கள் தனித் தன்மையை விடாது காப்பாற்றி வந்ததாகவும் அறிய இடமுளது.

சங்க மன்னர்கள், வேந்தர்கள் அனைவரும் வேள்வி செய்து வந்துள்ளனர். சுருக்கமாக வேள்வி செய்யாதோர் என யாரையும் குறிப்பிடவோ, வேள்வியை மறுத்தனர் என எண்ணவோ, புறப்பாடல்களில் ஒருசில அடிகள் கூட இல்லை.

திருவள்ளுவரைத் தவிர, வேள்வியை மறுத்த சங்க காலப் புலவர் எவருமிலர். அந்தணர் எனப் பட்டோரும் புலால் உண்ணுதல், கள் பருகுதலைத் தவறாகக் கருதினர் என்ற சிறுகுறிப்பும் இல்லை.

இவை எல்லாம் ஒரு புதிராகவே உள்ளன. மேலும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உரியன.

பாரி தன் நாட்டைச் சார்ந்த முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு கொடுத்துவிட்டான். பறம்பு மலையே எஞ்சி நின்றது.

முன்னதாக ஒருமுறை பாரிவேள் வேட்டையாடச் சென்ற பொழுது, முல்லைக்கொடி ஒன்று படர்வதற்கேற்ற கொழுகொம்பு இன்மையால் தரையில் கிடந்தது. அதன் அழகில் ஈடுபட்ட பாரி, தன் தேரை அங்கு நிறுத்தி, அதில் ஓரறிவுயிராகிய அக்கொடியைப் படரவிட்டனன். இது அவன் புகழைப் பலமடங்கு உயர்த்தியது. ஒரு குறு நில மன்னனின் புகழ் தங்களைவிட மேலோங்குவதைக் கண்ட மூவேந்தரும் அவன்மேல் படையெடுத்துப் பறம்பு மலையை முற்றுகையிட்டனர்.

பாரியை வெல்லவும் முடியவில்லை; பாரி பறம்பை விட்டு இறங்கி வரவும் முடியவில்லை.

படைப் பெருக்கமே காரணமன்றி, வீரமன்று இதற்குக் காரணம். முற்றுகை பல ஆண்டுகள் நீடித்தது.

பறம்பு மலை அன்று நீர்வளம் மிக்கது. வள்ளிக் கிழங்கு, தேன் முதலான உணவுகள் நிரம்பக் கிடைத்தன.

கபிலர் நூற்றுக்கணக்கான கிளிகளுக்குப் பயிற்சி கொடுத்தார். அவை காலையில் பறந்து சென்று நெற்கதிர்களைப் கொத்திக் கொண்டு, மாலையில் மலைக்குத் திரும்பிவிடும். அவ்வியத்தகு நிகழ்வு அகநானூற்றில் ஔவையாராலும் (அகம். 303), நக்கீரராலும் (அகம். 78) விளக்கமாகப் பாடப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு பறம்பு வீழ்ந்தது. பாரி மாய்ந்த விதம் தெரிந்திலது. தமிழ் ஈழம் காணப் போராடிய விடுதலைப் புலிகளின் தலைவன் மாய்ந்த விதம் தெரிந்திலது அல்லவா? அதே வரலாறுதா முன்பும் நடந்துளது. உடனுயிர் நீக்க எண்ணிய கபிலரை, பாரி தடுத்தன என்று மட்டும் தெரிகிறது. பாரி மகளிர் இருவரையும் காக்கும் பொறுப் காரணமாக, கபிலர் பறம்பு மலையை விட்டு, அம்மகளிருடன் பிரிந்து செல்கிறார். அப்போது அவர் உயிரற்றது என எண்ணும் பறம்புமலையிடம் விடைபெற்றுப் புறப்படும் காட்சி கல் நெஞ்சையும் உருக்க வல்லது.

பாரி மகளிர் தம் தந்தையை இழந்த மறு திங்களில் நிலவைப் பார்த்துப் புலம்பிய பாட்டு, அதைவிட அவலம் மிக்கது.

பாரிமகளிரை மணம் செய்து கொள்ளுமாறு, கபிலர் விச்சிக்கோன், இருங்கோவேள் என்ற குறுநில மன்னர்களிடம் அழைத்துச் சென்றார்.

முன்னதாகத் தன் மகளிரை மணம் செய்துதரக் கேட்ட மூவேந்தர்களுக்கும் பாரி, பெண்தர மறுத்ததாலேயே போர் மூண்டது எனத் தெரிகிறது. அதனால் அக் குறுநில மன்னர்கள், வேந்தர்களுக்கு அஞ்சிப்போலும் பாரி மகளிரை மணக்க மறுத்து விட்டனர்.

பிறகு கபிலர் அம் மகளிரை பார்ப்பார்க்கு மணம் செய்து கொடுத்துவிட்டு வடக்கிருந்து உயிர்விட்டதாக அறியப்படுகிறது.

இச் சோக வரலாற்றிடையே பின்னிக் கிடக்கும் கபிலரின் புறநானூற்றுப் பாடல்கள், உலகம் உள்ள அளவும் நினைந்து நினைந்து போற்றக் கூடியவை.

## கபிலரின் அரிய செயல்

இன்று மேனாட்டார் பூனை, நாய், குரங்கு, கரடி போல்வன பலவற்றை, நன்கு பழக்கி அரிய செயல்களைச் செய்யவைத்து காட்சிப் படுத்தி வியக்க வைக்கின்றனர். நாய் பந்தடிக்கின்றது, பூனை சைகை காட்டியபடி செய்கின்றது.

சங்க காலத்தில் இயற்கையுடன் மிக ஒன்றி வாழ்ந்ததால், இத்தகைய நிகழ்ச்சிகள் நிரம்ப நடந்துள்ளன. குடிசை முற்றத்தில் யானைக் கன்றுகளும் கரடிக்குட்டிகளும் அவ் வீட்டு இளஞ் சிறார்களுடன் விளையாடியுள்ளன.

பறம்பு மலையைப் பல ஆண்டுகள், மூவேந்தர்கள் முற்றுகையிட்டபோது, கபிலர் கிளிகளைப் பழக்கி, அவை காலையில் சென்று நெற் கதிர்களைக் கொத்திக் கொண்டு, மாலையில் பறம்பு மலைக்குத் திரும்பும்படி செய்துள்ளார். இதனை மதுரை நக்கீரரும், ஔவையாரும் அக நானூற்றில் குறிப்பிடுகின்றனர்.

கபிலர், பாரி வரலாறு, சங்கப் பாடல்களில் உள்ளது உள்ளபடி படமாக எடுக்கப் பெற்றால், உலகப் பரிசிலைப்பெறும்.

தலைவன் களவுக் காலத்தில் பிரிந்தவன் நெடுநாள் கழித்துத் திரும்புகின்றான். தோழி அவனிடம் இவ்வளவு காலமாக, பனிக் காலத்தே வருந்தியிருந்த தலைவியைப் பற்றிச் சிறிதளவேனும் நினைத்ததுண்டா என வருந்திக் கேட்கின்றாள். அப்போது அவள் அழகை, பாரியின் மலைச் சுனையில் பூத்த புதிய மலர் போன்ற நெற்றியினையுடைய தலைவி எனப் புனையும் போது, இவ் வரலாறு – புறச்செய்தி, அடைமொழியாக வருகிறது.

....உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையாது
ஆளிடூஉக் கடந்து வாளமர் உழக்கி
ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி
தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறும் இவள் நுத லே (அகம். 78)

உலகம்முழுதும், பலரும் புகழும் வாய்மொழிக் கபிலன், மிகவும் சிந்தித்துச்செயற்பட்டு, சேய்மையிலிருந்து (பறவைகள் மூலம்) நெற்கதிர்களைக் கொண்டுவரச் செய்து, ஆம்பல் மலரின் அவியலொடு சேர்த்து அதனைச் சமைத்து உணவூட்டி, பறம்புமலையினுள் இருந்தவர்களைக் காப்பாற்றினார்.

பாரி பல ஆண்டுகள் கழியவும் தவறாது மூவேந்தருடன் போரிட்டு, அவர்களை விரட்டியடித்தான். அவனது சுனையில் பூத்த மலர் போன்ற நெற்றியையுடைய தலைவி என இச்செய்தி கூறப்பட்டுள்ளது.

.. புலங்கந் தாக இரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்
நிரைபறைக் குரீஇயினம் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெல் தரீஇயர் ஓராங்கு
இறைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு
வருவர் என்று உணர்ந்த மடங்கெழு நெஞ்சம் (அகம். 303)

தாங்கள் கற்ற கலையறிவுடனே இரவலர் வந்தால், யானையும் அணிகலன்களும் கொடுக்கும் புகழ்மிக்க பாரியினது பறம்பு மலையில் பறவைக் கூட்டங்கள் காலையில் கூட்டமாகப் பறந்துசென்று, இரைதேடி, வளைந்த நெற்கதிர்களைத் தேடியலைந்து கவ்விக் கொண்டு பொழுதுபட மலைக்குத் திரும்பும். அதுபோலத் தலைவரும் திரும்புவார் என எண்ணும் மடநெஞ்சமே – என்று தலைவி தன் வருத்தத்தைத் தனக்குள்ளே கூறிக்கொள்கிறாள்.

முன் பாடலில் வாய்மொழிக் கபிலன் சூழ (சிந்தித்துப் பழக்கியமை) என்றும் இப்பாடலில் பறவைகள் காலையிற் போய் எவ்வாறு கதிர்களுடன் திரும்பின என்றும் கூறப்பட்டுள்ளன.

## 22

## எருக்கம் பூ மாலை

'வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பு' – என்று கம்பர், சிவபெருமான் எருக்கம்பூவைச் சூடியிருப்பதைக் குறிப்பிடுவார். சங்கப் பாடல்களில் 'கடவுள்' எனவரும் இடங்கள் சில, சிவனைச் சுட்டுவனவாகவே உள்ளன.

கபிலர் சிவனின் எளிமையைப் பாடுகிறார். இன்று கடவுள் பத்து இலட்சத்தில் பொற்கவசம் எட்டு இலட்சத்தில் நெற்றிப்பட்டை ஆறு இலட்சத்தில் வயிரமணி மாலை கேட்பதாகக் கூற, அவ்வாறே செய்கின்றனர்.

பிற சமயத்தார் சமணர், புத்தர், கிறித்தவர், இசுலாமியர் எல்லாம் கடவுளுக்குச் சொத்துச் சேர்ப்பதில்லை; கடவுள் மனிதனுக்குப் பயன்படுவன எல்லாம் தமக்கு எனக் கேட்டுப் பெற்றுக் கொள்வதில்லை. வேள்வி என்ற பெயரால், மக்களுக்குப் பயன்படுவன பலவற்றையும் சேர்த்து, நெருப்பில் போட்டு வானுலகிற்கு அனுப்பு என்று கேட்பதில்லை. அவர்கள் மக்களுக்கு கல்வி, மருத்துவம், உடை, உணவு, உறையுள் தருவனவே, இறைவனுக்குச் செய்வன என எண்ணினர்.

நூறு குடம் பால் எனக்கு அபிஷேகம் செய், உனக்குப் புண்ணியம் தருகிறேன் என அக்கடவுளர்கள் பேரம் பேசுவதில்லை.

கருவறை முதல் மூர்த்தங்கள் வரை தூய்மை செய்தலும் நறுமணப் பொருள்கள் கொண்டு முழுக்காட்டுதலும் மலர்களால் அலங்கரித்தலுமே தமிழ்க் கடவுளர்கள் வேண்டிக் கேட்டன, கேட்பன.

ஆனால், இன்று அக் கடவுளரை இருட்டறையில் வைத்துச் செய்யும் கொடுமைகள், 'இந்து மதம்' என்ற பெயரால், வைதிகம் புகுத்தியவை. கபிலரும் அந்தணர்தான். அவர் பாடுகின்றார்:

நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்க மாயினும், உடையவை
கடவுள் பேணேம் என்னா; ஆங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே (106)

பாரிவேள் எவ்வளவு எளியவர் சென்றாலும் உதவுவான். கடவுளும் 'புல்லிலை எருக்கம்பூதான்' தன் வயம் இருக்கிறதென்றாலும் அதை அக் கடவுள் ஏற்கும் என்பதே கருத்து. இங்கு கடவுளை அருச்சிக்க எருக்கம்பூதான் கிடைத்தது என்றாலும் கடவுள் ஏற்கும் என்ற கருத்து எளிமையுடன் வழிபடச்சொல்வதாகும். திரு. வி. க. அவர்கள், தந்தை பெரியார் கருத்தினரல்லர். ஆனால் அவர் கோயில்களில் நிதிசேரக் கூடாது; சேர்ந்தால் நீதியும் பத்திமையும் போய்விடும் என்று எழுதியுள்ளார்.

## 23

## இலக்கியத் திறன்

'புலனழுக்கற்ற அந்தணாளராகிய' கபிலரின் தனி இலக்கியத் திறன்கள் பல. அவற்றுள் அணி நலன்பட அவர் பாடிய பாடலொன்று அடிக்கடி எடுத்தாளப்படும்.

பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண்டு உலகுபுரப் பதுவே (107)

செம்மை சான்ற புலமைமிக்க நாவினையுடைய புலவர்கள் பாரியின் வள்ளன்மையைப் பலபடப் புகழ்ந்து, அவன் ஒருவனையே பாராட்டுவர். பாரி ஒருவன் மட்டுமல்லவே; 'கைம்மாறு கருதாது', இவ் உலகைக் காக்கின்ற மழை என்ற ஒன்றும் உண்டல்லவா? பிற வள்ளல்களினும் மேம்பட்டவனாதலால், முல்லைக்குத் தேரீந்த பாரிக்கு, மாரி ஒன்றே ஒப்பாகும் என்பது கருத்து. இதனைப் பழிப்பது போலப் புகழ்தல் என்பர் பிற்காலத்தார்.

## 24

## பறம்பு மலை

ஒரு பாடலில் கபிலர் மூவேந்தரையும் அங்கதக் குறிப்புடன் நகையாடிப் பாடியுள்ளார். அதில் மூவேந்தரும் பாரியைப் பகைத்ததன் காரணம் குறிப்பாகவுளது. பாரிக்கு இரு மகளிர். அவர்களை மணம் செய்ய வேந்தர்கள் கேட்ட போது, யாருக்கும்தர முடியாது என்று பாரி மறுத்துள்ளான். அப் பாடலின் அடியில் 'மகள் மறுத்தல்' எனும் துறை குறிக்கப்பட்டுள்ளதால் இதை அறியலாம். மேலும் பாரி இறந்தபின், கபிலர் அம் மகளிர் இருவரையும் அழைத்துச் சென்று விச்சிக்கோன், இருங்கோவேள் என்ற இரு குறுநில மன்னர்களிடமும் மணம் செய்து கொள்ளுமாறு வேண்டியபோது, அவர்கள் மறுத்துவிட்டமையாலும் இது உறுதிப்படுகிறது. வேந்தர்களுக்கு அஞ்சியே அவர்கள் மறுத்திருக்க வேண்டும்.

மகள் மறுத்தல் துறையமைந்த பாடல் பறம்புமலையின் அருமையையும் பாரிவேளின் பெருமையையும் பறை சாற்றுவதாக உளது.

சங்கப் புலவர்கள் வேந்தர்களுக்கும் அறிவுரை கூறுபவர்களாக, கண்டிப்பவர்களாக, திருத்துபவர்களாகப் பாடியுள்ள பாடல்களைத் தொகுத்துப் பார்த்தால், அற்றைப் புலவர்களின் பெருமிதத்தையும் இற்றைப் புலவர் சிலரின் இழிதகவையும் உணரலாம்.

பறம்பு மலையை மூவேந்தர்களும் அழிக்க நினைத்தனர்; அழித்துவிட்டனர். வரப் போவதைக் கபிலர் உணர்ந்தவரே. எனினும் வேந்தர்களைவிட, பாரிவள்ளல் உயர்ந்த பண்பினனே என உலகம் நினைவு கொள்ளுமாறு, ஒரு பாடலைப் புனைந்து வைத்துள்ளார்.

அளிதோ தானே பாரியது பறம்பே
நளி கொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே,
சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே,
தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே
மூன்றே,
கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே,
அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே!

வான்கண் அற்று அவன் மலையே வானத்து
மீன்கண் அற்றுஅதன் சுனையே!

ஐயோ பாவம்! பாரியின் பறம்புமலையை மூவேந்தர்களும் முற்றுகை இட்டுள்ளனர். அவர்களுடைய முரசுகள் சேர்ந்து, பெரிதாக ஒலிக்க முற்றுகை இட்டனர். முற்றுகையிட்டாலும் பறம்பு மலையைக் கைப்பற்றுதல் இயலாது.

பறம்பு மலையை விட்டு பாரியின் படை இறங்கி, மூவேந்தர் படையை விரட்டின. எனினும் படைப்பெருக்கத்தால் மலைமீதே மக்கள் தங்கும்படி ஆயிற்று. (கபிலர் பறவைகள் மூலம் நெற்கதிர்களைக் கொண்டுவரப் பழக்கியமை இதனாலேயாம்) முற்றுகை சில ஆண்டுகள் நீடித்தன.

எனினும் பறம்பு வீழாது, பணியாது என்று கபிலர் பாடுகிறார். ஏனெனில் உழவர் உழவேண்டாது கிடைக்கும் உணவு வகை நான்கும் நல்ல நீரும் மலைமேலேயே கிடைத்தன. அவை யாவை?

மூங்கில் நெல் (வெதிர் – மூங்கில்), பலாப்பழம் முற்றிப் பழுத்து நிற்கும், வள்ளிக் கிழங்கு முற்றி அடியில் கிடக்கும். குரங்கு (ஓரி) பாய்தலால் தேனடை சிதறி, தேன் பொழியும். அவன் மலை வானம் போலவும் அதிலுள்ள சுனைகள் வானிலுள்ள விண்மீன்கள் போலவும் உள்ளன.

ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளில் கொள்ளலிர்; வாளில் தாரலன்;
யான்அறிகுவன் அது கொள்ளுமாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரைஒலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீயும்மே (109)

பறம்பு மலையைச் சுற்றி மரந்தோறும் யானைகள், காணும் இடந்தோறும் தேர்கள்.

பாரியை நீங்கள் முயன்று போரிட்டு வெல்லவும் முடியாது; அவன் போரில் தோற்றுத் தரவும் மாட்டான். ஆனால் ஒரு வழி இருக்கிறது; அது எனக்குத் தெரியும்.

பதமாகக் கட்டப்பட்ட சீறியாழைப் பாணர்போல் நீங்கள் வாசித்துக் கொண்டு, உங்கள் அழகிய கூந்தலையுடைய மனைவியர், விறலியராக உங்கள் பின்வர ஆடிப்பாடி வந்து கேட்டால், பாரி தன் நாட்டையும் பறம்புக் குன்றையும் ஒருங்கே உங்களுக்கு ஈவான்!

இதலுள்ள அங்கத நகையாடல் மிகக் கடுமையானது. பாரியுடன் கொண்ட நட்பால், மூவேந்தரையும் இவ்வாறு பாடக் கபிலரால் முடிந்துள்ளது.

## 25

## பொன்கொழிக்கும் பறம்பே! போய்வரவா!

புறநானூற்றிலுள்ள பாடல்களில் உன் மனங்கவர்ந்த பாடல் எதுவென்று என்னைக் கேட்டால், கபிலரின் இப் பாடலையே கூறுவேன் எனப் பலமுறை சொன்னதுண்டு. நற்றிணையில் புன்னை மரத்தைத் தலைவியின் தங்கை எனச் சுட்டும் ஒரு பாடல் உளது. புன்னை கூட ஓரறிவுயிரில் சேரும். பறம்புமலை உயிரற்ற ஒன்று. அப் பறம்பை விட்டுப் பிரியும்போது, கபிலர் அம் மலையிடம் விடைபெற்றுக் கொள்கிறார். பல ஆண்டுகள் தங்கள் உயிர் காத்த நண்பன் என்று கூறுகிறார். பாரியிடம் கொண்ட நட்பினையும் சுட்டிக்காட்டி, கண்ணீர் ததும்ப 'போய்வருகிறேன்' என்று கூறுகிறார்.

அப்போது தந்தையை இழந்த பாரி மகளிருக்கு ஏற்ற கணவரைத் தேடிச் செல்லும் தம் பொறுப்புணர்ச்சியையும் மலையிடம் கூறுகிறார்.

**மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்**
**அட்டான்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்**
**பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி**
**நட்டனை மன்னோ முன்னே! இனியே**
**பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று**
**நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்**

சேறும் வாழியோ! பெரும் பெயர்ப் பறம்பே!
கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே (113)

மதுச்சாடியைத் திறப்பவும் கரிய ஆட்டுக் கிடாயை வெட்டி வீழ்ப்பவும், குறைவின்றிச் சமைத்த கொழுவிய ஊன் கலந்த சோற்றை, விரும்பியவாறு உண்ணும்படி தந்து, மிக்க பெருவளம் முதிர்ந்து, எம்முடன் நட்புச் செய்திருந்தனை முன்பு. பெரும் புகழையுடைய பறம்பு மலையே! இப்போது பாரி மாய்ந்தானாக, கலங்கிச் செயலற்று, திரண்ட வளையலை அணிந்த முன்கையை யுடையவர்களாகிய பாரியின் மகளிர்க்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவரைத் தேடிப் புறப்படுகிறோம். நீர் ஒழுகும் கண்ணினராய், உன்னை வணங்கி, வாழ்த்திச் செல்கின்றோம்! போய் வருகிறோம், பறம்பே! நீ வாழிய!

நாம் பல ஆண்டுகள் வாழ்ந்த வீட்டைவிட்டுப் பிரிய நேர்ந்தால், இப்படிக் கண்கலங்கி அதனிடம் விடைபெறுவதுண்டா? பறம்பு மலை அவர்களைக் காப்பாற்றியது. அதன் இயற்கை வளம் நிகரற்றது. பெருவளம் முதிர்ந்து, நட்டனை மன்னோ, இனியே - ஐயோ நட்புச் செய்திருந்தனையே, அது கழிந்ததே - என்ற அடிகளில் கபிலரின் மன உருக்கம் புலப்படுகிறது. பாரியைப் போலப் பறம்பும் நட்புக்கொண்டிருந்ததாம். நீர் ஒழுகும் கண்ணேமாய், உன்னைத்தொழுது வாழ்த்தி, சென்று வருகிறோம், பறம்பே! - என்றிவ்வாறு ஓர் உயிரற்ற ஒன்றை, உயிருடன் பழகியதுபோலக் கொண்டு பாடியிருப்பது, மனித நேயத்தின் உச்சத்தைத் தொடுகிறது.

## 26

### பாரி மகளிர்

பாரி பெற்ற மகளிர் இருவர். அவர்கள் பெயர் தெரிந்திலது, ஆனால் இவ்வரலாறு கதையாய் செவிவழி வளர்ந்து, ஔவையாருடன்

தொடர்புபடுத்தி வழங்குகிறது. அங்கவை, சங்கவை என்று அக் கதை குறிப்பிடுகிறது.

'பாரி மாய்ந்தென', அவனுடைய பெண்களை மணம் செய்து கொடுக்கவேண்டி, பாரியே உடனுயிர் துறக்க எண்ணிய கபிலரைத் தடுத்துள்ளான். இவ்வாறு உயிரியைந் தொன்றிய நட்பினராகிய கபிலர், பாரியுடன் உயிர்விடாமல், இப் பொறுப்பினை ஏற்று, அம்மகளிருடன் நடந்தே வேற்றிடங்களுக்குச் செல்கின்றார்.

நெடுந்தூரம் சென்றபின்னும் பறம்புமலை கண்ணுக்குத் தெரிவதால் அவலம் மிகுகின்றது. அம்மலை, வெள்ளிடைமலை என ஓங்கி நிற்பதால், 'ஈண்டு நின்றார்க்கும் தோன்றும் சிறுவரை சென்று நின்றார்க்கும் தோன்றும்' என ஒரு பாடல் பாடி வருந்துகிறார்.

அவ்வாறு நடக்கும் பொழுது, ஒரு திங்களாகிவிடுகிறது. ஓரிடத்தில் தங்கியிருந்த பொழுது, வானத்தில் முழுநிலவு தோன்றக் கண்ட அம் மகளிர், சென்றமாதம் அதே முழுநிலா நாளன்று தந்தையுடன் பறம்புமலையில் இருந்ததையும் இந்த மாதம் முழுமதியன்று தந்தையையும் இழந்து, பறம்பு மலையையும் பகைவேந்தர்கள் கைக்கொள்ள விட்டுவிட்டு வந்ததையும் எண்ணிப் புலம்புகின்றனர். அப் புலம்பல் ஒரு பாடலாக வெளிப்படுகிறது.

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம்எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே (112)

மூவேந்தரும் முற்றுகை இட்டிருந்த சென்ற திங்கள், வெள்ளிய நிலவில் எங்கள் தந்தையும் இருந்தார்; எங்கள் குன்றையும் பிறர் கொண்டிலர். ஆனால் இந்த மாதத்து இவ்வெள்ளிய நிலவின்கண் வெற்றி

முரசொலிக்கும் வேந்தர்கள் எம் மலையையும் கைக் கொண்டனர்; நாங்கள் எங்கள் தந்தையையும் இழந்து நிற்கின்றோம்!

இப்பாடலில் அணிநலனோ, பிறவோ எதுவும் இல்லை. வெறும் செய்தி சொல்வது போல உள்ள இது, பேரவலத்தை விளைவிக்கிறது. இஃதோர் உளவியற் பாட்டு. சென்ற பொங்கலன்று, உடனிருந்த தந்தை, இந்தப் பொங்கலன்று உடனில்லையே என வருந்துவர். இது ஒரு கருத்துத் தொடர்ச்சியால் ஏற்படும் அவலம்.

## 27

## வல்வில் ஓரி

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிய ஒரு பாடலில், அவ்வள்ளலுக்குச் சில காலம் முன்பு வாழ்ந்து மறைந்த ஏழு வள்ளல்களைக் குறிப்பிடுகின்றார்.

பாரி, ஓரி, காரி, அதியன், பேகன், ஆய், நள்ளி என்று குறிக்கப்பட்டதால், இவர்கள் 'கடையெழு வள்ளல்கள்' என அழைக்கப்பெற்றனர். இவ் எழுவரையும், ஓய்மானாட்டு நல்லியக் கோடனை, சிறுபாணாற்றுப் படையில் பாடிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும் குறிப்பிடுகின்றார். இதனால் இவர்களைச் சற்று முன் பின்னாக வாழ்ந்தவர்களாகக் கொண்டு, தமிழக வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட பகுதியை ஆராயலாம்.

இவர்களுள் ஓரி என்பவன் கொல்லிமலைத் தலைவன். இவனது வள்ளன்மையை வன்பரணர், இரண்டு பாடல்களிலும் (புறம். 152, 153), கழைதின் யானையார் ஒரு பாடலிலும் (புறம். 204) புகழ்ந்து பாடியுள்ளனர்.

வல்வில் ஓரி – என்ற பெயர், அன்று இம் மன்னன் வில் அம்பு எய்தலில் மிக வல்லவனாக இருந்தமையை நினைவூட்டுகிறது. ஒரே

அம்பினை எய்தலால், யானை, புலி, மான் எனப் பல விலங்கினங்களைக் கொல்லுமளவு, அவ்வாறான வலிய வில், அம்புகளும் இருந்துள்ளன. இதுவே வாழ்வாக இருந்த காலம் அது.

ஒரு முழுநூலையும் மனத்தில் பதித்துப் பாடம் சொல்லும் பழக்கம் இன்று எண்ணிப் பார்க்கவும் இயலாதது. அன்று இவை நடைமுறையில் இருந்தன.

வன்பரணர் நடுக் காட்டிடையே தம் பாணர் கூட்டத்துடன் ஒரு வேட்டுவனைப் பார்க்கின்றார். அவன் வேட்டையாடி விலங்கினங்களைக் கொன்று தின்று வாழ்பவனாகவோ, விலைக்கு விற்பவனாகவோ தோன்றவில்லை. அவன் ஒரு மன்னனாகவே இருக்க வேண்டும் என ஐயுறுகின்றார். அவன் அணிந்துள்ளவை, தோற்றம், ஓரம்பினால் பலவற்றை வீழ்த்தியமை கண்டு இவன் ஓரியோ? அல்லனோ? - என எண்ணுகிறார்.

இன்று பெரியவர்களைக் கோயில்களில் 'பூரண கும்பம்' வைத்து வரவேற்பதுபோல், ஒரு மன்னனுக்கு ஏற்ற வகையில், தன் இசைக் கலைஞர்களை, ஒரு குழுவாக வாசிக்கும்படி கூறி, அருகிற்சென்று, 'அரசே!' என்று அழைக்கின்றார்.

தன்னை இனங்கண்டு கொண்ட அதனைப் பார்த்து ஓரி நாணுகின்றான்.

'நாங்கள் நாடெல்லாம் சுற்றி வருகிறோம். எங்கும் நின்னை ஒப்பார் எவருமிலர்' என்றதும், தான் வேட்டையாடிய மான் கறியுடன் மதுவையும் தந்து, பொன்னும் மணியும் கொடுத்து, அக் காட்டிடத்திலேயே அத்தனையும் தந்து வழியனுப்புகின்றான், ஓரி.

வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்

புழல்தலைப் புகர்க்கலை உருட்டி, உரல்தலைக்
கேழல் பன்றி வீழ அயலது
ஆழல் புற்றத்து உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்
புகழ்சால் சிறப்பின் அம்புமிகத் திளைக்கும்
கொலைவன் யார்கொலோ?

எய்த அம்பு வேழம் வீழ்த்தியது. அது சிறந்த முறையில் தொடுக்கப்பட்ட அம்பு (வேழம் - யானை, பகழி - அம்பு). பிளந்த வாயையுடைய புலியைக் (உழுவை) கொன்றது (பெரும் பிறிது உறுதல் - கொன்று வீழ்த்துதல்). புழல்தலைப் புகர்க் கலை உருட்டி - உட்துளையுடைய (புழல்) கொம்புள்ள தலையைக் கொண்ட - கலைமானை உருட்டி விட்டது. உரல்போலும் தலையையுடைய பன்றியை விழச் செய்தது. அதன் அயலாக ஆழமான இடத்தில் கிடந்த உடும்பிலே போய்த் தைத்து நின்றது. இத்தகைய வல்வில்லால் வேட்டையாடி, வெற்றியுடன் இருந்தவன், புகழமைந்த அம்பெய்யும் தொழிலிலே திளைக்கும் வேட்டுவன்யாரோ?

கொலைவன் மற்றுஇவன்
விலைவன் போலான், வெறுக்கை நன்குடையன்;
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
சாரல் அருவிப் பயமலைக் கிழவன்
ஓரி கொல்லோ? அல்லன் கொல்லோ?

வேட்டுவனாகிய இவன் விலைக்கு விற்கக் கொல்பவன் போலத் தெரியவில்லை. மிக்க செல்வமுடையவனாக உள்ளான். சந்தனம் பூசிய அழகிய அகன்ற மார்பினன். சாரலிலே அருவிபாயும் பயன்படும் மலைக்குத் தலைவனாகிய ஓரிதானோ? அல்லனோ?

இவ்வாறு அருகில் சென்றதும் ஓரியே என்பது உறுதிப்படுகிறது. உடனே புலவர் தம் இசைக் குழுவைப் பாட அழைக்கின்றார்; தாமும் பாடத்

தொடங்குகிறார். இதில் வரும் இசைக் கருவிகளும் இசைக்கும் மரபுகளும் பெரும் ஆராய்ச்சிக்கு உரியன.

பாடுவல், விறலி! ஓர்வண்ணம்; நீரும்
மண்முழா அமைமின், பண்யாழ் நிறுமின்,
கண்விடு தூம்பின் களிற்றுஉயிர் தொடுமின்,
எல்லரி தொடுமின், ஆகுளி தொடுமின்,
பதலை ஒருகண் பையென இயக்குமின்,
மதலை மாக்கோல் கைவலம், தமின் என்று
இறைவன் ஆகலின் சொல்லுபு குறுகி,
மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பி
'கோ'எனப் பெயரிய காலை

விறலியே! யான்ஒரு வண்ணம் பாடுவேன். நீங்கள் முழவை, மார்ச்சனை தடவி வாசியுங்கள், யாழிலே பண்ணிசை நிறுத்துங்கள், உட்துளை திறந்து யானையது கைபோலும் பெருங்குழலைத் தொடங்குங்கள், எல்லரி வாத்தியத்தையும் வாசியுங்கள், சிறுபறையை முழக்குங்கள், பதலையின் ஒரு பக்கத்தே அடித்து, மெலிதாக முழக்குக, இசைத் தலைமை காட்டும் கரிய கோலை என் கையில் தாருங்கள்! (இன்றும் இசைக்குழுவை இயக்குபவன் கையில் ஒரு கரிய கோலிருப்பதைக் கருதுக).

அவன் அரசனாதலின் அருகே சென்று, 21 துறையமைந்த பண்முழுவதும் முறைப்படி பாடி முடித்து, 'அரசே' என்று அழைத்தனன்.

ஆங்கது
தன்பெயராகலின் நாணி மற்று, யாம்
'நாட்டிடன் நாட்டிடன் வருதும், ஈங்குஓர்
வேட்டுவர் இல்லைநின் ஒப்போர்'என
வேட்டது மொழியவும் விடாஅன்

தன்னை பெயர்குறித்தழைத்ததும் நாணமுற்றான். (சான்றோர் தம்முன் நின்று தம்மைப் புகழ்வதைக் கேட்டால் கூச்சப்படுவர்).

'நாங்கள் நாடுநாடாகச் சுற்றி வருகிறோம். உம்மைப் போலும் வில்லாண்மை வல்ல வேட்டுவர் எவருமிலர்!' என எம் விருப்பத்தைக் கூறவும் விடாமல் தடுத்து நிறுத்தினன்.

வேட்டத்தில்
தான்உயிர் செகுத்த மானிணப் புழுக்கோடு
ஆனுருக்கன்ன வேரியை நல்கித்
தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கியோனே,

வேட்டையாடித் தான் கொன்ற மானின் தசைப் புழுக்குடன் ஆவின் நெய் போன்ற மதுவினையும் தந்தான். மேலும் தன் மலையிடத்தே கிடைக்கும் நல்ல பொன்னையும் மணிகளின் குவியலையும் கலந்து, கொள்க என அக்காட்டுவழியிலே கொடுத்தனன். அவன் யாரெனின்,

விடர்சிமை
ஓங்கிரும் கொல்லிப் பொருநன்
ஓம்பா ஈகை விறல் வெய்யோனே (152)

குகைகளையுடைய உச்சியைக் கொண்ட, உயர்ந்த கொல்லி மலைக்குரியவன், வரையாது கொடுக்கும் வள்ளல், வெற்றியை விழையும் வீரன்!

## 28

## அறநெறிப் படிகள்

வல்வில் ஓரியைக் கழைதின் யானையார் பாடிய பிறிதொரு பாடல், நினைவிற் கொள்ளத்தக்கது. யானையார் என்னும் இப் பெயர், இவருக்குப் பாடலால் இடப்பெற்றதாக இருக்கலாம். அப்பாடல் கிடைத்திலது. கழை – கரும்பு. கரும்பு தின்னும் யானை பற்றி இவர் குறிப்பிட்டிருக்கக் கூடும்.

யாதோ காரணத்தால் ஓரி, இவருக்குப் பரிசில் தரக்காலம் தாழ்த்துள்ளான் என எண்ண இடமுளது. ஓரியின் வள்ளன்மை பற்றிப் புகழுமிவர், பரிசில் பெறாமைக்குப் 'புறப்பட்ட நேரம் சரியில்லை' என்பது போல் பாடுகின்றார். இப் பாடலில் ஈதலும் ஏற்றலும் பற்றி, இவர் தந்துள்ள விளக்கம் நிலைபேறுடைய விழுமியமாகும்.

ஈ என இரத்தல் இழிந்தன்று, அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று,
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று, அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று

முயற்சியின்மையான் வறுமையுற்று 'ஈ' எனப் பிறரிடம் இரப்பது இழிவு. இயற்கை அழிவுகளாலோ, பிறவற்றாலோ வறுமையுற்று வருபவரிடம், தன்னிடம் இருப்பவும் 'ஈயேன்' எனல் அதனை விட இழிவுடையது.

முயற்சியுடையவனாய், பிறர்பலர்க்கும் அவர் கேளாதே கொள்க எனக் கொடுத்துதவ வல்லனாய் வாழ்வது உயர்வுடையதாகும்.

அதற்கு மாறாக, போதுமென்ற மனமுடையவனாக, பிறர் தரினும் அதனைப் பெற்றுக் கொள்ளாத பெருமித வாழ்வுடையவனாக இருப்பது எல்லாவற்றையும் விட உயர்வுடையதாகும்.

தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணார் ஆகுப நீர்வேட் டோரே
ஆவும் மாவும் சென்றுணக் கலங்கி
சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்

தெளிந்த நீரையுடைய பரந்த ஓசையிடும் அலைகளையுடைய பெருங்கடலேயாயினும் நீர்வேட்கையுற்றார் அதனைப் பருகார். சேறும்சகதியுமான சிறுமையுடைய குடிநீர்க்குளத்தில் நீர்பருகும் துறைகள் பலவாகும்.

புள்ளும் பொழுதும் பழித்த வல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்; அதனால்
புலவேன் வாழியர் ஓரி, விசும்பில்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே (204)

பாணர், புலவர்கள் போல்வார், கேட்ட பரிசில் கிடைக்காதபோது, தாம் தேடிச் சென்ற வள்ளல்களைப்பழியார். தாம் புறப்பட்ட நேரத்தையும் குறி (சகுனம்) சரியில்லை என்றும் அவற்றையே பழிப்பர். அதனால் ஓரியே! வானத்துக் கரிய முகில்போல் கொடை சுரக்கும் வள்ளன்மையுடையாய்! நின்னைப் புலவேன்! நீ வாழ்வாயாக!

நிலம் மேடுபள்ளம் நிறைந்தது. 'ஆறிடு மடுவும் மேடும்' என்பது, ஔவை பாட்டு. வாழ்க்கையும் ஏற்றமும் இறக்கமும் உடையது. பிறர்க்கு உதவி கொடுத்தலும் பிறரிடம் உதவிபெறுதலும் இயற்கையே. ஈதலும் ஏற்றலும் இல்லாத இடமே சிறந்தது. உலகம் அதை நோக்கி நடைபயிலுதல் வேண்டும். ஆயினும் இவை தவிர்க்க முடியாத நிலைகளும் குறுக்கிடுகின்றன. இப்பாடலின் முதல் நான்கு அடிகள் மானுட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு விழுமியத்தை, படிப்படியாக வைத்து விளக்கியிருப்பது மிகுந்த சிந்தனைக்குரியது. பாடலில் அறநெறிப் படிகள் அழகுடன் சித்திரிக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு படியும் மேல்நோக்கிச் செல்கிறது. மனித வாழ்க்கையின் முன்னேற்றப் படிகள் இவை எனலாம்.

## குமணன்

குமணன் கொடைக்குணம் மிக்கவன்; முதிர மலைக்குத் தலைவன். அவனைப் பெருஞ்சித்திரனார், பெருந்தலைச் சாத்தனார் என்ற இரண்டு புலவர்கள் பாடியுள்ளனர்.

பெருஞ்சித்திரனார் தம் குடும்ப வறுமையைக் கூறி, குமணனிடம் பரிசில் வேண்டும் பாடல்கள் இரண்டு நெஞ்சை நெகிழ்விப்பன. அவை

வறுமையைச் சித்திரிக்கும் விதமும் மனைவி குடும்பப் பொறுப்பை நிறைவேற்ற முயலுதலும் போல்வன, நடைமுறை வாழ்வைக் காட்டுகின்றன (159, 160) . அவர் ஏழுவள்ளல்களைக் குறிப்பிட்டு, அவர்களுக்குப் பின், குமணனே வாடிய புலவர்களின் வறுமை போக்கு பவனாகத் திகழ்வதை விளக்குகிறார். அவ் ஏழு வள்ளல்கள் பாரி, ஓரி (வல்வில்ஓரி), காரி (மலையமான் திருமுடிக் காரி), எழினி (அதியமான் அஞ்சி), பேகன், ஆய், நள்ளி என்பவர் ஆவர் (158).

## 29

### புலவர் தந்த பரிசில்

பெருஞ்சித்திரனார் வெளிமான் என்னும் மன்னனிடம் பரிசில் வேண்டிச் சென்றபோது, அவன் சாகும் நிலையில் இருந்ததால், தன் தம்பியைப் பரிசில் தந்தனுப்புமாறு கூறினான். இளவெளிமான் 'சிறிதுகொடுப்ப', அதனை வேண்டாமென மறுத்துப் புலவர் புறப்பட்டுவிட்டார் (207). பின்னர் குமணனிடம் சென்று, பாடி அவ்வள்ளலிடம் யானைப் பரிசில் கேட்டுப் பெற்றார் (161). பின்னர் இளவெளிமானிடம் வந்து, அவனது காவல் மரத்தில் அந்த யானையைக் கட்டிவிட்டு, அவனிடம் சென்று, 'தாம் தந்த யானைப் பரிசிலைக் கொள்ளுமாறு' வேண்டுகிறார். 'பெரிதே உலகம், பேணுநர் பலரே' என்பது அவரது ஆளுமையைக் காட்டுகிறது. இளவெளிமானிடம் தன் பெருமிதம் தோன்ற, சீற்றத்துடன் எடுத்துரைக்கும் விதம், அக்காலப் புலவர்களின் மானஉணர்வைப் புலப்படுத்துகிறது.

இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்
இரவலர் உண்மையும் காண், இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண், இனி நின்ஊர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல்! செல்வல் யானே (162)

கடிமரம் – காவல்மரம். முரசு கட்டில், காவல் மரம் போல்வன அக்கால மன்னர்களின் பெருமைக்குரிய சின்னம். காவல் மரம் 'வருந்த' யானையைக் கட்ட மிகுந்த துணிச்சல் வேண்டும்.

## 30

## புலவரின் கொடையுள்ளம்

இக் குறும் பாடலின் பாநடையிலேயே, புலவரின் பெருமிதமும் சீற்றமும் வெளிப்படுவது காணலாம். தம் குடும்பத்தின் வறுமையை கேட்பவர் நெஞ்சம் நெகிழுமாறு எடுத்துரைத்த சித்திரனார், ஒரு முறை குமணனிடம் பரிசில் பெற்றுவந்த போது, அதனை எல்லோர்க்கும் உடனே பகிர்ந்து கொடுக்குமாறு தம் மனைவியிடம் கூறுகிறார். இதுவும் அக்காலச் சூழலைக் காட்டுகிறது. பாணர்களும் பரிசில் மிகுதியாகக் கிடைக்குமாயினும் ஓரிடத்துத் தங்குவதுமில்லை; பெற்ற பரிசிலைப் பல காலத்திற்கு வேண்டுமெனப் பாதுகாப்பதுமில்லை. அவர்களுடைய இப்'பரிசில் வாழ்க்கை'யே, புலவர்களிடமும் தொடர்கிறது. சங்கப் புலவர்களின் இப் 'பரிசில் வாழ்க்கை' பல கோணங்களில் பார்க்கத் தக்கது. அவர்கள் வறுமை பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்கள் பெற்ற பரிசில்களைவிட, அவர்களால் பாடப்பெற்ற வள்ளல்களின் புகழை நிலைநிறுத்திய பாங்கு பலமடங்கு உயர்ந்தது. 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன், மெய் கூறுவல்' என வாழ்ந்தவர்கள் அவர்கள். 'அண்ணாந்து ஏந்திய நும்மோரன்ன செம்மலும் உடைத்தே' எனத் தம் வாழ்வைப் பற்றி, மன்னர்களிடம் விளக்கியவர்கள் அவர்கள். அவர்கள் தம் புலமையில் பெரும் உறுதி கொண்டவர்கள். தாழ்வுமனப்பான்மையே இல்லாத பெருமிதப் புலவர்கள் அவர்கள். பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பெற்றுவந்த பரிசிலைப் பற்றித் தம் மனைவியிடம் கூறுவதைப் பாருங்கள்.

**நின்நயந்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்**
**பல்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்**

கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே!
பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே (163)

திருந்திய வேல் குமணன் நல்கிய செல்வத்தை, உன்னை விரும்பியவர்களுக்கும் நீ விரும்பியவர்களுக்கும் பலவாறு மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய உன் சுற்றத்தார் அனைவர்க்கும் கொடு! நாம் குடும்பத்தோடு கடும்பசியால் வாடியபோது, நெடுங்'குறியெதிர்ப்பாக' (நீண்ட காலம் ஆகிவிட்ட நிலை) அவ்வப்போது வேண்டியவற்றை நமக்கு உதவியவர்களுக்கெல்லாம் கொடுத்துவிடு! இதைப் பத்திரப்படுத்தி 'வல்லாங்கு வாழ்தும்' என எண்ணாது நீயும் கொடு, நானும் கொடுக்கின்றேன்.

மனை கிழவோய்! என் மனையாட்டியே! இவ்வாறு நாம் பெற்ற பரிசிலை எல்லோர்க்கும் கொடுப்பாயாக!

இவ்வாறு கூறும்போது, அக்காலப் புலவர்கள், புரவலர்கள் போல் உயர்ந்துவிடுவதால், அன்று புலவர்க்கும் புரவலர்க்கும் ஏற்றத் தாழ்வு எதுவும் காணப்படவில்லை.

## 31

## பெருஞ்சித்திரனாரின் புலமைப் பெருமிதம்

இப்பெருஞ்சித்திரனாரின் பெருமித வாழ்வுக்கு மற்றுமொரு சான்று காட்டலாம், ஒருமுறை அதியமான் நெடுமான் அஞ்சியிடம் இவர் பரிசில் வேண்டிச் சென்றபோது, அவன் நேரில் வந்து தராமல் தன்

அலுவலர்களிடம் தந்து கொடுக்கச் சொல்லியனுப்பிய பரிசிலை, இவர் வாங்க மறுத்துவிட்டார்.

'குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கு' என
நின்றஎன் நயந்து அருளி, 'ஈதுகொண்டு
ஈங்கனம் செல்க தான்' என, என்னை
யாங்கு அறிந்தனனோ தாங்கரும் காவலன்?
காணாது ஈத்தஇப் பொருட்கு யான்ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லென், பேணி
தினை அனைத்து ஆயினும் இனிது - அவர்
துணைஅளவுஅறிந்து, நல்கினர்விடினே (208)

பரிசில் பெற்றுச் செல்ல, குன்றும் மலையும் கடந்துவந்தாராம். அவரிடம், 'இதைப் பெற்றுச் செல்க' எனக் கூறி, அருளுடன் ஆள் மூலம் சொல்லியனுப்பினானாம் அதியன். இது கண்ட பெருஞ்சித்திரனார், நேரில் அழைத்துக் கண்டு தராத பரிசிலைப் பெற மறுத்துவிட்டார். பாட்டுப் பாடி, அதற்கு விலையாகப் பரிசில் பெறும் 'வாணிகப் பரிசிலன்' அல்லென் நான் என்று கூறுகிறார். புலவரது தகுதியறிந்து, தினை அளவாயினும் பெருமையுடன் கொடுத்தால் அதுவே இனிதாகுமாம்!

இவ்வாறு கூறிச் சென்றுவிட்டார் புலவர்.

## 32

## கொடைக்குக் குமணன்

### பெருந்தலைச் சாத்தனார்

பெருஞ்சித்திரனாரைப் போலவே, பெருந்தலைச் சாத்தனாரும் குமணவள்ளலிடம், தன் குடும்ப வறுமையை எடுத்துரைக்கின்றார். தம்

மனைவி படும் துயரையும், தம் குழந்தை தாய்ப்பாலும் இன்றி, தாயின் வறிய மார்பைச் சுவைத்து அழுவதையும் இருவரும் குறிப்பிடுகின்றனர்.

இவ்இருவரின் வறுமைப் புனைவுகள் மிக இயல்பாக, உள்ளதை உள்ளபடி கூறுகின்றன (164).

குமணனுக்கும் இளங்குமணனுக்கும் தாயஉரிமை காரணமாகவோ, பிறவாறோ பகைமை ஏற்பட, தம்பியால் நாடு கொள்ளப்பட்டு. குமணன் காட்டிடையே வாழ்ந்திருந்தனன். தன் அண்ணனின் தலையைக் கொணர்வார்க்குப் பரிசு தருவதாக இளங்குமணன் அறிவித்திருந்தனன். இச் சூழலில் சாத்தனார் குமணனைக் காட்டிடையே கண்டார். அப்போது, புலவர்க்குத் தரத் தன்னிடம் வேறு எதுவுமின்மையின், குமணன் தன்வாளைப் புலவரிடம் தந்து, 'என் தலையை வெட்டி எடுத்துச் சென்று, என் தம்பியிடம் தந்து, அதற்கான பரிசைப் பெறுக' என்று கூறி, தன் உடைவாளைப் புலவரிடம் தந்தான் இதுகண்ட புலவர் அதிர்ச்சியடைந்து, அவ்வாளை வாங்கிக்கொண்டு, இளங்குமணனிடம் சென்று, பெருமிதத்துடன் அவனது தமையனின் கொடைவண்மையைச் சிறப்பித்துக் கூறி, அவனை நாணும்படி செய்தார்.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே

முதலிரண்டு அடிகள் புகழின் சிறப்பைக் கூறுகின்றன. நிலையற்ற உலகத்தில் நிலைபெறுதலை எண்ணுகின்றவர்கள், தம் புகழை இங்கே நிலைநிறுத்தி, தாம் இறந்தனர். அவ்வாறு தொன்று தொட்டுவரும் மக்களின் மரபுத் தொடர்ச்சியை அறியாதார் பற்றி, அடுத்த மூன்றடிகள் கூறுகின்றன.

துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க்கு ஈஇ யாமையின்
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே

இது இளங்குமணனைக் குத்திக் காட்டுவதுபோல் உளது. துன்னரும் சிறப்பு – நெருங்குதற்கரிய பெருஞ்சிறப்பு.

தாள்தாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடிநின்றனெனாக,

முழந்தாள் வரை தொங்கும் மணி, இரட்டித்து ஒலிக்க நடக்கும், அழகிய நெற்றிப்பட்டத்தையுடைய நல்ல யானைகளைப் பாடுவோர்க்குக் குறைவின்றிக் கொடுக்கும், அழியாத புகழையுடைய, குதிரையேறி வரும் தோன்றலை – குமணனைப்பாடி நின்றேன். அவ்வாறு நான் நின்றபோது...

பெருஞ்சித்திரனார்க்கு யானைப் பரிசில் தந்ததையும் இது குறிப்பால் உணர்த்துவது போல் உளது.

....... கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்
நாடுஇழந் ததனினும் நனி இன்னாதுஎன
வாள்தந்தனனே, தலைஎனக்கு ஈயத்
தன்னிற்சிறந்தது பிறிதொன்று இன்மையின்..

பெருமை பெறு பரிசிலன், வெறுமனே பிரிதல் மிகவும் வருத்தம் தருவதாகும் என நினைத்தனன். தன் நாடு இழந்ததைவிட அது மிகவும் துன்பம் தருவதெனக்கருதி, அந்நிலையில் தன்னை விடச் சிறந்தது, பிறிதொன்று இன்மையின், தன் தலையையே எனக்குத்தர, என்னிடம் தன் உடைவாளைத் தந்தனன்.

ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே (165)

போரில் புறங்காட்டாத தன்மையுடைய நின்உறவினனைக் கண்டு, அவனது

பெருமிதத்தைப் பார்த்து, வெற்றிக் களிப்புமிக்க மகிழ்ச்சியுடன் இங்கு வந்துள்ளேன்.

பெருந்தலைச் சாத்தனார் இளங்குமணனிடம் பரிசில் கேட்கவில்லை. அவன் மனத்தில் பதியும்படி நடந்ததைக் கூறிச் செல்கிறார்.

வெற்றிக் களிப்போடு வருவதாகக் கூறுவது, இளங்குமணன் நெஞ்சில், ஈட்டிபோற் பாயவல்லதாகும். ஈயாத உன்னைவிட, தலையையே ஈதற்கு முன் வந்த உன் தமையனின் பேருள்ளத்தைப்பார் எனச் சிரித்தபடி கேட்பதுபோல் உளது.

கொடைக்குக் கர்ணன் என்றால் போதாது. கொடைக்குக் குமணன் என்று பள்ளிப் பிள்ளைகளுக்கும் பாடம் சொல்லவேண்டும்.

## கோவூர் கிழார்

கோவூர் கிழார் மிகச் சிறந்த நாவன்மையுடைய புலவர். அரசர்களுக்கும் அஞ்சாது அறிவுரை கூறுபவர். இவர் பாடியனவாகப் புறநானூற்றில் 15 பாடல்கள் உள. இவர் ஆற்றிய அருஞ்செயல்கள் மூன்று குறும்படங்களாய்க் காணத் தக்கன.

அறிவுரை

சோழவேந்தர்களுள் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரும் தாய உரிமையுடைய உறவினர். இவர்களுள் பகைமை மூண்டது.

33

## சந்து செய்விக்கும் சாதுரியம்

முதலில் உறையூரினுள் இருந்த நெடுங்கிள்ளியுடன் போரிட, நலங்கிள்ளி முற்றுகையிட்டான். கோவூர் கிழார் அவ்இருவர்க்கும் அறிவுரை கூறி, ஒரு குடியிற் பிறந்தார், தம்முள் போரிடல் நன்றன்று என்றார். மேலும்

பகைவேந்தர்க்கு இது பெரு மகிழ்ச்சி தரும் செயலாகும்; எனவே போரைத் தவிர்ப்பீர் என இருவர்க்கும் அறிவுரை கூறுகின்றார்.

இரும்பனைவெண்தோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே
இருவீர் வேறல் இயற்கையு மன்றே
அதனால்
குடிப்பொரு என்றுநும் செய்தி கொடித்தேர்
நும்மோ நன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும்இவ் இகலே (45)

பகைத்து நிற்பவன் பனம்பூந் தோட்டைச் சூடிய சேரனல்லன்; வேப்பமாலை அணிந்த பாண்டியனுமல்லன். உன் கண்ணியும் ஆத்திமாலை; உன்னொடு போர் செய்வோன் கண்ணியும் ஆத்திமாலையே. உங்கள் இருவரில் ஒருவர் தோற்பினும் உம் சோழர்குடி தோற்றதென்றே ஆகும். அல்லாமல் இருவரும் வெல்லுதல் என்பதும் இயற்கையன்று. அதனால் நீங்கள் செய்வது உங்கள் குடிச்சிறப்புக்குப் பொருந்தாது. மேலும் உங்கள் செய்கை, உங்களைப் போன்ற பிற வேந்தர்களுக்கு உடம்பு பூரிக்கும்படியான மகிழ்ச்சியைத் தரும். போரை இருவரும் கைவிடுதலே நல்லது. கோவூர் கிழாரின் சந்து செய்விக்கும் சாதுரியம் பாடலில் வெளிப்படுகிறது (சந்து செய்வித்தல் – ஒற்றுமைப்படுத்துதல்)

இவ்வாறு கோவூர் கிழார் அறிவுரை கூறியும், அவர்கள் போரைக் கைவிட்டதாகத் தோற்றவில்லை.

## 34

## அறிவுரை கூறும் ஆளுமை

ஆவூருக்குத் தப்பிப்போய் நெடுங்கிள்ளி இருந்தபோது, நலங்கிள்ளி அவ்வூரையும் முற்றுகையிட்டான். கோட்டையை அடைத்திருந்த நெடுங்கிள்ளி, அதனைத் திறவாது உள்ளேயே இருந்தான். இதனால் மக்கள் வெளிப்போக்குவரத்து இன்றித் துன்புற்றனர். மகளிர், குழந்தைகள், யானை முதலியன எனப் பலர்க்கும் பெருந்துயரமாயிற்று. இதைக் கண்ட கோவூர்கிழார், நெடுங்கிள்ளியிடம் சென்று, போர் செய்ய இயலாதாயின், அறநெறி பேண, கோட்டையை 'நினது' என்று திறந்துவிடுக அல்லது வீரத்துடன் போர் செய்வதாயின், அவ்வாறே போர்செய்யத் திறந்திடுக. இரண்டுமின்றி, கதவை அடைத்திருத்தல் நாணத்தக்கது. இவ்வாறு அறிவுரை கூறுகிறார்.

இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளும் கைய வெய்துயிர்த்து
அலமரல் யானை உருமென முழங்கவும்

பெரிய பெண்யானைக் கூட்டத்துடன் களிறுகள் குளத்தில் நீராட்டப்படவில்லை; அவற்றிற்கு நெய்ம்மிதி கவள உணவுகள் ஊட்டப்படவில்லை; கட்டுத்தறிகள் வருந்த, அவற்றில் மோதி தரையில் விழுந்து புரளுகின்ற கையை உடையவாய், பெரு மூச்சுவிட்டு யானைகள் வருந்தி இடியோசை போல் முழங்குகின்றன.

பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும் நீரில்
வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்
இன்னாதம்ம ஈங்கினி திருத்தல்!

குழந்தைகள் பாலின்றி அலறுகின்றன; மகளிர் பூக்களின்றி வறுந்தலையை முடிக்கின்றனர். நீரில்லாத வீடுகளில் அழும் ஒலி கேட்கிறது. இவ்வாறாக, மன்னனே! நீ இங்கு இனிதிருத்தல் தவறு.

துன்னரும் துப்பின் வயமான் தோன்றல்!
அறவை யாயின் நினதெனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக உடைத்திது காணுங் காலே (புறம்.44)

நெருங்குதற்கரிய வலிமையுடைய குதிரைகளையுடைய தோன்றலே! அறநெறி போற்றின் நாட்டை உனது என்று கூறித்திறந்துவிடு! வீரனாயின் போர்செய்யத் திறந்து விடு! இரண்டுமின்றி, திண்ணிய கதவின் புறத்தே, மதிலின் ஒரு பக்கத்தில் ஒடுங்கியிருத்தல், வெட்கப்படத்தக்கதாகும்.

## 35

## அருள் உள்ளம்

கோவலூரில் மலையமான் என்ற ஒரு சிற்றரசன் இருந்தான். அறிவால் உழுதுண்ணும் புலவர்களின் வறுமைத்துன்பத்திற்கு வருந்தி, தம் செல்வத்தை அவர்களுக்குப் பகுத்தளித்து வாழும் மரபில் வந்தவர்கள் அக்குடியினர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், அம்மலையமானுடன் பகைத்து, அவனை வென்றனன். மேலும் சிறிதும் கருணையின்றி, அவன் பெற்ற மக்களை, – பால் மணம் மாறாத சிறுவரை – யானைக் காலில் இடற வைத்துக் கொல்ல முயன்றான். இதைக் கேள்விப்பட்ட கோவூர்கிழார் அங்கு விரைந்து வந்தார். அங்கு நடந்தவற்றைப் பார்த்து, மனம் நொந்து சோழனுக்கு அறிவுரை கூறி, அச்சிறுவரைக் காப்பாற்றினார்.

நீயே,
புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை.
இவரே,
புலனுழுது உண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண்டு அழூஉம் அழாஅன் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்தின் புன்கணோ உடையர்
கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே (46)

சோழ வேந்தே! புறாவின் துன்பம் தீர்த்த சிபிச் சக்கரவர்த்தியின் மரபில் வந்து, பிறர் பலர் துன்பங்களையும் தீர்த்தவர் வழி வந்தவன் நீ! இச் சிறுவர்கள் புலமையால் உழுதுண்போரின் வறுமைத் துன்பத்தைப் போக்கத் தம்செல்வத்தைப் பகிர்ந்து தரும் மரபில் வந்து வாழ்பவர்கள்.

இவர்கள் தங்களை மிதித்துக் சொல்லவந்த யானைகளைப் பார்த்தும், முதலில் அழுதவர்கள் அழுகையை மறந்து, நிற்கின்றனர். முன்பு அறியாத் துன்பத்தை அடைந்து, இம் மன்றத்தை மருண்டு பார்க்கின்றனர்! எனது இச்சொற்களைக் கேட்டனையாயின், பிறகு நீ உன் விருப்பப்படி செய்வாயாக!

சங்கப் பாடல்களுக்கே உள்ள சிறப்பு, சொல்ல வந்ததன் பயன், பாடலுக்கு வெளியேதான் குறிப்பால் உணரப்படும். கோவூர்கிழாரும் வற்புறுத்தி முடிக்கவில்லை. 'கேட்டனை யாயின், வேட்டது செய்ம்மே' என்று, சோழனைச் சிந்திக்க வைக்கின்றார்.

## 36

## மனித நேயம்

நெடுங்கிள்ளி உறையூரில் இருந்தபோது, அவனது உறவினன் நலங்கிள்ளியிடமிருந்து, இளந்தத்தன் என்னும் புலவன் அவ்வூருக்கு வந்தான்.

அக்காலத்தில் புலவர்கள் எங்கும் செல்வர். அவர்களுக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்று யாரும் இல்லை. ஆனால், நெடுங்கிள்ளி இப்புலவர் நலங்கிள்ளி யனுப்பி, ஒற்றுப் பார்க்க வந்துள்ளார் எனத் தவறாக நினைத்து, அப்புலவரைக் கொல்லப் போனான். அப்போது, இதைக் கேள்விப்பட்டு அங்கு வந்த கோவூர் கிழார், நெடுங்கிள்ளிக்குப் புலவர்களது 'பரிசில் வாழ்க்கையை' மிகத் திறம்படப் பெருமிதத்துடன் எடுத்துச் சொல்லிப் புலவரைக் காப்பாற்றினார்.

பழுமரம் தேடும் பறவைகள் போல, வள்ளல்களைத் தேடிச் சுரம்பல கடந்து புலவர்கள் செல்வார்கள். அங்கு தம் பக்குவப்படாத நாவினால் இயன்றவரை பாப் புனைந்து பாடுவார்கள். பெற்றதற்கு மகிழ்ந்து தாமும் உண்டு தம் சுற்றத்திற்கும் கொடுத்து, நாளைக்கு வேண்டுமென்று பாதுகாவாது, தாம் பெற்றவற்றை எல்லோர்க்கும் கொடுப்பார்கள்.

தங்கள் பாட்டின் திறமறிந்து, தகுதியறிந்து, மதித்துப் போற்றவேண்டுமென எண்ணும் மனமுடையவர்கள்.

இப்பரிசில் வாழ்க்கை பிறர்க்குத் தீங்கறியாதது. மேலும் திறமையுடன், தம் பகைவர்கள் நாணும்படி, புலமையால் வென்று, தலைநிமிர்ந்து வாழ்பவர்கள். ஓங்கிய புகழுடன், மண்ணுலகை ஆளும் செல்வத்தையடைந்துள்ள உங்களைப்போன்ற பெருமிதமும் உடையவர்கள். அவர்கள் நீ நினைப்பது போல், தீங்கு செய்யும் உள்ளமுடையவர்கள் அல்லர் என்பது கருத்து.

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி

வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே,
திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்குஇனிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே (47)

பரிசில் வாழ்க்கை எனப் பெயர்சூட்டி, அதன் முழு இயல்பையும் இப்பாடல் வரைந்து காட்டுகிறது. ஓம்பாது உண்டு. கூம்பாது வீசி - நாளைக்கு வேண்டுமென்று பத்திரப்படுத்தாது தானும் உண்டு, மற்றவர்களுக்கும் குறைவுபடாது கொடுத்து.

பெற்றது போதுமென மகிழ்ந்து, தன் சுற்றத்தை உண்ணவைத்து. வாடியா நாவின் வல்லாங்குப் பாடி என்பது தன்னடக்கம்.

வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை - பொருளை மட்டுமன்று. தம் தகுதியை அறிந்து தருதலை விரும்பும் பரிசில் வாழ்க்கை. 'வரிசை அறிதலோ அரிதே' என்பார் கபிலரும். வரிசை - தகுதி. தத்தமது புலமைக்கேற்பத் தம்மை அறிந்து போற்ற வேண்டுமென்பதிது.

மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோரன்ன செம்மலு முடைத்தே - என புலமைச் செல்வரும், 'மண்ணை' ஆளும் செல்வர்க்கு நிகரானவரே என்னும் போது, புலமைப் பெருமிதம் தோற்றுகிறது.

கோவூர்கிழார் கெஞ்சிக் கேட்டு முடிக்க வில்லை. 'தீதறியாதது' என்று மட்டும் கூறினார். இங்கும் 'கேட்டனையாயின் வேட்டது செய்ம்மே' என விட்டுவிடுகிறார்.

## 37

## குடும்பம் காக்கும் புலவர் பெருமக்கள்

### பேகனும் கண்ணகியும்

வையாவிக்கோப் பெரும் பேகன் ஆவியர் குடியிற் பிறந்தவன். குளிரால் நடுங்குவதாக எண்ணி, மயிலுக்குப் போர்வை ஈந்தவன். அத்துணைக் கழிவிரக்கம் உடையவன் என்பது கருத்து. இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன் இவன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்திருந்த போது, இவனது புறத்தொழுக்கத்தைக் குறிப்பாகக் கண்டித்துப் புலவர்களால் அறிவுரை கூறப்பெற்றவன். அறிவுரை கூறிய புலவர்கள் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆவர்.

இப்பேகனைப் பரணர் பாடும் பொழுது, 'என்றும், உடாஅ போரா வாகுத லறிந்தும், படாம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ' என்று கூறுகின்றார் (141).

கபிலர், 'நின் ஊரில் உன் வீட்டு வாயிலில் நின்று, உன்னையும் உன் மலையையும் வாழ்த்திப் பாடினேன். அப்போது, 'இன்னாது இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாளாய், ஒருத்தி குழல் இரங்கி ஒலிப்பது போல் விம்மி அழுதனள்'; 'கைவல் ஈகைக் கடுமான் பேக! யார்கொல் அளியள் தானே?' – என்று ஒன்றும் தெரியாதவர்போல் கேட்கும் அழகு கருதத்தக்கது. 'உன் மனைவிக்கு அருளல் வேண்டும்' என்று நேரே சொல்லாமல், இவ்வாறு சொன்னதிலேயுள்ள அழகு நயமிக்கது (143).

பரணர் பேகனின் புறத்தொழுக்கத்தை வெளிப்படையாகக் கூறி, 'அருளாயாதலோ கொடிதே' என்றார் (144). அடுத்த பாடலில் இதனிலும் கடுமையாகக் கூறுகிறார், பரணர். 'மயிலுக்குப் போர்வை ஈந்த பேகனே! யாம் பசித்தும் வாரேம், பாரமும் இலமே! தேர் ஏறிச் சென்று, இன்னாது உறையும் உன் மனைவியின் அரும்படர் களைவாயாக! இதுவே யாம் இரந்த பரிசில்;' என்று கூறுகிறார் (145)

அரிசில் கிழார், "எமக்கு உன் செல்வம் யாதும் வேண்டாம். எமக்குப் பரிசில் நல்குவதானால், உடனே, உன் மனைவி மகிழ்ச்சியுற்றுத் தன்னை அழகுபடுத்திக் கொள்ளுமாறு, உன் குதிரை பூட்டிய தேர்களில் புறப்படுக!" என்று கூறுகிறார்.

அன்ன ஆகநின் அருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேம், அடுபோர்ப் பேக!

சீறியாழ் செவ்வழி பண்ணி, நின்வன்புல
நல்நாடு பாட, என்னை நயந்து
பரிசில் நல்குவையாயின், குரிசில் நீ
நல்கா மையின் நைவரச் சாஅய்
அருந்துயர் உழக்கும்நின் திருந்திழை அரிவை
கலிமயில் கலாவம் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇ,
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே (146)

வெறுக்கை - செல்வம். பரிசில் நல்குவதாயின், நீ உன் மனைவி தன் மயில்தோகை போன்ற கூந்தலை அழகுபடுத்திக் கொள்ளுமாறு, உனது தேரில் உடனே புறப்பட, குதிரைகள் பூட்டப்படுவனவாக! என்பது கருத்து. மயிலுக்குப் போர்வை ஈந்தவனே, உன் மனைவியாம் மயிலைப் போற்றுக என்பதில் எத்துணைத் தாக்கம் உளது!

இது போலவே பெருங்குன்றூர் கிழாரும், பேகனிடம் 'நீ உன் மனைவியை மகிழ்வித்தலே, யாம் வேண்டும் பரிசில்' எனப் பாடுகிறார் (147).

## நக்கண்ணையார்

சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளிக்கும் முக்காவனாட்டு ஆமூர் மல்லனுக்கும் மற்போர் நடைபெற்றுள்ளது. இப்போரைப் பற்றி

சாத்தந்தையார் என்ற புலவர் மூன்று பாடல்கள் புனைந்துள்ளார் (80-83) ஒரு பாடலில் மற்போரைக் கண்முன்னர்க் கொண்டுவந்து காட்ட முயல்கின்றார் சாத்தந்தையார்.

சாறுதலைக் கொண்டென பெண்ஈற்று உற்றென
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்று
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே (புறம். 82)

ஊரில் விழாத் தொடங்கிவிட்டதாலும் மனைவியின் மகப்பேறு நெருங்கிவிட்டதாலும் அவற்றிற்குதவ விரைந்து போக வேண்டிய மனநிலை. ஞாயிறு மறைகின்ற நேரம் மழை வேறு பெய்யத் தொடங்கிவிட்டது. இந்நேரத்தில் கட்டிலைப் பின்னுபவன் கையிலுள்ள ஊசி, எப்படி இடைவெளியூடே விரைந்து விரைந்து வாரைச் செலுத்துமோ அது போல, ஊரறிய வந்த ஆமூர் மல்லனொடு ஆத்திமாலை சூடிய பெருங்கிள்ளி நடத்திய மற்போர் இருந்தது.

இப்பெருநற்கிள்ளி தித்தன் என்னும் தன் தந்தையால் விரட்டப்பட்டுப் புல்லரிசிச் சோற்றைத் தின்று வாழவேண்டியவன் ஆனான். அந்நிலையிலும் அவன் தோள்வலி குறையவில்லை. போரின் போது கிள்ளியினது ஒரு கால் மண்டியிட்டு, மல்லனது மார்பிலே தாக்க, மற்றொரு கால் அம்மல்லன் தாக்குவதை விலக்கிவிட்டு முதுகை வளைத்துப் பற்றியது; பசியெடுத்த யானை மூங்கிலை வளைத்துப் பிசைவது போல, அம்மல்லனது தலையையும் காலையும் மோதி வென்று வீழ்த்தினான் மன்னன்.

இக்காட்சியைக் கண்டு, தன் மகனை விரட்டிய தித்தன் மகிழினும் மகிழட்டும்; மகிழாது போயினும் போகட்டும். இவ்வாறு சாத்தந்தையார் பாடுகிறார்.

## 38

## கரையைக் கடக்கும் காதலுணர்வு

இச்சோழன் மீது காதல்கொண்டாள், பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்.

"காலில் கழலணிந்தவனும் முகத்தில் மை போன்ற கரிய தாடியினையுமுடைய காளைக்கு, என் காதலால் எனது கையிலுள்ள வளையல்கள் கழன்று விழுதலைக் கண்டால் தாய் துன்புறுத்தவளென்று அதற்கு அஞ்சுவேன்; ஓடிச் சென்று அவனது தோளைத் தழுவிக் கொள்ளலாம் என்றால், கூடிநிற்கும் அவையிலுள்ளாரைக் கண்டு நாணுகின்றேன். இவ்ஊரினரோ ஒருமுறை இவன் வெல்வானென்றும் மறுமுறை அவன் வெல்வான் என்றும் ஆரவாரிக்கின்றனர். இவர்களும் என்னைப் போல நடுக்க முறுவார்களாக"(83).

"என் காதலன் புல்லரிசிச் சோற்றை உண்டும், ஆற்றலுள்ள தோளையுடையவன். யானும் அவனைப் பலமுறை பார்த்திருந்தும், தழுவப் பெறாமையால் பசலை நிறம் பாயப்பெற்றேன். அவன் போரிலே புகுந்தால், உப்புவிற்கும் உமணர்தம் வண்டிகள் ஏற்றஇறக்கம் மிக்க துறையில் அகப்பட்டதுபோல பகைவர் தடுமாறித் தோற்றோடுவர்." (84)

"என் காதலனுக்கு உரிய ஊர் இதுவன்று (இது ஆமூர் மல்லனுடைய ஊர்). இது என் காதலனது நாடுமன்று. அதனால் சிலர் இது கிள்ளியது வெற்றியே என்று பலகாற் கூவுவர்; மற்றும் சிலர் இது கிள்ளியது வெற்றியன்று என்பர். இவ்விருவரது ஆரவாரமும் நன்றே. பலர் கூடிய இடத்தில், இரண்டு கருத்துத் தோன்றல் இயல்பே. எல்லாம் என் காதலனைப் பற்றித் தானே. யார் என்ன கூறினும், யான் என் காற்சிலம்பு ஒலிப்ப ஓடி, எம் வீட்டுப் பனைமரத்தின் பருத்த அடியிலே மறைந்து நின்று, இது என் காதலனது வெற்றி யாதலைப் பார்த்தேன்" (85)

என் ஐக்குஊர் இஃதன்மை யானும்
என் ஐக்கு நாடு இஃதன்மை யானும்
'ஆடுஆடு' என்ப ஒருசா ரோரே,
'ஆடுஅன்று' என்ப ஒருசா ரோரே,
நல்ல, பல்லோர் இருநன் மொழியே
அம்சிலம்பு ஒலிப்ப ஓடி எம்இல்
முழாஅரைப் போந்தை பொருந்திநின்று
யான்கண்டனன், அவன் ஆடுஆகுதலே (85)

ஐ–தலைவன். ஆடு – வெற்றி. இரு நன்மொழி – வெற்றி என்றும் அன்று என்றும் கூறுவன. முழாஅரை – பருத்த அடி. போந்தை – பனைமரம்.

இதற்குத் துறை பழிச்சுதல் என்று போடப்பெற்றுள்ளது. ஒரு பெண் தன் காதலனை வெளிப்படச் சொல்லிப் பாராட்டுவதில்லை. (பழிச்சுதல் – பாராட்டி வாழ்த்துதல்) இதனால் இப்பாடல்கள் புறத்திணையிற் சேர்க்கப் பட்டுள்ளன. இதனை 'ஒரு பாற்காதல்' – அதாவது சோழன் அறியாதிருந்தும், நக்கண்ணையார் அவன் மீது ஒருபக்கக் காதல் கொண்டு பாடியதாகக் கருதி, கைக்கிளை எனவும் துறை கூறுவர்.

## 39

## குறைகளை நீக்கும் குழந்தைச் செல்வம்

மக்களுடைய வாழ்நாளில் பலவகைச் செல்வங்களைப் பெற்றாலும், அவை முழு உரிமையுடையவை ஆகா. செல்வங்கள், சொத்துக்கள் கைமாறும், விட்டு விலகும், நிலைத்து நில்லாது போகும். ஒருவன் பெறும் குழந்தைச் செல்வமே, அவனுக்கே உரிமையுடையதாகும். இதனால்தான் திருவள்ளுவர், 'தம் பொருளென்ப தம் மக்கள்' என்பார்.

தன் குழந்தை மெய்தீண்டல் உடற்கின்பம்; அவர் சொற்கேட்டல் செவிக்கின்பம். 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச்சொற்

கேளாதவர்' (66) என்பது வள்ளுவம். ஒருவர் பெற்ற மக்களால்தான் அவர்தம் குடிவழி நீள்கிறது. மேலும் குழந்தைகள் அப்பா அம்மா பாட்டன் பாட்டியை அப்படியே உரித்துவைத்தாற்போல் தோற்றத்தில் பேச்சில் நடையில் பாவனையில் காணப்படுவர். இதனால் ஒவ்வொருவரும் தாம் பெற்ற மக்களிடம் வைக்கும் வாஞ்சை பெரிது.

பாண்டியன் அறிவுடைநம்பி, ஒரு பாடலில் இச்சின்னஞ்சிறு மழலைச் செல்வத்தைக் கண்முன் விளையாட விடுகின்றார்.

படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெரும் செல்வ ராயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே (188)

எத்தனை வகைச் செல்வங்களையெல்லாம் படைக்கப்பெற்று, பலரோடு கூடியுண்ணும் இன்பத்தைப் பெற்றவர்களாயினும், குழந்தைகள் இன்றேல் அவர்கட்கு வாழ்க்கை முழுமை அடையாது.

குழந்தை சிறிது காலஇடைவெளி விட்டு காலடி எடுத்து வைத்து, தத்தித்தத்தி நடக்கும். தன் சிறு கைகளை நீட்டி ஏதேனும் ஒன்றை உண்ணும் கலத்துள் போடும்; உள்ளே கையைவிட்டு அதைத் தோண்டி எடுக்கும்; எடுத்ததை வாயில் கவ்வும், பிறகு அதைத் துழாவும்.

நெய்ச் சோற்றை உடம்பெல்லாம் சிதறச் செய்யும். இவ்வாறு அறிவை இன்பத்தால் மயக்கும் மக்களைப் பெறாதவர்க்கு, அவர்தம் வாழ்நாளில் குறையாய் முடிக்கப்படும் பயன் பிறிதொன்றில்லை.

வாழ்நாளின் இன்பப் பயனைக் குறையின்றி நிரப்புவது குழந்தைச் செல்வமேயாம்.

இப்பாடலின் சந்த நயமே, குழந்தையை நடமாட விடுகிறது. பாட்டரசர் பாரதியார், கண்ணனை விளையாட்டுப் பிள்ளை என்று பாடும் பொழுது இவ்வாறே காட்சிப்படுத்துவார்.

தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்

என்று பாடுவார் அவர். இத்தகைய பாடல்கள் காலத்தால் அழியாதவை; படிக்குந் தோறும் இன்பம் பயப்பவை. அதனால் இவை நம் நினைவைவிட்டு நீங்குவதில்லை.

## 40

## செல்வத்தின் பயன்

ஒருவரிடம் எவ்வளவு செல்வமிருக்கிறது என்பதன்று முக்கியம்; அச்செல்வத்தை அவர் பயன்கொள்ளும் விதத்திலேதான் அவர் செல்வரென்பதற்குப் பொருளுண்டு. இருப்புப் பெட்டியிலே இருக்கும் பணத்தை, அது காப்பாற்றுகிறது. அதை அது பூதங்காத்த புதையல் போலக் காத்தாலும் அதனால் யாருக்கும் பயனில்லை. சிலர் அவ்வாறுதான் செல்வத்தைப் பாதுகாத்து, பிறகு விட்டுவிட்டுப் போகின்றனர். காலம் முழுவதும் காத்திருந்ததுதான் மிச்சம். அப்படிக் காத்தாலும் சிலபோது அது கைதவறியோ, கைமாறியோ போகக் கூடும்.

செல்வத்தைத் தனக்குமட்டுமே என்று பயன்கொள்வதற்கும் ஓர் எல்லை இருக்கிறது. செல்வத்தின் ஒரு சிறு பகுதியை மட்டுமே அவன் நுகர முடியும். அளவுக்கு மிஞ்சினால் அதுவும் நஞ்சாகும்.

செல்வத்தைப் பயன்கொள்ள வேண்டும் சிலரிடம் நூறு உரூவாக்களைக் கொடுத்தால், அதனை ஆயிரத்திற்கு நிகராகப்

பயன்கொள்வர்; மற்றும் சிலரிடமோ ஆயிரத்தைக் கொடுத்தாலும் அதனை நூறை விட இன்னமும் குறைவாகப் பயன் கொண்டு வீணடித்துவிடுவர்.

இவை அனைத்தையும் மனங்கொண்டு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் ஒரு பாடல் புனைந்துள்ளார். கணக்கு என்பது நூல். கணக்காயர் – நூல் கற்பிக்கும் ஆசிரியர். கீரன் என்பது பெயர், ந – சிறப்பு அடைமொழி. இவர் போல்வார் தமிழக அந்தணர் என்பர்.

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்பந பலவே (189)

கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தைப் பிறர்க்கும் பொதுவென்று கொள்ளாது, தனக்கே உரித்தாகக் கொண்டு, அதனைத் தன் வெண்கொற்றக் குடைக்கீழ் வைத்து ஆளும் ஒப்பற்ற அரசர்க்கும், நள்ளிரவிலும் பகலிலும் உறங்காமல் விரைந்தோடும் விலங்குகளைப் பிடிக்கப் பார்த்திருக்கும் தன் தொழிலையன்றிப் பிறிதொன்றைக் கல்லாதவனுக்கும் உண்பது நாழிஅளவு உணவே; கீழும் மேலுமாய் உடுப்பவை இரண்டேயாம். நுகர்வன பிறவும் அதனைப் போலவே ஒத்திருக்கும். எனவே ஒருவன் தேடிய செல்வத்தினது பயன் அதைப் பிறர்க்கும் ஈதலாகும். அதாவது பகுத்துண்டு வாழ்தலே பயனாகும். நாமே நுகர்வேம் என எண்ணினால், நம் கையைவிட்டுத் தப்பிப்போவன பலவாகும்.

இவ்வாறு மனித வாழ்வின் விழுமியங்களாகச் சங்கப் பாடல்கள் திகழ்கின்றன.

இவற்றில் வரும் செய்திகளனைத்தையும் குறியீடுகளாகக் கொண்டு, இக்காலத்திற்கேற்பப் பொருள் கொள்ள வேண்டும். செல்வனாயினும் ஏழையாயினும் வயிறு கொள்ளுமளவுதான் உண்ணமுடியும். செல்வன் என்பதற்காக மூன்று நான்கு உடைகளை ஒரே சமயத்தில் அணிந்து கொள்ள இயலாது. எனவேதான் அதைப்பலர்க்கும் தந்து, தாமும் நுகர்வதன் மூலம் அதன் முழுப் பயனைக் கொள்க என்று கூறுகிறார், நக்கீரர்.

## 41

## உலகத்தை ஈர்த்த பாட்டு

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தொடர், அனைத்துப் பெரியவர்களாலும் போற்றியுரைக்கப்படுவதாயிற்று; அனைத்து நாடுகளிலும் எதிரொலிப்பதாயிற்று.

இத்தொடரில் தொடங்கும் பாடலைப் பாடிய புலவர் கணியன் பூங்குன்றன் என்பவர் ஆவர். ஆசான் பெருங்கணி என்பவர் அமைச்சர் போல, வேந்தர்களின் கூடவே இருப்பவர் ஆவர். கணியர், அறிவர் என்பார் வானநூல் வல்லவராய், முக்காலமும் உணர்ந்து உரைப்பர்; கணக்கிட்டுக் கணித்துச் சொல்வர். இயற்கையில் நிகழ்வனவற்றை, முன்கூட்டி உரைப்பவர் மட்டுமன்றி, மானுட வாழ்வின் எதிர்காலம் பற்றிய 'சோதிடநூலிலும்' வல்லவர் என்பர்.

கணியன் பூங்குன்றனாரைச் சமணர் என்று கருதுதற்கு இடமுண்டு என்பர். இவர் ஊழை முதன்மைப்படுத்திப் பாடியிருப்பதே அதற்குக் காரணம்.

இன்றைய சிவகங்கை மாவட்டம், மகிபாலன் பட்டியில் 'பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றம்' என கல்வெட்டில் வருவதால், அதுவே இவரது ஊரென அறிஞர்கள் சதாசிவ பண்டாரத்தார், சோமலெ போல்வார் கூறியுள்ளனர்.

உலகப் பொதுமையைக் கூறி, பெருமிதம் பொங்கத் தொடங்குகிறது இப் பாடல்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே, வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே, முனிவின்
இன்னாது என்றலும் இலமே, மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (192)

மனிதர்களாகப் பிறந்த நமக்கு எல்லா ஊரும் நம் சொந்த ஊர் போன்றனவே; எல்லோரும் நம் உறவினரே.

நமக்குத் தீங்கும் நன்மையும் நாமே விளைவித்துக் கொள்வனவே; அவை பிறர்தர வருவன அல்ல. (முன் வினைப்பயனால் அவை தாமே வருவன என்பது பழைய உரை).

துன்புறுதலும் அதைத் தீர்த்துக் கொள்ளுதலும் அவை போல, நமக்கு நாமே உணர்வனவேயாம்.

சாதல் என்பது ஒன்றும் முன்பில்லாத புதியதன்று. நாளும் நடப்பதுதான். (அது நாம் கருவில் தோன்றிய நாளிலிருந்தே தொடங்கியுளது என்பது முன்னைய உரை).

எனவே உலகிடை வாழ்தல் இனிதென்று நாம் மகிழ்ந்ததும் இலம்; வெறுத்து அதை இன்னாதது என்றலும் இலம்.

மின்னலுடன் இடிஇடித்து வானம் குளிர்ந்த துளிகளை இடையறாது கொட்டிட, அது கல்லுடன் மோதி அலைத்து இரைச்சலுடன் ஓடும் வெள்ளம் பாய்கின்ற பெரிய ஆற்றிலே, நீர் போகும் வழியிலே போகும் தெப்பம் போல, அரிய உயிரானது ஊழ் எனும் முறைவழியே செல்லும் என்பதை, அறிவாற்றல் மிக்கவர்தம் காட்சி (ஞான) வழியினால் தெளிந்தனம். ஆகையினாலே மாட்சிமைப்பட்ட பெரியவர்களை, அவர்தம் உயர்நிலை நோக்கி வியத்தலும் இலம்; சிறியவர்களை அவர்தம் நிலைநோக்கி இகழ்தல் அதனினும் இலம்.

இப்பாடற் கருத்தைப் பொதுவாக நோக்குதற்கும் இடமுளது; சமணக் கருத்தாக எண்ணிப் பார்த்தற்கும் இடமுண்டு. இப்பாடற்கருத்தை, சமணக் காப்பியமாகிய சீவக சிந்தாமணியில் திருத்தக்கதேவர் எடுத்தாள்வதை, உ.வே.சா. அவர்கள் காட்டியுள்ளார்.

சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தினாகும்
ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட்கு இயல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லாம் நுண்ணுணர்வின்மை யன்றே.....

(சீவக.269)

எதையும் சாராது, பொதுப்படப் புனைதலும், சார்பு இருப்பினும் குறிப்பாக உணர்த்தலும் சங்கப் பாடல்களின் மரபாகும்.

## 42

## உலகை நிலைநிறுத்துபவர்கள்

இன்று உலகெங்கும் காணும் கொடுமை, ஒரு குற்றமும் செய்யாதவர்கள், ஒரு பாவமும் அறியாதவர்கள் கூட்டமாகக்

கொல்லப்படுவதுதான். தீவிரவாதம், பயங்கரவாதம் என்ற பெயரால், ஒரு நாட்டை அலைக்கழிக்க விரும்புபவர்கள், ஒரு பாவமும் அறியாதவர்கள் மீது குண்டு மழை பொழிகிறார்கள். எங்கோ காரில் குண்டு வெடிக்கிறது. அக்கம் பக்கத்தில் உள்ள அப்பாவி மக்கள் எல்லாம் சாகிறார்கள். சாகாமல் குற்றுயிராய்க் கால், கைகளை இழந்து தவிப்பவர்களை நினைத்தால் அழத்தோன்றுகிறது.

இது நாட்டுக்கு நாடு உலகமெலாம் நோய்போல் பரவுகிறது. இந்நிலையில்தான் நல்லவர்களாக இருப்பவர்களை எண்ணிப் பார்க்க வேண்டும். நல்லவர்கள் பலராக இருந்தால் மட்டுமே உலகம் நிலைபெறும். தீயவர்கள் தொகை அதிகமானால் உலகை அழித்துவிடுவர். தீமை செய்யப்பழகிவிட்டால், பிறகு அது மாறுவதில்லை. இதனால் மக்கள் மனம் மரத்துப் போகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஒரு வேந்தன் இந்த உலகம் யாரால் நிலைபெறுகிறது என்று எண்ணிப் பார்த்தான். அவன் நல்லவர்க்கு ஓர் இலக்கணம் வகுத்தான். அவர்கள் தொகை பெருக வேண்டும் எனப் பாடினான். அவன் பெயர் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி. அப்பாண்டியன் கடற்போரினாலோ, கடலில் பயணம் செய்யும்போது விபத்து ஏதும் நேர்ந்தோ இறக்க நேரிட்டுளது. இதனால் அவன் பெயருக்கு முன்னால் கடலுள் மாய்ந்த என்ற அடைமொழி வந்தது. ஆயினும் மாயாத இன்றும் என்றும் நிலைத்த ஓர் உண்மையைப்பாடலில் பாடி வைத்துப் போயுள்ளான்.

உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே, முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்

உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே (182)

தேவ உலகத்தில் உள்ளதென்று கூறப்படுகின்ற இந்திரர் அமிழ்தமே கிடைக்கப்பெறினும், இனிது என்று தனித்து உண்ணமாட்டார்.

யாரிடத்தும் வெறுப்பிலர். சோம்பியிருக்கவும் மாட்டார். பிறர் அஞ்சத்தகும் தீயசெயல்களுக்குத் தாமும் அஞ்சி, அவற்றை மேற்கொள்ளார்.

புகழ் வருமெனின் அதற்காக உயிரையும் கொடுக்க முன்வருவர்; பழியெனின் அதற்காக உலகம் முழுவதும் கிடைக்குமாயினும் கொள்ளலர். மனத்தளர்ச்சி இல்லாதவர்.

அத்தகைய நற்பண்புகளையுடையவராகி, தமது வலிய முயற்சியினைத் தமக்கென முயலாது, பிறர்க்கு என முயன்று நன்மை செய்பவர்கள் இருத்தலால், இவ்வுலகம் என்றும் உளதாகிறது!

சான்றோர்க்கு இலக்கணம் வகுத்த சான்றோராக இளம்பெரு வழுதி நிலைபெற்று விட்டார்.

## 43

## அறிவுடையவன் வழியில் அரசும் செல்லும்

கல்வியின் இன்றியமையாமையை பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் வலியுறுத்தும் நேர்த்தி, ஒரு நிலைபெற்ற படிப்பினையாகும். தடைகள் பல வந்தாலும் தளராது கற்க வேண்டும். அக்காலக் 'குருகுல' மரபுப்படி, ஆசிரியர்க்குப் பணிவிடைகள் செய்தும் அவருக்கு மிக்க பொருளைக் கொடுத்தும் கற்க வேண்டும். ஆசிரியரை

வணங்கி, அவருக்குமுன்னே வழிபட்டு நிற்பதற்கு வெறுக்காமல், கற்றால், பிறகு மேனிலை அடையலாம்.

இன்றும் அரசுகள் அறிவுடையவர்களை அழைத்து, குழுக்கள் அமைத்து, அவர்கள் கூறும் கருத்துரைகளின் படி நடப்பதைக் காண்கின்றோம்.

வடநூலார் கூறும் நான்கு வருணாசிரமங்களின் வேறாக, அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் எனத் தமிழரும் நான்கு பிரிவுகள் கூறுவதுண்டு. தொழிலால் வேற்றுமை விளங்கும் இந் நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலும் உண்டு, மேற்பாலும் உண்டு. நான்காம் பிரிவை மட்டும் 'சூத்திரன்' என்பது போல், இது பிறப்பினால் கூறப்பட்டதன்று என்பதற்கு இதுவே சான்று. நான்கு பிரிவுள்ளும் கீழும் மேலும் உண்டென்பதால், நான்காம் பிரிவை மட்டும் தீண்டத்தகாததாகக் கருதுவதினின்றும் இது வேறுபட்டது என்பது புலனாகும்.

கல்வி கல்லாதவன் மதிக்கப்படுவதில்லை. செல்வம், வாய்ப்பு வசதி முதலியவற்றால் அவன் தாழ்ந்த நிலையில் இருந்தாலும், மேல் நிலையினரும் அறிவுள்ள அவன் காட்டுகிற வழியில் நடப்பர்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்பு ஓரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
'மூத்தோன் வருக' என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே (182)

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பணிந்து பாடங்கேட்டதை, 'என் சரித்திரம்' நூலில் விரிவாக எழுதியுள்ளார். அதை இளைஞர்கள் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும். உற்றுழி உதவுதல் – தேவைப்படும் பொழுதும் ஓர் இடையூறு நேர்ந்தவிடத்தும் உதவுதல். பிற்றைநிலை – வழிபட்டுப் பணிந்து நிற்றல். நாற்பால் என்பதற்கு முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென்ற நான்கு நில மக்கள் என்றும் பொருள் கூறுவர். 'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார், கடையரே கல்லாதவர்' (395) என்ற திருக்குறளை இங்கு ஒப்புநோக்கலாம். உடையார் மேற்பாலராகவும் இல்லார் கீழ்ப்பாலராகவும் கருதப்படுதல் உலக இயல்பேயாம். ஏக்கறுதல் ஆசையால் தாழ்தல் என்பார் பரிமேலழகர்.

## 44

## ஒரு நாட்டின் இறையாண்மை

ஒருநாட்டின் இறையாண்மையை, அதனை ஆள்பவர் கண்ணும் கருத்துமாய்ப் போற்றவேண்டும் (sovereignty) என்பது இன்றைய ஆட்சிக்கோட்பாடு. ஒரு நாட்டில் எவ்விடத்து எது நிகழினும் அதனைக் கண்காணிக்க வேண்டியது ஆள்பவன் பொறுப்பு. அன்றைய அரசனது வெண்கொற்றக் குடையை இதற்கு அடையாளமாகக் கொள்ளலாம். 'எங்கோ, யாரோ செய்ததற்கு நான் என்ன செய்வேன்' என்று, ஆள்பவன் தட்டிக் கழிக்க முடியாது. அதனால்தான் இன்று ஆள வருபவர்கள், 'நான் நாட்டின் இறையாண்மையைக் காப்பேன்' என உறுதிமொழி கூறிப் பதவி ஏற்கின்றனர்.

முன்பு ஒருமுறை, அரியலூரில் தொடர்வண்டி தடம் புரண்டதற்கு, அன்றைய அத்துறை அமைச்சராக இருந்த லால்பகதூர் சாத்திரியார், பதவி துறந்தார்.

இறையாண்மை (Sovereign Power) என்பது, அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி நிற்பது என்பது இதனாற் பெறப்படுகிறது.

மாரிபொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்அகல் ஞாலம் (35)

என்பார், வெள்ளைக்குடி நாகனார். நல்ல ஆட்சியிலேதான் மழையும் வளமும் சிறக்கும் என்பது ஒரு நம்பிக்கை.

சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன், மதுரையில் நடந்ததையும் பாண்டியன் இறந்ததையும் சாத்தனார் கூறக் கேட்டதும் இவ் 'இறையாண்மை' பற்றிப் பேசுகின்றான்.

மழைவளங் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழைஉயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுரவுண்டும் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதகவு இல்........ (காட்சிக் காதை )

என்று வருந்திக் கூறுகிறான்.

சட்டமன்ற உறுப்பினராக, பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக வருபவர்களுக்கு, அரசாட்சிக் கோட்பாடு பற்றிப் பயிற்சி நல்குதல் மிகமிக இன்றியமையாதது. அதில் இதுவும் ஒன்று. மோசிகீரனார் அக்காலத்திலேயே இக்கருத்தை முன்மொழிந்துள்ளார்.

நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிரன்றே,
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால்
யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே (186)

உயிர் உடல் முழுவதும் பரவி நிற்பது போன்றதே, இந்த இறையாண்மையாம் பேராற்றல். கால் விரலில் நோவென்றால், கண்ணில் நீர் தளும்புகிறதே. அதனால்தான் இப் பரந்த உலகம் மன்னனை உயிராக உடையது என்றார். இங்கு 'உயிர்' என்பது, இறையாண்மையின் குறியீடு. உணவும் நீரும் தேவை. உண்டி முதற்றே உணவின் பிண்டம். ஆயினும் அவற்றுக்கும் மூலமாக அரசனின் அல்லது ஆள்பவனின் ஆட்சி அமைய வேண்டும். வேன்மிகு தானை வேந்தர்களாயினும், இன்றைய மக்களாட்சியில் ஆளவருவோ ராயினும் அவர்கள் தாம் இவ்வுலகை ஆள்வது எளிது எனப் பொறுப்பற்றுப் போதல் கூடாது. தான் உயிரென எண்ணி நடக்க வேண்டும். கால்விரல் நோவுபோல எங்கோ நடந்தது, எனக்கென்ன என்று கூறாமல், அந்நோவைத் தந்நோவாகக் கருதிக் களைதல் கடனாகும். சங்கப் புலவர்களின் சிந்தனை வளம் நம்மை வியப்பிலாழ்த்துகிறது. மழைநீர்ச் சேகரிப்பு, வேளாண்மையினரின் கடன், வட்டி, வரிகளைத் தவிர்த்தல், வரிவிதிப்புமுறை, கல்வி வளர்ச்சி, இறையாண்மை என இன்றைய நடைமுறைகளுக்கும் ஒத்துவரும் விழுமியங்களை நிரம்பப் பாடியுள்ளனர்.

## 45

## ஆணாதிக்கத்தைச் சுட்டிக்காட்டும் ஔவை

மகளிர் மனம் எளிதல் ஊசலாடுவதில்லை. 'நிறை' – நிறுத்துதல். மனத்தைக் கண்டபடி ஓடவிடாது நிறுத்துதல் – கட்டுப்படுத்துதல். மகளிரின் 'நிறை'யே கற்பெனப்படும். கற்பு – உறுதி. நீதிநூல் ஔவையார், 'கற்பெனப்படுவது சொல்திறம்பாமை' என்பார். சொன்ன சொல் தவறாதிருத்தல். இது இருபாலார்க்கும் பொருந்தும். காதலித்து மணப்பவன் தன் காதலியிடம் முதலிற் கூறுவது, 'உன்னைப் பிரியேன், பிரியின் உயிர் தரியேன்' என்பதுதான். அதில் அவன் பிறழக் கூடாது. குடும்ப மகளிர் மனத்தை ஒருநிலைப் படுத்துவர். அவர்களை 'ஒருமை மகளிர்' என்றும்

பெருமைக்குரியவர் என்றும் வள்ளுவம் கூறும். பொது மகளிரை 'இருமனப் பெண்டிர்' என்னும். எங்ஙனம் ஆராய்ந்தாலும் ஆணைவிடப் பெண் தற்காப்பு உணர்ச்சியுடையவள். ஆடவர்க்கு உடலியல்பாலும் உளத்தின் தன்மையாலும் கூடுதலாகத் தவறுகள் செய்ய வாய்ப்புக்கள் மிகுதி. இதனால் ஒரு சமுதாயம் நல்வழியில் சிறப்படைய வேண்டுமென்றால், ஆடவர்கள் ஒழுக்கத்தைப் பேண வேண்டும்.

பிரிவில் வருந்தும் தலைவியைப் பற்றியும் அவளை ஆற்றுவிக்கும் தோழியைப் பற்றியும் சங்க இலக்கியத்தில் மிகப்பல பாடல்கள் உள. தலைவனைத் தோழி பலவாறு கண்டிக்கு மிடங்கள் கருத்திற் கொள்ளத்தக்கன. ஓர் ஊர் வளமற்றதோ, வளமுடையதோ எவ்வாறு இருப்பினும், அங்கு வாழும் மக்கள் பண்புடையவராயின் அது நல்ல ஊர் என்று போற்றப்படும். அது போல நிலம் – பூமி நாடாகவோ, காடாகவோ இருக்கலாம்; பள்ளமாகவோ, மேடாகவோ இருக்கலாம். அதனால் அதற்கு உயர்வு தாழ்வு இல்லை. எந்த இடத்தில், ஊரில், நாட்டில் ஆடவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ, அங்கு நிலமே! நீ நல்லை என்று போற்றப்படுவாய்!

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே! (187)

அவல் – பள்ளம். மிசை – மேடு. நிலத்தைப் பார்த்துச் சொல்வது போல, நாலடியில் ஆடவரை ஓரடியாய் அடித்து, கட்டுப்பாடற்று அலையாதீர் எனக் கூறும் அழகு கருதத்தக்கது. 'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு, மண்ணடிமை தீராது' என்றார் பாவேந்தர். சங்க காலத்திலேயே 'ஒரு பெண்ணியக் குரல்' ஔவை வடிவில் ஆடவர்க்கு அறிவுரை கூறுகிறது.

# 46

## குடும்பக் கடமைகள் ஒரு தொடர்கதை

இல்லற வாழ்வில் அழுத்தம் வைப்பது தமிழ்ப்பண்பாடு, 'துறவு' என்பது இயற்கைக்கு மாறுபட்டதாகலின், அதில் பெரிதும் தவறுகளுக்கு இடமுண்டு. வெளித்தோற்றம் பலரை ஏமாற்ற உதவும். புறவேடத்தையே நம்பும் உலகை ஏமாற்றுதல் கூடாது. இதனை அன்றும் கண்டதால், 'கூடா ஒழுக்கம்' கூடாது என்றார் திருவள்ளுவர்.

இல்லற வாழ்வு என்பது கடமைகளின் தொகுப்பு. அது தன்னீகம் பேணுவது. அது விருந்தறம் பேணும்; பிறர்துன்பம் துடைக்கும்; சுற்றத்தை வாழ்விக்கும். கடமையாற்றப் பொருளீட்ட முயற்சித்துன்பம்; துணையாவார்க்கு உதவ, பிள்ளைகளை வளர்க்க, குடும்பத்தின் புகழைக் காக்க என இல்லற வாழவில் எத்தனையோ கடமைகள். அக்கடமையுணர்வும் உழைப்பும் துன்பம் போல் தோன்றி, உள்ளுள் இன்பம் பயக்கும்.

துறவி தன் உயிருக்கு உய்தி தேடுகின்றான். அதுவும் நன்றே. இல்லறத்தான் பிறர்க்கு உய்திதேடுகின்றான். அது முன்னதைவிடப் பெருநன்று என்பது தமிழர் கொள்கை.

ஓரேருழவர் எனப் பாடலால் பெயர்பெற்ற புலவர் ஒருவர், திருமணமாகி இல்லறம் பேணிச் சுற்றத்துடன் வாழும் ஒருவன், தன் குடும்பக் கடமைகளினின்றும் தப்பிக்கவே முடியாது என்பதை மிக அழகாகக் கூறுகிறார். ஒரு சில சமயங்களில், 'அடடா, இத்தனை பொறுப்புக்களா என்று தப்பிக்க முயன்றாலும், மீண்டும் மீண்டும் அவன் மனம், அந்தக் குடும்பச் செக்கையே சுற்றிவரும். அந்த வட்டம் முடிவற்ற தொடர் கதையாக நீளும் என்பதை ஓரேருழவர், ஓர் உவமை மூலம் திறம்பட விளக்குகின்றார்.'

புல்வாய் என்னும் இளம்மான். குத்துச் செடிகள் நிறைந்த, தோலை வீசி விரித்துப் போட்டது போன்ற, வெண்களர் நிலம். அதில் அந்த மானை வேட்டுவத் தொழிலில் நன்கு பழகிய ஒரு வேட்டுவன் பிடிப்பதற்கு முயல்கின்றான். அது தப்பிக்க முயல, இவன் பிடிப்பதற்குத் துரத்த, ஒரு பெரிய மோதலே நடக்கிறது. அதிலும் அந்த இளம் மான், அவனை ஏமாற்றிவிட்டு தப்பித்து ஓடினாலும் ஓடி விடும்; ஆனால் இந்தச் சுற்றத்துடன் கூடிய வாழ்வில் அகப்பட்டுக் கொண்டவனை, அதுதளையிட்டுக் கட்டிப்போடுதலால், அவனால் தப்பிக்கவே முடிவதில்லை.

தன் மகளுக்கும் மகனுக்கும் திருமணம் முடித்துவிட்டோம், அப்பாடா என்று ஒருவன் ஓய்வெடுக்கப்போகும் போது, பேரன் பேர்த்தியர் வந்து நிற்பர்.

பால்காரனுக்குக் கொடுத்தாயிற்று; வாடகை தந்தாயிற்று என்று பெருமூச்சு விடும்போது, பலசரக்குக் கடைக்காரன் வந்து நிற்பான்.

இதனால் இந்த இல்வாழ்க்கையை வெறுத்துப் பாடுகிறாரா, ஓரேருழவர் என்பது ஆய்விற்குரியது.

அதள்எறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஓடி உய்தலும் கூடும்மன்
ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே (193)

அதள்– தோல், ஒக்கல் – சுற்றம். இதனை உலக இயல்பு கூறி, இல்வாழ்வின் கடமைகளை நினைப்பூட்டுவதாகவே கொள்ள வேண்டும். இளம்மானைப் போலத் தப்பிக்க முயல்வதும், மீண்டும் அதிலேயே மூழ்குவதும் அதிலும் ஓர் இன்பம் காண்பதும் உலக இயல்பு.

திருமணத்தில் திருப்பூட்டும் போது கெட்டிமேளம் கொட்டுவர். அகப்பட்டுக் கொண்டான் எனத் திரும்பத் திரும்பச் சொல்வது போல, ஓர்

ஓசை ஒலிக்கும். அதிலும் ஓர் இன்பம் காண்பதனால்தானே, மாந்தரினம் மீண்டும் மீண்டும் அதையே நாடுகிறது. இதனை உலகஇயல்பு கூறி, மனிதரை ஆற்றுப்படுத்துவதாகக் கொள்ளுதலே சிறப்பாகப் படுகிறது.

## 47

### இன்னாத இவ்வுலகில் இனிய காண்க!

ஒரு வீட்டில் சாப்பறை முழங்குகிறது; அதே தெருவில் பிறிதொரு வீட்டில், திருமண மங்கல விழா; அதனால் முழவின் இனிய ஓசை ததும்புகிறது.

இவ்வாறு கூடி வாழும் வாய்ப்புப் பெற்றோர் பூ அணி சூடிக் கொண்டாடுகின்றனர். பிரிந்தவர்களின் வாடிய கண்களில் கண்ணீர் தளும்பித் தேங்குகிறது.

இவ்வாறு ஒரு புறம் இன்பமும் மறுபுறம் துன்பமுமாகப் படைத்த இறைவன், பண்பில்லாதவனே! என் செய்வது?

இவ்உலகம் – எண்ணிப் பார்த்தால் இன்னாததே ஆயினும் இந்த உலகின் இயல்புணர்ந்தோர், இதிலுள்ள இன்பப் பகுதியைக் கண்டு, அமைதி அடைவார்களாக!

பக்குடுக்கை நன்கணியார் பாட்டு இது. இவரும் கணியன் பூங்குன்றன் போல வானநூல் வல்லவர்.

ஓர்இல் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப
புணர்ந்தோர் பூஅணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப
படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்!
இன்னாது அம்மஇவ் வுலகம்
இனிய காண்கஇதன் இயல்புணர்ந் தோரே (194)

நெய்தல் – சாப்பறை. பாணி – இனிய ஓசை. பைதல் – துன்புற்று வாடிய. பனி – கண்ணீர். வறியவன் 'கடவுளுக்குக் கண்ணில்லையே' என அழுவது போன்ற உலக நடை இது. திருவள்ளுவரும் 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' (1062) என்பர்.

இதனால் இவ்வுலகை வெறுத்து, வீட்டின்பத்தை நாடுக என்பது, இடைக்கால மனப்பான்மை.

சங்க கால மனம் இக்காலம் போல் திகழ்வதுதான் வியப்பு. பழைய உரையாசிரியர், 'இதன் இயல்புணர்ந்தோர் இவ்இன்னாமையை இனியவாகக் காண்க என்றுரைப்பினும் அமையும்' என விளக்கத்தில் எழுதி, உடன்பாட்டுச் சிந்தனையை ஒப்புக் கொள்கின்றார்.

## 48

## உலகத்திற்கு ஓர் அறிவுரை !

நரிவெரூஉத் தலையார் என்னும் பெயருடைய புலவர், உலகம் போற்றுமாறு, பொதுவான அறிவுரை ஒன்றைப் பாடியுள்ளார்.

நரிவெரூஉத் தலை என்பது பெட்டவாய்த்தலை, குளித்தலை போல ஓர் ஊர்ப் பெயராதல் கூடும். புறநானூறு ஐந்தாம் பாட்டும் இவர் பாடியது. அதன் துறைக் குறிப்பில், இவர் உடம்பு 'வேறுபட்டு' நின்றதாகவும், சேரவேந்தனைக் கண்டதும் அது நீங்கி, தம் 'உடம்பு' பெற்றதாகவும் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் இதனை ஒரு நோய் எனக் கருதுதல் கூடும்.

எனினும் இவர்தம் பாடல்களுள் இக்குறிப்பு இல்லை. இரண்டு பாடல்களிலும் அறிவுரை கூறும் மாட்சியராக இவர் காணப்படுகிறார்.

உலகில் தீங்கு செய்பவர்களைப் பார்த்து, நல்லது செய்யா விட்டாலும் குற்றமில்லை; தீங்கு செய்யாதீர்கள் என்று கூறுவது, அடிக்கடி அனைவரிடமும் கூறத்தக்க அறிவுரையாகும்.

**நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்!**

இவ்வாறு இன்று 'ஊழல்' நடக்குமிடந்தோறும் அச்சிட்டு ஒட்டிவைக்கலாம். இப்பாடலில் சான்றோரை அழைத்து இவ் அறிவுரை கூறப்படுகிறது. அதுவும் எத்தகைய சான்றோர்? 'பயன்இல் மூப்பின் பல்சான்றீர்!' – பயனற்ற வாழ்வு வாழ்ந்து மூப்படைந்த, அகவை முதிர்ந்த சான்றோராம். ஏதோ ஒருவிதத்தில் தமக்குத் தீங்கிழைத்தவர்களை நோக்கிக் கூறுவது போல் உளது.

**பல்சான்றீரே! பல்சான் றீரே!**
**கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்**
**பயன்இல் மூப்பின் பல்சான் றீரே!**

பாடலிலுள்ள கயல்மீனின் முள்போன்ற நரைத்த மயிரின் தோற்றம் தோல் திரைத்த கன்னத்தையுடைய மூத்தவர்களைக் கண்முன் நிறுத்துகிறது. நரைதிரை மூப்பு என்பது ஒரு தொடர். இதிலுள்ள நகையாடற்குறிப்பு கருதத்தக்கது. பயனற்ற வாழ்வு வாழ்ந்து, வயது முதிர்ந்தவர்கள் எவ்வாறு சான்றோராதல் கூடும்? இன்றும் இவ்வாறு சான்றோர்போல் நடிப்பவர்களை நினைத்தால், இப்பாடலிலுள்ள உண்மை புலப்படும்.

இப்பாடலின் பின்புலம் தெரியவில்லை. ஏதோ ஒருவகையில் தமக்குச் செய்யப்பட்ட ஒரு தீங்கு கருதி, அவைக்கண் இருந்த அகவை முதிர்ந்த பெரியவர்களைப் பார்த்து அவர் இவ்வாறு பாடியிருக்கக் கூடும்.

**பல்சான் றீரே! பல்சான் றீரே!**
**கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்**
**பயன்இல் மூப்பின் பல்சான் றீரே!**
**கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்**
**பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ!**

நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமாரதுவே (195)

பலராகக் குழுமியிருக்கும் சான்றோர்களே!
பலராக இருக்கும் சான்றோர் பெருமக்களே!
கயல்மீனின் முள்போன்று தாடி நரைத்து,
கன்னம் தோல் திரைத்து விளங்கும்
பயனற்ற முதுமையை அடைந்த பலராகிய சான்றோரே!

மழுவாகிய கூரிய படைக்காலத்தையும், கடிய வலிமையினையும்
உடைய ஒருவன் (எமன்), பாசக் கயிற்றால் கட்டிக்
கூட்டிப்போக வருங்காலத்தில், செய்த தவற்றுக்காக
வருந்துவிர்! நீர் நல்லதைச் செய்ய மாட்டீராயி
னும், நல்லதல்லாததை – தீங்கைச் செய்தலையாவது
கைவிடுங்கள்! ஏனெனில் அதுதான்
உலகோர் அனைவரும் மகிழும்படியான செயலாகும்!
அன்றியும் அறநெறியில் வாழ்வதென்பதும் அதுவேயாகும்!

இன்று தொலைக்காட்சி, திரைப்படம், பண்பலை வானொலி, வெகுசன இதழ்கள் எனும் ஊடகங்கள் அனைத்தையும் பார்த்துச் சொல்ல வேண்டியிருக்கிறது, 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் - - -' என்று.

நம் அரசியலாரை, பாராளுமன்ற, சட்டமன்ற, ஊராட்சி மன்ற உறுப்பினர்களைப் பார்த்துக் கெஞ்சிக் கேட்க வேண்டியிருக்கிறது, 'நல்லது செய்தலாற்றீராயினும் – –' என்று.

தாமே உலகில் நிலைபெறப் போவதில்லை என்பதை அறிந்திருந்தும், தொடர்ந்து தீங்கு செய்து மகிழ்வோரைப் பார்த்து அறை கூவ வேண்டியுளது, 'நல்லது செய்தல் ஆற்றீராயினும்....' என்று.

# 49

## அறவிலை வாணிகம்

உலகில் அன்பு, ஈகை, அறம் எல்லாம் ஒன்றை எதிர் பார்த்துச் செய்வனவும் உள, எதிர்பார்ப்பின்றிச் செய்வனவும் உள.

தந்தை மகனை அவையில் முந்தியிருக்கச் செய்வது, அவன் தன்னைக் கடைசிக் காலத்தில் காப்பாற்றுவான் என்பதானால், அது எதிர்பார்த்துச் செய்வது. அவற்றையெல்லாம் கருத்திற்கொள்ளாது, கடமை என்று செய்வது எதிர்பார்ப்பில்லாதது.

இரண்டும் நன்றே. எனினும் பின்னது முன்னதினும் பல மடங்கு சிறந்தது.

அடியார்களைப் பற்றிப் பாடும் பொழுது, சேக்கிழார் கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார் என்பது எதிர்பார்ப்பில்லாதது.

இன்று புண்ணிய வாணிகம் நடைபெறுகிறது. அதற்கு 'ஆன்மிகம்' என்ற முத்திரை குத்தி விற்றுப் பணமாக்குகிறார்கள். ஆண்டவனுக்குப் பத்தாயிரம் கொடுப்பவர்க்குக் கூடுதல் புண்ணியம்; ஆயிரம் தருபவர்க்கு அதற்கேற்ற புண்ணியம்; ஒன்றுமின்றி வரும் அன்பர்க்கு காட்சி தர மறுக்கும் கண்ணியம்.

கோயில்கள் ஐந்து விண்மீன் விடுதிகளாகி, வருமானம் பெருக்கிக் கடவுளர்களிடையே முதலாளிக் கடவுள், நடுத்தர வசதிக் கடவுள், வறுமைக் கடவுள் எனப் பிரித்தறியும் நிலைவேரூன்றி விட்டது.

இன்று அருச்சகர்கள், இராசிபலனெழுதும் ஆன்மிக வழிகாட்டிகள், புதிது புதிதாகக் கிளைவிடும் மடத்துறவிகள், சாமியார்கள் வழியாகக் கடவுளர் மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் தங்களுக்குக் கேட்கிறார்கள்! 'இந்து மதப்பெயரால்' நடப்பதெல்லாம் இவை!

இக் கடவுளர்கள், வசதிமிக்கவர்களுக்கு, அவரவர்களுக்கு ஏற்பப் புண்ணியம் தந்து உதவுகிறார்கள். கொலை செய்யலாம்; அதற்கும்

பரிகாரம் உண்டு. எதற்கும் எப்பொழுதும் பரிகாரம் உண்டு. இது இன்று நாள் நடைமுறையாகி விட்டது.

சேக்கிழார் பாடிய மனுநீதிச் சோழனுக்கும் அந்தணர்கள் இதைத்தான் சொன்னார்கள். பசுவைக் கொன்றான் மகனென்று பதறாதே, அதற்குப் பரிகாரம் உண்டு என்றார்கள். அன்று அம் மன்னன் அதை ஒப்பவில்லை. இன்று பகுத்தறிவாளர்களும் அதை ஏற்றுப் பரிகாரம் தேடுகிறார்கள்.

ஒன்றைக் கொடுத்து ஒன்றை வாங்கலாம் என்பது வாணிகம். ஆய் என்ற மன்னனிடம் 'நீ ஏன் அறம் - புண்ணியம் செய்கிறாய்?' என்று கேட்டார்கள். மறுமையில் 'சொர்க்கம்' கிடைக்கும், மோட்சம் கிடைக்கும் என்றா செய்கிறாய் என வினவினார்கள். அதற்கு அவன் 'நான் அறவிலை' வாணிகம் செய்யவில்லை என்றான். பின்னர் ஏன் அறம் செய்கிறாய்?' என வினவினார்கள். நான் எதனையும் எதிர்பார்த்துச் செய்யவில்லை. எனக்கு முன்னே சான்றோர்கள், பெரியவர்கள், நல்லவர்கள் நடந்த வழி, நல்ல வழி என்று கண்டேன். அதனால் அவ்வழியில் நடக்கின்றேன் என்றான் ஆய் மன்னன்.

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பல பாடல்களில் வியந்து பாடுகிறார். அவற்றுள் இஃதொன்று. இம்மன்னன் ஆய் அண்டிரன் என்றும் அழைக்கப்படுவான். கடையெழு வள்ளல்களில் ஒருவன் இவன்.

நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும் (96-99)

என்பது சிறுபாணாற்றுப்படை. சிவபெருமானை ஆலமர் செல்வன், தென்முகக் கடவுள் என்பது சங்கப் பாடல்களில் மட்டும் காணப்படுவது. வடவர் முன்பு அறியாதது இது. பாம்பு நல்கிய நீல நிறக் கலிங்கத்தை, ஆலமர் செல்வனாம் சிவனுக்கு, விரும்பி அணிவித்த, சாந்து பூசிய வில்லைத்தாங்கிய தோளையுடையவன் என்று புகழப் படுகின்றான், ஆய்மன்னன்.

இவனை மோசியார் பாடியுள்ள நெறி, இன்றும் யாவரும் மனங்கொளத் தக்கது.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆயலன், பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே (134)

இதன் பழைய உரை வருமாறு; "இப் பிறப்பின் கட் செய்ததொன்று மறுபிறப்பிற்கு உதவுமென்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து, அதற்கு அறங்கொள்ளும் வணிகன் ஆய் அல்லன். அமைந்தோர் பிறரும் போய வழி யென்று உலகத்தார் கருத, அந்தநற்செய்கையிலே பட்டது அவன் கை வண்மை."

சான்றோர் – நற்குண நற்செய்கைகள் நிரம்பியவர். பிறர் பலரும் சென்ற நெறி, அதுவே நல்ல நெறி என எண்ணி, அவன் கைவண்மை – கொடைக்குணம் அவ்வழியிலே பொருந்தியது என எளிமையாக உணரலாம்.

இன்றும் மக்கள் மனத்தில், காரண காரியத்தோடு விளக்கிப் பதிவிக்க வேண்டிய பாடல் இது.

'கடவுளுக்கு வேண்டாம், மனிதர்களுக்குச் செய்யுங்கள்' என்று, கிறித்தவ சமயத்தவர்கள் எழுதுகிறார்கள். அங்ஙனமே கல்விக் கோயில்கள், மருத்துவ மனைகள், ஏழைகள் இல்லங்கள் என்று கட்டி, வளர்த்துக் கொண்டே போகிறார்கள்.

எதிர்காலத்தில் மக்கள் எதை விரும்புவர்? 'இந்துமதம்' என்பது தவிர்க்கப்பட வேண்டும். சிவனியம், மாலியம், கொற்றவையியம் (சக்தி வழிபாடு) என அழைத்து, மக்களுக்குச் செய்து இறைவனை வழிபட வேண்டும். திருமூலர் சொன்ன வழியும் அதுதானே.

படமாடக் கோயில் பரமர்க்கு ஒன்று ஈயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அஃது ஆகா,
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
படமாடக் கோயில் பரமர்க்கு அஃது ஆமே

தமிழ் ஆகமம் கூறும் இக்கருத்து, எத்துணை ஏற்புடையது. சங்ககாலந்தொட்டுத் தமிழர் பண்பாட்டில் ஏற்பட்ட சிதைவுகள் தவிர்க்கப்படவேண்டும். இஃது யாரையும் பழிப்பதோ, பகைப்பதோ ஆகாது.

## 50

## ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு கடமை

பொன்முடியார் முதியவள் கூற்றாகப் பாடியுள்ள பாடல், ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு கடமையுண்டு எனச் சொல்கிறது. அவரவர் தத்தம் கடமையுணர்ந்து செயற்பட்டால், உலகம் நல்வழிப்படும் என இதை எடுத்துக் கொள்ளலாம்.

ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (312)

ஓர் இளைஞனைப் பெற்று, வளர்த்தல் எனது முதற்கடமையாகும். அவனைக் கல்வி கேள்விகளானும் படைப்பயிற்சியாலும் சிறந்த வீரனாக்குதல் தந்தையின் கடமையாகும். அவனுக்கு கூரிய வேலைச் செய்து கொடுத்தல் கொல்லனின் கடமையாகும்.

தண்ணடை – நன்செய் நிலம். வெற்றி தரும் வீரர்க்கு மன்னர்கள் பரிசாக நிலம் தருவர். அது வேந்தனின் கடமையாகும். அவ்வாறு பரிசில் பெறும் வகையில் பகைவரின் யானைகளைக் கொன்று, வென்று திரும்புதல் இளைஞனது கடமையாகும்.

இத்தாயின் கூற்றில், கொல்லனின் கடமையும் வருவது காணலாம். எனவே இவற்றைக் குறியீடாகக் கொண்டு, எல்லோரும் அவரவர் கடமையாற்றுதலை இது உணர்த்துகிறது எனலாம். தண்நடை எனப் பிரித்து, போர்ப்பயிற்சி தருதல் அரசனின் கடமை எனக் கூறுவர். தண்ணடை என்ற சொல்லாட்சி - நீர்வளம் மிக்க வயல்களைக் குறிக்கும் (287, 297 ஆகிய புறப்பாடல்களிலும் இச் சொல்லைக் காணலாம்.)

இது அக்கால மக்களின் வாழ்வியலைச் சுட்டிக் காட்டுகிறது. சான்றோன் - வீரன் என்பதே முதற்பொருள். இது வீரநிலைக் கால வாழ்வியல் எனலாம்.

## 51

## மறக்குடி மகளிர்

பழங்காலத் தமிழகத்தில் மகளிரும் வீரமுடன் விளங்கினர். பல பாடல்கள் மகளிரின் மனத்திண்மையையும் மறத்தையும் பாடுகின்றன. அவற்றுள் ஒன்று காணலாம்.

ஒக்கூர் மாசாத்தியார் ஒரு மறக்குடி வந்த தாயை நமக்கு அறிமுகப்படுத்தி, அவளுடைய வீரத்தை விளக்குகிறார். ஒக்கூர் என்பது, இன்றைய சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. அவ்வூர் திருப்புத்தூருக்கும் சிவகங்கைக்கும் இடையிலுளது. சாத்தி என்பது இயற்பெயர். மா என்பது பெருமைகருதிய அடைமொழி. இங்குள்ள நகரத்தார் மரபில் சாத்தம்மை, சாத்தப்பன் எனப் பெயர்கள் வழங்குகின்றன. இது சாத்து என்ற வணிகக் குழுக்களின் பெயரிலிருந்து வந்தது.

அன்று வணிகர்களும் படைக்கலப் பயிற்சி பெற்று, மறக்குலத்தினராக, வீரமுடன் விளங்கவேண்டிய சூழல் இருந்தது. இவர்கள் வாணிகம் கருதி, கூட்டமாகச் செல்லும்போது, ஆறலை கள்வர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியிருந்தது.

இப்பாடல் போர்க்களத்திற்குத் தன் பால் மணம் மாறாத சிறுவனை ஒரு தாய் எவ்வாறு அனுப்புகிறாள் என்பதைக் கூறுகிறது.

**கெடுக சிந்தை, கடிதிவள் துணிவே**

எண்ணிப் பார்க்கவே முடியாத வீரச்செயலாம். இம் மறக்குடிப் பெண்ணின் செயலைச் சிந்தித்தாலே மனம் திடுக்குறுமாம். அதனால் 'கெடுக சிந்தை' எனத் தொடங்குகிறது பாட்டு.

**கெடுக சிந்தை கடிது இவள் துணிவே**
**மூதில் மகளி ராதல் தகுமே**

மூதில் மகளிர் – பழங்குடி மகளிர், மறக்குலப் பெண். அவ்வாறு இவளைச் சொல்வது தகும். இவளின் துணிச்சலான செயல் இவள் பிறந்த குடிச்சிறப்பைக் காட்டுகிறது.

**மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை**
**யானை எறிந்து களத்துஒழிந் தனனே**

சிலநாள் முன் நடந்த போரில் இவள் தன் தமையன் (தன் + ஐ = தன்னை) யானையை எய்து கொன்று, போர்க் களத்தில் தானும் இறந்து போனான்.

**நெருநல் உற்ற செருவிற்குஇவள் கொழுநன்**
**பெருநிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே**

நேற்று நடந்த போரில், இவள் கணவன் பெரிய யானைக் கூட்டத்தை விலக்கி ஓட்டி, தானும் அங்கேயே இறந்தான்.

**இன்றும்**
**செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல்கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇ**
**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**'செருமுகம் நோக்கிச்செல்க'என விடுமே! (279)**

அக்கால வழக்கப்படி, போர்ப்பறை முழங்கினால் வீட்டுக்கு ஓர் ஆடவர் போருக்குப் போக வேண்டும். இவள் வீட்டிலோ அண்ணனும் போய்விட்டான், கணவனும் இறந்து விட்டான். இனி இருப்பது சிறுவனாகிய ஒரு மகன்தான். போர்ப்பறை கேட்டதும் ஆர்வத்துடன், ஒரு மகனல்லது வேறு எவரும் இல்லாத மறக்குல நங்கை, தன் மகனின் கையில் வேலைக்

கொடுத்து, அவனுடைய பறட்டைத் தலையில் எண்ணெய் தடவிச் சீவி விட்டு, வெள்ளிய ஆடையை விரித்து உடுத்திவிட்டு, 'போர்க்களம் நோக்கிப்போ' என்று அனுப்புகின்றாள்! இதைப் பார்க்கும் பொழுது, மனம் பதறுகின்றது. இவள் துணிவு மிகமிகக் கடிதாக உளது!.

இவ்வாறு அமையும் பாடல்கள் பல அக்கால மகளிரின் துணிச்சலை, வெளிப்படுத்துவனவாயுள்ளன.

## 52

### மான உணர்ச்சி

இக்காலச் சூழ்நிலையில் மான உணர்ச்சி பேசுவது பொது வாழ்வில் மிகமிகக் குறைந்து விட்டது. அரசியலில் நுழைந்த பின் மானம் விலைபேசப்படுகிறது. முன்பு மக்களுக்கு நாண உணர்ச்சி இருந்தது. யாரும் பழித்துக் கூற நேர்ந்தால், வெட்கப்பட்டுக் கூனிக் குறுகினர். ஊழல் செய்து சிறைப்பட்ட அரசியல் தலைவன், பிணையத்தில் வெளிவரும்போது யானை மீதேறி ஊர்வலம் வருகிறான். மக்கள் அவனை ஆரவாரித்து வரவேற்கின்றனர். பிறகு அவன் பதவியைப் பிடித்து, குற்றத்தை மறைத்து, ஒப்புயர்வற்ற 'தூயவனாகி' விடுகின்றான். இந்நிலையில் மானம் பற்றிப் பேச வாயேது?

முன்பு மானமே உயிரெனப் போற்றினர். 'மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்று பாடினர்.

சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் போர்மூண்டது. திருப்போர்ப் புறம் என்ற இடத்தில் போர் நிகழ்ந்தது. அப்போது இரும்பொறை தோற்கவே, அவன் குடவாயிற்கோட்டம் என்ற இடத்தில் சிறையிடப்பட்டான். பசியால் வாடிய அவன், சிறைக் காவலர்களிடம் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான். அவர்கள் தண்ணீர் தரக் காலந் தாழ்த்தினர். பிறகு அவர்கள் கொணர்ந்த நீரைப் பருக

மனமில்லாது, அதைக் கையில் வைத்தபடி ஒரு பாடலைப் பாடி உயிர்நீத்தனன்.

பழங்காலத்தில் தமிழக மக்களிடம் ஒரு நம்பிக்கையும் பழக்கமும் இருந்தன. போரில் விழுப்புண் பட்டு இறப்பவரே, துறக்கம் புகுவர் என்றும் அவரே புகழுக்குரியவர் என்றும் கருதினர். போரிலன்றி, வேறு காரணங்களால் இறப்பவரை, அறுகம்புல் படுக்கையிற் கிடத்தி, அவர்கள் மார்பில் வாளால் வெட்டி, பின்பு அடக்கம் செய்தனர். போரில் மாண்டவர் அடையும் கதியை இவரும் அடைக எனக் கூறி, இச்சடங்கைச் செய்தனர்.

இந்த அளவு மானமும் வீரமும் பேணிய மரபில், தானும் பிறந்து சிறைப்பட்டு, நாயினும் கீழாய் நடத்தப்பட்டதற்கு இரும்பொறை வருந்துகின்றான். சிறைக் காவலர்களும் தன்னை மதியாதது அவன் மனத்தை மிகவும் வருத்தியது. 'மருந்தோ மற்று ஊனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை பீடழிய வந்த இடத்து' (968) என்று குறள் கூறுவது போல, அவன் தன் உயிரைவிடத் துணிந்தனன்.

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள்அன்று என்று வாளின் தப்பார்

குழந்தை இறந்து பிறந்தாலும் முத்துப்பிள்ளை என ஊன் தடியாகப் பிறந்தாலும் இது ஆளல்லவே என்று, வாளால் வெட்டாமல் புதைக்க மாட்டார்கள். அத்தகைய மறக்குடி மக்கள் இவர்கள்.

தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம்இரந் துண்ணும் அளவை
ஈன்மரோஇவ் வுலகத் தானே (74)

நாயைச் சங்கிலியாற் கட்டி இழுத்துவருவது போலத் துன்புறுத்தி சிறையில் இருத்தினர். அங்கு 'உறவல்லாத உறவுடையார்' போன்ற சிறைக்காவலரிடம், அவர்களின் தயவால் பெற்ற தண்ணீரை, சிறிதும் மனவலிமை இன்றி, வயிற்றின்கண் எரியும் தீயை (பசியை) ஆற்றவேண்டி,

தாமே இரந்துண்ணும்படி ஆனது. இந்த நிலையினை அடைந்தவரை, இவ்வுலகின்கண் யாரும் மகவாகப் பெறுவார்களோ? (செத்துப் பிறந்த குழந்தையும் ஊன்பிண்டமும் எனப் பெற்றாலும், அவை கூட வாளால் போழப் பெற்று அடக்கம் செய்யப்படும். அப்பேறு கூட யான் பெற்றிலனே என வருந்துகிறான், இரும்பெறை).

ஞமலி - நாய். கேளல் கேளிர் - பக்கத்திலிருக்கும் பகைவர். உறவல்லாது உடனிருப்போரைக் குறிக்கும். மரபுத் தொடர் இது. வேளாண்மை – உதவி, தருதல். சிறுபதம் – சிற்றுணவு, தண்ணீர். மதுகை – மனவலிமை, பெருமிதம். அளவை - இந்த அளவினனாக. ஈன்மரோ - மகவாகயாரும் பெறுவார்களோ?

மானம் கருதி உயிர்விட நேர்ந்த பாடலால் இரும்பொறையின் மானவுணர்ச்சி, இன்றும் படிப்பவர் நெஞ்சில் எதிரொலிக்கின்றது.

வெற்றியும் தோல்வியும் உலக இயற்கை. இரும்பொறை, யாதோ காரணத்தால் சிறைப்பட்டிருக்கலாம். ஆயினும் மானமுடைய வீரன் என்ற புகழ் மாறாமல் இப்பாடல் அவன் பெயரை நிலைபெறச் செய்கிறது.

## 53

## தேன் பிலிற்றும் வாழ்த்துமலர்!

'என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்', நின்றலர்ந்து தேன்பிலிற்றும் தெய்வத் திருமலர் திருக்குறள் என்று இறையனார் என்னும் புலவர் திருவள்ளுவ மாலையில் பாடியுள்ளார். பிறமலர்கள் வாடிவிடும் தன்மையன. இம் மலரோ 'யாணர்நாள்' – நீண்ட நாள் சென்றாலும் வாடாது தேன்பிலிற்றும். திருக்குறளுக்கு மட்டுமன்றிச் சங்கப் பாடல்களுக்கும் இது பொருந்தும்.

சோழநாட்டில் யாதோ காரணத்தால் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதை நீக்கி, மக்கள் பசியைத் தீர்க்க, பண்ணன் என்னும் நிலக்கிழார் அல்லது குறுநிலமன்னன் தன்னிடம் உள்ள உணவு முழுவதையும் வழங்கியுள்ளான். அவன் வீட்டிற்கு எதிரே, மிக நீண்ட வரிசைகளில் பல ஆயிரவர் இளையரும் சுற்றத்தவருமாகச் சென்று கைகளில் உணவுத் திரளை வாங்கிச் சென்றனராம். இது மழைவரும் போல் இருந்தபோது,

எறும்புகள் வரிசை வரிசையாக மேட்டுநிலம் நோக்கி, முட்டைகளை வாயில் கவ்விக் கொண்டு ஊர்வது போல் இருக்கிறது.

கிள்ளி வளவன் இக் காட்சியைக் கண்டு மனம் நெகிழ்கின்றான்.

வரிசையில் கால் கடுக்க நீண்டநேரமாக நடந்து செல்லும் பாணன் ஒருவன், எதிரே சோற்றுத்திரள் பெற்றுவரும் பாணனிடம் கேட்பதாகக் கற்பனை செய்து ஒரு பாடலைப் புனைந்துள்ளான் அவ் வேந்தன்.

அதில் அவன் பண்ணனை வாழ்த்தியமுறை முதலடியிலேயே வந்து விடுகிறது. அதுதான் இன்றும் புதுமையிலும் புதுமையாய் இருக்கிறது; நின்றலர்ந்து தேன்பிலிற்றும் வாழ்த்து மலராக விளங்குகிறது.

**யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய!**

யான் உயிர்வாழும் நாளையும் சேர்த்துப் பண்ணனே வாழ்வானாக. எவ்வளவு அரிய கருத்து. (தான் வேந்தனாக இருந்தும், தன்னைவிட மேலாக மக்களைக் காக்கும் பெற்றியறிந்து வாழ்த்தியது இது.)

**பாணர் காண்க இவன்கடும்பினது இடும்பை**

எதிரே வரும் பாணர் கள் இப்பாணனது சுற்றத்தினரின் பசிக் கொடுமையைக் காண்பார்களாக!

**யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன**
**ஊண்ஒலி அரவம் தானும் கேட்கும்!**

பழுத்த மரத்தில் பறவைகளின் இரைச்சல் கேட்பது போல், இங்கு உணவுண்ணும் ஒலி சுற்றிலும் கேட்கிறது.

**பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி**
**முட்டை கொண்டு வன்புலன் சேரும்**
**சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்**
**சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்**
**இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும்!**

பருவம் தவறாது பெய்யும் வான்முகில், பெய்யப்போகிறது என்பதை உணர்ந்து, முட்டைகளை வாயிலே கவ்விக்கொண்டு மேட்டுநிலம் நோக்கிச் சிற்றெறும்புகள் செல்லும் சாரிசாரியான வரிசைகளைப் போல, சோறுடைக்

கையரான சிறுவர்கள் தம் சுற்றத்துடன் வெவ்வேறு வரிசைகளில் செல்வதைக் காண்கின்றோம்.

**கண்டும்**

**மற்றும் மற்றும் வினவுதும், தெற்றெனப்**
**பசிப்பிணி மருத்துவன் இல்லம்**
**அணித்தோ, சேய்த்தோ கூறுமின் எமக்கே! (173)**

இவ்வாறு கண்டும், மறுபடியும் மறுபடியும் எதிரே வருபவனிடம் வினவுகின்றானாம்; பண்ணன் இல்லம் நோக்கிச் செல்லும் பாணன். 'ஐயா'! கால் கடுக்கிறது. வரிசையோ நீண்டு கொண்டே போகிறது! பசியாகிய நோய்க்கு மருந்தாகிய உணவு தரும் மருத்துவனாம் பண்ணனது இல்லம், அருகில் இருக்கிறதா? அல்லது இன்னும் சேய்மையில் இருக்கிறதா? கூறுங்கள்!

பசிப்பிணி மருத்துவன் - என்ற தொடர் பசியின் கொடுமையைச் சுட்டிக் காட்டும், வலிய தொடராக இருக்கிறது. இதைப் பதிவு செய்திருக்கும் சோழ வேந்தன் கிள்ளி வளவனை என்னென்று சொல்வது! தன் வாழ்நாளையும் சேர்த்துப் பண்ணன் வாழ்க என்று சொல்லும் போது, அவன் வாழ்த்துக் கலையின் உச்சத்திற்கே சென்று விடுகின்றான்.

## 54

## தகுதியறிதல் அரிதே!

'உடையாய் என்னைக் கண்டுகொள்ளே' என்பார் மாணிக்கவாசகர். இறைவன் தன்னைத்தன் 'ஆளாக' உடையவன். அத்தகையான் தன்னை நல்லவன் என்று, திறமையுள்ளவன் என்று, உண்மையானவன் என்று கண்டு கொள்ளவேண்டுமாம்.

ஒரு குழுமத்தில் பலர் வேலைபார்க்கிறார்கள். அவர்களில் திறமையாளனை, உண்மையானவனை மேலாளர், உரிமையாளர் கண்டு கொண்டு ஊக்கங் கொடுக்கவேண்டும். அவ்வாறு ஊக்கப் படுத்தினால், அங்கு வேலை பார்க்கும் மற்றவர்களும் அவ்வாறு கண்டுகொண்டு, ஊக்கப் படுத்தப்படவேண்டும் என்று மேன்மேலும் முயல்வார்கள். மாணிக்கவாசகர் பாடலை, வாழ்வியற் சிந்தனையோடு நோக்கினால், 'உடையாய்' என்னைக்

கண்டு கொள்ளே என்பது, எத்துணைச் சிறந்த உண்மை என்பது புலப்படும்.

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர் (528)

சுற்றந்தழாலில் வருவது இது. வேந்தன் தன்கீழ்ப் பணிபுரியும் அமைச்சர், தளபதிகள் முதலான பலரையும் பொதுவாகப்பார்த்து நடத்தாமல், அவரவர் தகுதி திறமைகட்கு ஏற்ப வரிசைப்படப் பார்த்து அதற்கேற்ப நடத்துவானாகில், அச்சிறப்பினைத் தாமும் பெறவேண்டுதலை நோக்கி, திறமையுடன் மேன்மேலும் உழைப்பார் பலராவர்.

இது இன்னும் ஆட்சியமைப்புடைய அரசு முதல் நிறுவனங்கள் வரை அனைத்திற்கும் பொருந்தும்.

அமெரிக்கா போலும் நாடுகளில் திறமைக்கும் உழைப்புக்கும் உரிய மதிப்புக் கொடுக்கிறார்கள். நன்கு உழைப்பவர்க்கு பதவி உயர்வுதருதல், ஊக்கத்தொகை தருதல், சிறப்புச் செய்தல் என்று பலவாறு 'வரிசை அறிந்து' தருகிறார்கள். இதனால் வேலை செய்வோரிடைய, ஒரு முயற்சிப் போட்டி நிலவத் தொடங்குகிறது. தானும் அவ்வாறு திறமையுடன் உழைத்தால், தனக்கும் அச்சிறப்புக்கள் கிடைக்கும் என்பதால் ஒவ்வொருவரும் 'கருமமே கண்ணாகி' விடுகின்றனர்.

நம் நாட்டில் திறமையை நோக்காமல், பரிந்துரைகளை நோக்குகிறார்கள். இதனால் திறமை அமிழ்த்தப்பட்டு, திறமையற்றவன் மேலே வரவும் திறமையாளன் அவமதிக்கப்படவும் நேர்கிறது. இதனால் மக்கள் மன்பதையின் முன்னேற்றம் பாழாகிறது.

மலையமான் திருமுடிக்காரி கடையெழு வள்ளல்களில் ஒருவன். அவன் இவ்வாறு கருதாமல், எல்லோரையும் போல் கபிலரையும் நடத்தியிருப்பான்போலும், அவனுக்கு அறிவுரை கூறுமுகமாகக் கபிலர் அரிய செய்தி ஒன்றைப் பாடியுள்ளார்.

ஈதல் எளிது; ஆனால் வரிசை அறிந்து ஈதல் கடினம். அதற்கு அவ்வாறு தருபவனுக்கு, தகுதியைக் கண்டு கொள்ளும் தகுதிவேண்டும்.

புலமையுள்ளவன்தான் தன்னைப் போன்ற புலமையாளனைக்

கண்டு கொள்வான். மற்றவர்கட்கு அது அரிது என அவன் மனத்தில் பதியும்படி கபிலர் பாடிய பாட்டு இது.

**ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்**
**பலரும் வருவர் பரிசில் மாக்கள்**
**வரிசை அறிதலோ அரிதே பெரிதும்**
**ஈதல் எளிதே, மாவண் தோன்றல்!**
**அது நற்கு அறிந்தனை யாயின்**
**பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே (121)**

மாவண்தோன்றல் – மிக்க கொடைக்குணம் வாய்ந்த தோன்றலே! ஒரு திசைக்கண் இருக்கும் ஒரு வள்ளலை நோக்கிப் பரிசில் மாக்கள் பலதிசைகளிலிருந்தும் வருவார்கள். அவர்களுள் வரிசை அறிந்து. தகுதிக்கேற்ப நடத்துதல் அரிய செயலாகும். அவ்வாறன்றி, பொதுவாக எல்லோர்க்கும் ஒரு தன்மையாக ஈதல் என்பது எளிதாகும். அதனை நீ நன்கு அறிந்தனையாயின், புலவர்களிடம் பொதுவாக நோக்குதலைத் தவிர்வாயாக!

## 55

## ஔவையின் மழலைமொழி

சங்க கால ஔவையார் நீண்டகாலம் வாழ்ந்திருக்க வேண்டும். அவர் அதியமான் நெடுமான் அஞ்சியிடம் சென்று பழகிய காலத்தில், அகவை முதிர்ந்த அம்மையாக இருந்திருப்பார் போலும். புறநானூற்றில் 23 பாடல்களில் அவர் அதியனை அகமும் புறமும் உருவேற்றிக் காட்சிப்படுத்துகிறார். தம்மை ஒரு குழந்தையாகப் பாவித்து அவர் பாடியதிலிருந்து இதை உய்த்துணரலாம்.

யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினும் தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை
என்வாய்ச் சொல்லும் அன்ன ஒன்னார்
கடிமதில் அரண்பல கடந்த
நெடுமான் அஞ்சிநீ அருளன் மாறே (92)

புதல்வர்கள் பேசும் மழலைச் சொற்கள், அவர்களைப் பெற்றவர்களுக்கு, அவை யாழிசையுடன் பொருந்தி வருவன அல்ல; காலத்தொடு பொருந்திய பேச்சுமல்ல, பொருளறிய முடியாதன வாயினும், பிள்ளைகள் மீது கொண்ட அருளினால் மகிழ்ச்சியூட்டுவனவாகும். காவலுடைய மதிலரண்கள் பலவற்றையும் வென்ற நெடுமானஞ்சியே! நீ அருளுதலால் என் வாய்ச் சொற்களும் அவ்வாறு மகிழ்ச்சியூட்டுவனவாயின!

கபிலர் பாரிக்காக மூவேந்தரை எதிர்த்துப் பாடியிருப்பன போல, இவரும் அதியனின் பகைவர்களிடம் அவனது ஆற்றலை விதந்து, சிறப்பித்துப் பாடியுள்ளார்.

## 56

## கண்முன் அதியன்

அதியமான் நெடுமானஞ்சி எப்படி இருந்திருப்பான்? அவனது போர்க்கோலம், சீருடை எப்படி இருந்திருக்கும்? அவனது மறப்போரிடும் பண்பு அவனிடம் எவ்வாறு வெளிப்பட்டிருக்கும்? அவன் மனஉணர்வு, இயல்பு எத்தகையது?

ஔவையார் இவற்றைப் படம்பிடித்துத் தருவதுபோல் பல பாடல்களில் புனைகின்றார். அவற்றுள் ஒரு பாடல், அவன் போர்க்களத்தில் இருந்த நிலையிலேயே, மகன் பிறந்ததாகக் கேள்விப்பட்டு, மகிழ்ச்சியுடன் வீடு திரும்பி, தன் தவமகனைப் பார்ப்பதைப் பற்றியது.

போர்க் கோலத்தைக் களையாமலும் போரிற்சிவந்த கண்கள் மாறாமலும் அவன் வந்து நிற்கின்றான். தன் மகனைக் கண்டதும், பகைவரைச் சினந்து – சிவந்து பார்த்த கண்கள் மாறியிருக்கவேண்டுமே. ஆனால் அவை மாறவில்லை. சினம் தவிர்ந்த நிலையிலும் சிவந்த கண்ணின் நிறம் மாறவில்லை. நல்ல படப்பிடிப்பு இது.

**கையதுவேலே காலன புனைகழல்**
**மெய்யது வியரே மிடற்றது பசும்புண்**
**வட்கர் போகிய வளரிளம் போந்தை**
**உச்சிக் கொண்ட ஊசி வெண்தோட்டு**

வெட்சி மாமலர், வேங்கையொடு விரைஇச்
சுரிஇரும் பித்தை பொலியச்சூடி
வரிவயம் பொருத வயக்களிறுபோல
இன்னும் மாறாது சினனே, அன்னோ
உய்ந்தனர் அல்லர்இவன் உடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்தன்
சிறுவனை நோக்கியும் சிவப்பா னாவே (100)

இவன் கையின்கண் வேல் உளது; காலின்கண் வீரக்கழல் உளது. உடம்பின்கண் வியர்வை உளது; கழுத்தின்கண் பசிய புண் உளது. பகைவரை வெல்லுவதற்கு அடையாளமான, வளரும் இளம் பனைமரத்தின் உச்சியிலிருந்து கொண்டதாகிய, ஊசி போன்ற வெள்ளை நிறத்தோட்டினையும் வெட்சியினது பெரிய மலரினையும் வேங்கைப்பூவுடன் கலந்து, சுருண்ட கரிய தலைமுடி பொலியச் சூடியுள்ளான். புலியுடன் பொருதவலிமை வாய்ந்த யானையைப் போல அவன் சினம் இன்னமும் நீங்கவில்லை. இவனைக் கோபங்கொள்ளச் செய்தவர்கள், தப்பினாரல்லர். பகைவரைப் பார்த்துச் சிவந்த இவனது கண்கள் தன் புதல்வனைப் பார்த்தும் அச்சிவப்பு மாறாவாயின.

செறுவர் நோக்கிய கண்தன்
சிறுவனை நோக்கியும்சிவப் பானாவே

என்ற அடிகள் உருத் தோற்றத்தை விளைவிக்கும் மிக உயர்ந்த ஓவியப் புனைவாகும்.

## 57

## சிறுமதியன் கையில் பேரரசு

சில சமயங்களில் சிறுமதியுடைய சிறியவன் கையில் பேரரசாட்சி சிக்கிவிடும். அன்றும் இன்றும் இவ்வாறு தகுதியில்லாதவன் ஆட்சிப் பீடத்தில் ஏறி அமர்ந்து விடுவான். பிறகு அதைவிட்டு அவனும் போகமாட்டான்; அவனை விரட்டவும் முடியாது.

அவனுக்கு அரசாட்சி என்பது சிறப்பற்றுப் பெருஞ்சுமையாகி விடும். கண்டபடி செலவழித்து, குடிமக்களிடம் மீண்டும் மீண்டும் வரிக்குப் போய் நிற்பான்.

இதனை மக்களிடம் இரந்து நிற்றல் – பிச்சை எடுத்தல் என்று பெரியோர்கள் நகையாடி உள்ளனர். விழுமிய பண்புகளையுடையவனிடம் அமையுமாயின், அது வாடிய நெட்டித் தட்டையைவிட மிக மென்மையுடையதாகும். அரசாட்சி குழப்பமின்றி எளிதாக, நல்லவழியில் நடைபெறும்.

சோழன் நலங்கிள்ளி பாடிய பாட்டு இது. ஓர் அரசனே தன் பட்டறிவின் மூலம் இவ்வாறு சொல்லமுடியும். பண்பற்றவனிடம் அரசாட்சி, குடிவழி முறையால் கிடைத்துவிடுவதுண்டு. மூத்தவர்கள் சாகவே, இளையவன் எதிர்பாராது ஆட்சிக்கு வர நேரலாம். அதாவது அவனுக்கு அது பரம்பரையால் வந்ததேயன்றி தகுதியுடைமையால் வந்ததன்று. அரசர் பரம்பரை ஆட்சியில் நேர்ந்துவிடும் குறை இது.

மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழவிறல் தாயம்
எய்தின மாயின் எய்தினம் சிறப்பெனக்
குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின்அது சிறந்தன்று மன்னே
மண்டுஅமர்ப் பரிக்கும் மதனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவ னாயின் ஆழ்நீர்
அறுகயம் மருங்கின் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தா லம்ம தானே, மையற்று
விசும்புற ஓங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழுதிருவே (75)

மூத்தவர்களை ஒவ்வொருவராகக் கூற்று கொண்டுபோகவே, முறைப்படி (விதிவசமாக) வந்த, பழைய வெற்றியையுடைய அரசுரிமையை ஒருவன்

பெற்றானாயின், அத் தலைமைப் பொறுப்பைப் பெற்று விட்டதற்காக அவன் தருக்குக் கொள்வான். குடிகளிடம் வரி கேட்டுப் போய் இரந்து (பிச்சைகேட்டு) நிற்பான். அறிவுக் கூர்மையும் ஆளுமையுமில்லாத சிறியோன் பெறின் அவ்அரசாட்சி, சிறப்பை இழந்ததாகும். அவனுக்கது சுமையுமாகும். நெருங்கிவரும் போரைத் தாங்கும் வலிமை மிக்கதோளையுடைய விழுமிய சான்றோன் அவ்ஆட்சியைப் பெறின் அது மென்மையுடையதாகும். சிறு குளத்தில் ஆழமான நீர் வற்றிப்போக, சிறிய வெள்ளைநிற நெட்டித்தட்டை, கோடை வெய்யில் வாட்டுதலாலே, வறண்டு உலர்ந்து போவது போல, மிக மென்மையுடையதாகும். வெண்கொற்றக் குடைக்கீழ் ஆளும், முரசுடைய அரசாட்சிப் பொறுப்பாகிய செல்வம் எளிதாகச் சிறப்புறும்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஆள்பவரைப் பொறுத்தது என்ற நலங்கிள்ளி கருத்து இன்றும் பொருந்திவருவதாகும்.

## 58

## சுரவழியின் கொடுமை

முன்பு அடர்ந்த காடுகளிடையே, மக்கள் நடமாடக் கூடியவை காய்ந்து தீய்ந்த மரம் செடி கொடிகளையுடைய வழிகளாகும். மக்கள் தொகை மிகக் குறைவாய் இருந்த காலம் அது. இவ்வழிகளிடையே போவோர், வருவோர் மிகக் குறைவே.

அகத்திணைப் பாடல்கள் காதல் பற்றியன. ஆனால் காதலனை இழந்த தனிமகள் பற்றியோ, கணவனை இழந்த மனைவி பற்றியோ அகத்திணையுள் பாடல்கள் இடம்பெறா. அவ்வாறு வருவன புறத்தில் சேர்க்கப்படும்.

சுரவழியில் காதலனை அல்லது கணவனை இழந்தவள் வருந்துவது முதுபாலை என்றும் மனைவியை இழந்து கணவன் வருந்துவது தபுதாரநிலை என்றும் மனைவி தன் கணவனை இழந்து வருந்துவது தாபத நிலை என்றும் தொல்காப்பியராலேயே குறிக்கப்படுகின்றன.

வன்பரணர் பாடிய ஒரு பாடல், சுரவழியில் கணவனை இழந்து,

காப்பார் யாருமின்றித் தனிமகள் புலம்பும் காட்சியை, மெய்ப்பாடு தோன்றக் காட்டுகிறது. அவள் அழுது அரற்றுகிறாள்.

ஐயோ என்று கூக்குரலிடலாம் என்றால், அவ்ஒலியைக் கேட்டுப் புலி வந்து தாக்கக் கூடும் என்பதால் அச்சமாக இருக்கிறது. அணைத்துத் தூக்கிக் கொண்டு போகலாமென்றால், அகன்ற மார்பையுடைய உன்னைத் தூக்கமுடியவில்லை. உன்னைச் சாகச் செய்த அறனில்லாத கூற்று, என்னைப் போல் துன்புற்று நடுக்கமுறுவதாக! நாம் மலையின்கண் நிழலுள்ள இடம் நோக்கிச் செல்வோம், என் வளைவரிசையுள்ள முன்கையைப் பற்றிக் கொண்டு, ஐய சிறிது நடப்பாயாக!

ஐயோஎனில்யான் புலியஞ் சுவலே,
அணைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்
என்போல் பெருவிதிர்ப்பு உறுக; நின்னை
இன்னாது உற்ற அறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழல் சேர்கம், நடத்திசின் சிறிதே (255)

ஐயோ எனத் தொடங்கும்போது, அழுகை மெய்ப்பாடு அமையப் பாடியிருப்பது, அன்றைய இலக்கியம் எத்துணை வளர்ச்சி பெற்று, முதிர்ச்சி அடைந்திருந்தது என்பதைக் காட்டுகிறது.

## 59

## பார்ப்பானின் சொல்லாற்றல்

மதுரை வேளாசான் அரசர்களிடையே பார்ப்பான் தூது சென்றமை குறித்துப் பொதுவாகப் பாடியுள்ளார். அது பார்ப்பானின் சொல்லாற்றலை விளக்குகிறது.

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்கு
சொல்லிய சொல்லோ சிலவே, அதற்கே
ஏணியும் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையும் மணிகளைந் தனவே (305)

பசலைக் கொடி போன்ற வாடிய இடுப்பு; தளர்ந்த நடை; இளமை. இவற்றையுடைய பார்ப்பான் இரவுப் போதில் வந்து சில சொற்களே பேசினான். அதற்கே மதிற்கருவிகளாகிய ஏணியும் சீப்பும் மாற்றப்பட்டன. போர்வல்ல யானைகளின் மணிகளும் கழற்றப்பட்டன. (முற்றுகை கைவிடப் பட்டது)

இதிலிருந்து அன்றும் பார்ப்பனருக்கு இருந்த திறமையும் மதிப்பும் புலனாகும்.

## 60

## எளிமையை விரும்பும் சிவன்

கடவுளர் அடியவரிடம் தங்கம், வைரம், முத்து என ஏதேதோ கேட்பதாகக் கூறி, இன்று திருக்கோயில்கள் பணம் குவியும் இடமாக மாற்றப்படுகின்றன. திரு.வி.க. நிதி சேருமிடத்தில் நீதி நிலைக்காது என்பார். கபிலர் எருக்கம் பூமாலையையும் வேண்டாம் என்னாது ஏற்கும் சிவனை, பாரி வள்ளலுக்கு ஒப்பிடுகிறார். எளிமையைத் திரும்பத் திரும்ப நினைப்போம்.

நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்க மாயினும், உடையவை
கடவுள் பேணேம் என்னா ஆங்கு,
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரிகைவண் மையே (106)

மலர்களில் நல்லனவும் தீயனவுமல்ல, குவிந்த புல்லிய எருக்கம்பூந் துணராயினும் கடவுள் – சிவன், அடியவனிடம் உள்ளவற்றை, வேண்டாம் என்று மறுக்கமாட்டார். அதைப் போல அறிவற்றவரும் எளியவரும் சென்றாலும் பாரி பரிசில் நல்கும் கொடைப் பண்புடையவன்.

எருக்கம் பூ மாலை சிவனுக்குரியது. மணமற்ற மலர்களே அல்லாமல் புல்லிய எருக்கம் மாலையே யாயினும் அடியவன் தருவதை, இறைவன் ஏற்பான். இன்று பக்தியினால் புண்ணியத்தை, கடவுளிடம் வாங்க நினைப்பவர்கள் படிக்கவேண்டிய பாடல் இது.

---

## கற்பகம் பல்கலைக் கழகம்

ஈச்சநாரி அஞ்சல், கோயம்புத்தூர் 641 021

•

செவ்விலக்கியக் களப் பயிற்சித் தொடர்
Training in Classical Thamizh Literature

சான்றிதழ் வகுப்பு
Certificate Course

•

புறநானூறு தமிழின வரலாற்றுக் களஞ்சியம்
நாகரிகப் பண்பாட்டுக் கருவூலம்
புலவர்தம் பெருமித வாழ்வுப் படத்தொகுப்பு
மன்னர்களின் பன்முகச் சிறப்புப் பதிவுகள்
புலவர் புரவலர் தொடர்புபற்றிய அரிய காட்சிகள்
நிலைபெற்ற வாழ்க்கை விழுமியங்கள்
பழங்கால மக்களின் வாழ்வுநெறிகள்
அனைத்தும் அடங்கியது இந்நூல்

இவை தொலைக்காட்சித் தொடர்களாதல் வேண்டும் - திரைப்படக் கருவாதல் வேண்டும் - இவற்றிலிருந்து தமிழர்தம் வரலாற்றுப் பதிவுகளை எடுத்து - குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அறியுமாறு நூற்றுக்கணக்கான நூல்கள் தோன்ற வேண்டும்.

தொடர்பு கொள்க

தமிழ்த்துறைத் தலைவர்
**கற்பகம் பல்கலைக் கழகம்**
கோயம்புத்தூர் 641 021

**தமிழண்ணல்**
ஏரகம், சதாசிவநகர்
முதன்மைச் சாலை
மதுரை 625 020